22 Years

கனடாவின் மூத்த தமிழ் இதழ்

# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978



RBC Insurance

இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை

உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்

Jey Ahamparam P.F.P

Insurance Advisor

RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்

(Specialized in RBC Insurance)



அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.

Call: 416.301.1733

Join Our Brokerage Real Estate Needs



Raja Mahendran, P.Eng.

416.315.9397



நதி 22 பாலம் 02 சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம் JANUARY 15, 2012


# அறிக்கையை விட செயற்திட்டமே வேண்டும் - கனடா

இலங்கை அரசின் கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை (LLRC) தொடர்பாக கனேடிய பிரதமர் சார்பில் கருத்து தெரிவித்த அன்ரூ மக்டூகொல் (Andrew MacDougall) அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள சொற்களால் பிரயோசனம் இல்லை. அந்த அறிக்கையை செயற்திட்டமாக்கி நடைமுறைப்படுத்த வேண்டும் என ஜனவரி 12, 2012 இல் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் இலங்கை அரசு முன்னேற்றகரமாக ஏதாவது செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் என நாம் எதிர்பார்க்கின்றோம். அவ்வாறு ஒன்றையும் இலங்கை அரசு செய்யாவிட்டால் 2013 இல் இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் கனடா கலந்து கொள்ளமாட்டாது என்ற எமது கொள்கையில் உறுதியாக இருக்கின்றோம் என்றார்.



ஜனவரி 12, 2012 இல் வெளிவிவகார அமைச்சர் ஜோன் ஃபெயர்ட் (John Baird) தெரிவிக்கையில் இலங்கை அரசின் நடவடிக்கைகள் நடந்தவற்றில் எதற்கும் பொறுப்பு ஏற்பதாகவோ அல்லது ஏதாவது முன்னேற்றகரமான செயற்திட்டங்களை அமல்படுத்தி தமிழ் மக்களின் நம்பிக்கையை பெற முயற்சிப்பதாகவோ தெரியவில்லை என்றார். இலங்கை அரசு ஒரு நல்ல விளைவை தரக்கூடியதான முன்னேற்றகரமான ஒரு நடவடிக்கையை உடனடியாக எடுக்கவேண்டும். இலங்கையில் இரண்டு போரிட்ட பகுதியாலும் நடைபெற்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகளை ஒரு சுதந்திர விசாரணை நடைபெறுவதன் மூலம் வெளிக்கொணர வேண்டும் என நாங்கள் தொடர்ந்தும் வற்புறுத்தி வருகின்றோம் என்றார்.

ஜோன் ஃபெயர்ட் மேலும் தெரிவிக்கையில் இலங்கை அரசு தனிமனித சுதந்திரம் (Principles of Freedom), ஜனநாயகம் (Democracy), மனித உரிமை (Human Rights) மற்றும் சட்ட


தொடர்ச்சி 02ஆம் பக்கம்


## அனைவருக்கும் உளம் கனிந்த தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



## பொங்கல் வாழ்த்து

சூரியன் மகர ராசியினுள் செல்வதால் தை மாதம் பிறக்கின்றது. தமிழர்கள் பல ஆயிரம் ஆண்டுகளாக இந்த தை மாதப் பிறப்பை தைப்பொங்கல் ஆக கொண்டாடி மகிழ்கின்றனர். தைப்பொங்கல் முதலில் விவசாயிகள் தங்களது உழவுத்தொழிலுக்கு உதவிய சூரியனுக்கு நன்றி தெரிவிப்பதற்காக கொண்டாடப்பட்டது. புது அறுவடையில் விளைந்த நெல் எடுத்து, அதைக் குற்றி அரிசியாக்கி புதுப்பானையில் பொங்கி சூரியனுக்கு படைப்பதே தைப்பொங்கல் ஆகும். அதைத் தொடர்ந்து அடுத்த நாள் விவசாயிகள் தங்கள் உழவுத்தொழிற்கு உதவிய அடுத்த முக்கிய காரணியான மாடுகளுக்கு நன்றி தெரிவிப்பதற்காக மாட்டுப்பொங்கல் கொண்டாடப்படுகின்றது.

தற்போது தமிழரை குழப்ப முனைந்துள்ள சிலர் தைப்பொங்கலை தமிழர் வருடப்பிறப்பாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் வள்ளுவர் பிறந்தது ஜனவரி 15, 31 (கி.மு) என கற்பனையான ஒரு திகதியை கூறி அன்றில் இருந்துதான் தமிழ் வருடப்பிறப்பை எண்ணவேண்டும் எனக் கூறுகின்றனர். தமிழரது வருடப்பிறப்பான சித்திரை முதலாம் திகதியை மறுக்கும்


தொடர்ச்சி 02ஆம் பக்கம்





Raj A. Rasaratnam
Sales Representative
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc
Real Estate Brokerage*
5215 Finch Ave. E. Suite #203 Scarborough, ON M1S 0C2
*Independently Owned and Operated

RBC Royal Bank®

உங்கள் அனைத்து அடமானக் கடன் தேவைகளுக்கும்

Great Options for all your Mortgage needs

• Lowest interest rates and best prepayment options. • 1st time Home buyers. • Pre-approvals.

சுலபமாக, துரிதமாக குறைந்த வட்டி வீதத்தில் மோட்கேஜ்க்கு அழையுங்கள்

Paskaran K. (Paski) Mortgage Specialist

416.569.3099 /416.288.9855

E-mail: paski.kanagasabapathy@rbc.com

வீடு வாங்கவும் விற்கவும்...

ரவி பரமு

Real Estate Broker

Cell: 416-262-4176

Bus: 416-298-3200

HomeLife/Today Realty Ltd., Brokerage*

31 Progress Ave. Suite 210, Toronto

*Independently owned and operated

Sales & LEASING

MARKVILLE TOYOTA

KUMAR JEGASOTHY

905.294.8100 & 416.798.7234

Cell: 416.451.0565

கவர்ச்சியான உலக தரம் வாய்ந்த பாவித்த புதிய வாகனங்களை தமிழில் உரையாடி மிக மலிவு விலையில் பெற்றுக்கொள்ள அழைக்கவேண்டியவர்

>குமார் ஜெகசோதி<

9 ஆண்டுகள் அனுபவம்

E-MAIL: kjegasothy@markville.com 1.800.828.6585

துரித பணமாற்றுச் சேவை

• 54 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 21 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை

மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்

3228 Eglinton Ave. E. #3 416.267.8221

3351 Markham Rd. #109 416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்

DENTAL OFFICE

DR. Iru VIJAYANATHAN, BDS, FAGD

DENTAL SURGEON

☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்

3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232

3351Markham Rd., #129
Markaham & Steeles
Tel: 416.609.2022

# அறிக்கையை விட...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

ஒழுங்கு முறை (Rules of Law) என்பவற்றை கடைப்பிடிக்க வேண்டும் என்று ஜோன் ஃபெயர்ட் மொன்றியலில் இருந்து வெளியாகும் 'The Gazette' பத்திரிகை தனது ஜனவரி 13, 2012 இதழில் தெரிவித்திருந்தது.

# புதிய கனேடிய தூதரகம்

கனேடிய அரசு 11 மில்லியன் டொலர் செலவில் ஒரு புதிய கனேடிய தூதரகத்தை 6, Gregeory Road, கொழும்பில் நிர்மானிக்கவுள்ளது. இந்த 3500 சதுரமீற்றர் பரப்பளவு கொண்ட புதிய தூதரகத்தை வடிவமைப்பதற்கான கொள்ளவனவு பத்திரங்களை கனேடிய அரசு தற்போது வெளியிட்டுள்ளது. இக்கட்டிட வடிவமைப்பு வேலைகள் ஏப்ரல் 2012 இல் ஆரம்பிக்கப்படவுள்ளன. கட்டிட வேலைகள் ஜுன் 2013 இல் ஆரம்பிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கட்டிட திறப்புவிழா ஜுலை 09, 2015 இல் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ரொறொன்ரோ மாநகர சபை ஊழியர்கள் வேலை ஒப்பந்தம் முடிவு!



2009 ஆம் ஆண்டு நடைபெற்ற ரொறொன்ரோ மாநகரசபை ஊழியர்களது 40 நாள் வேலை நிறுத்தத்திற்கு பின்னர் செய்யப்பட்ட ஒப்பந்தமான 3 வருடங்களுக்கு 6 சதவீத சம்பள உயர்வு கடந்த ஜனவரி 01, 2012 உடன் முடிவடைந்து விட்டது. தற்போது ரொறொன்ரோ மாநகர சபைக்கும் அதன் ஊழியர்களுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தையும் முறிவடைந்து விட்டது.

ரொறொன்ரோ நகரபிதா Rob Ford ரொறொன்ரோ மாநகரசபையின் 50,000 ஊழியர்களின் எண்ணிக்கையை 43,000 ஆக குறைப்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கின்றார். சம்பள உயர்வையும் ஒரு கோரிக்கையாக வைத்து பேச்சு வார்த்தைகளை செய்த மாநகர சபை ஊழியர்களுடைய சங்கம் தற்போது பேச்சுவார்த்தை முறிவடைந்தவுடன் தாங்கள் எதுவித சம்பள உயர்வும் இல்லாமல் அடுத்த மூன்று வருடங்களுக்கு வேலை செய்யத்தயார் என அறிக்கை விட்டுள்ளனர். அவர்களது குறிக்கோள் தற்போது ஒருவரும் வேலை நீக்கம் செய்யப்படாமல் பழைய ஒப்பந்தம் புதுப்பிக்கப்பட வேண்டும் என்பதாகும். ஆனால் வேலை நிறுத்தம் ஒன்று வந்தால் ஒரு புதிய ஒப்பந்தம் 43, 000 ஊழியர்களுடன் எழுதலாம் என ரொறொன்ரோ நகரபிதா எதிர்பார்ப்பதாக ரொறொன்ரோ ஸ்ரார் செய்தி வெளியிட்டுள்ளது.

# பொங்கல்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

இவர்கள் கூறும் காரணங்களில் ஒன்று தை முதலாம் திகதி தமிழர்களுடையது. ஆனால் சித்திரை முதலாம் திகதி ஆரியருடையது என்பதே. தை முதலாம் திகதியும் சித்திரை முதலாம் திகதியும் கணிப்பது ஒரே வான சாத்திர கணித முறைப்படியே என்பது இவர்களுக்குத் தெரியாதா? தை முதலாம் திகதி தமிழருடையது எனில் சித்திரை முதலாம் திகதியும் தமிழருடையதே. பிரித்தாளுவதில் வல்லவர்களான ஆங்கிலேயர் இந்தியா சுதந்திரம் பெற வேண்டிப் போராடிய தமிழர்களை (பெரும்பாலானோர் படித்த பிராமணர்களாக இருந்தனர்) பிரிக்க முற்பட்டே 1921 இல் பிராமணர்களுக்கும், இந்துக்களுக்கு எதிராக சிலர் மூலம் பிரகடனப்படுத்தியதே இந்த வள்ளுவர் பிறந்த கற்பனை திகதியும், தமிழ் புத்தாண்டுக் கதையும் ஆகும். இந்த ஏமாற்றுவித்தை இதுவரை தமிழரிடம் பலிக்கவில்லை. இப்போது சிலர் மீண்டும் அதை திரும்பிக்கொண்டுவர முயற்சிக்கிறனர். ஒற்றுமையாக உள்ள தமிழினத்தை பிரிக்க எடுக்கும் முயற்சியாகவே இதனை கருத முடியும்.

# பொங்கித் ததும்புக
# ஈழத்தமிழர்க்கு புதுவாழ்வு!




காடு கொடுத்து கழனியாக்கி
மாடு கன்று உதவியுடன்
பாடு பட்டு நெல் விளைக்கும்
நாடு போற்றும் விவசாயி
சூடும் மழையும் தருகின்ற
பீடு மிக்க ஆதவற்கு
கூடுமன்பின் மிகுதியினால்
வீடு முன்றில் பொங்கல் செய்வான்

சேற்றில் கால்கள் பதித்திட்டு
நாற்று நட்டு பசளையிட்டு
ஊற்று நீரால் பயிர் வளர்க்கும்
ஆற்றல் மிக்க விவசாயி
சோற்று அமுது அளிக்கின்றான்
ஏற்றமுடைய தொழில் உழவாகும்
சாற்றிடுவோம் அவன் பெருமை
போற்றி வணங்குவோம் அவன் பாதம்

நன்றி மறவார் உயர்வுடையர்
என்ற பண்பினை உலகினர்க்கு
என்றோ உணர்த்திய தைப்பொங்கல்
இன்று வரையும் தொடர்கிறது
சென்று உலகெங்கும்முள தமிழர்களும்
மன்றில் பொங்கல்விழாச் செய்வர்
நன்றே செய்யும் பரோபகார குணத்தால்
குன்றாய் விளங்குகிறான் விவசாயி

உயிர் நேயம் உழவனின் சொத்து
பயிர் விளைந்திட நற் துணையாகும்
திமிர் மிக்க காளை மாடுகளுக்கும்
உயிர் தளைக்க உதவும் ஆவினத்திற்கும்
விழா வெடுத்து விருந்து படைத்து
புளகாங்கிதமடைதலே பட்டிப்பொங்கல்
வீட்டிற் கொரு மாட்டுப் பட்டி
ஈட்டி தரும் ஈடில்லா இன்பம்

புதிய பானையில் பால் பொங்கும்
அதிக மகிச்சியால் உள்ளம் பொங்கும்
கதிரவன் ஒளியால் காசினி பொங்கும்
நதி கடல் யாவும் பொங்கிப் பூரிக்கும்
வதிவிடமெங்கும் மங்கலம் பொங்கும்
அதிவிரைவாக அமைதி பொங்கிட வேண்டு
கதியற்று வாழும் ஈழத் தமிழருக்கான
சர்வதேச உதவி பொங்கிட வேண்டும்



நா. க. சிவராமலிங்கம்

விளம்பரம் VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். **பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

**பதிப்பாளர்:** ராஜா மகேந்திரன்
**பத்திரிகை ஆசிரியர்:** சத்தியா மகேந்திரன்
**ஊடகப்பொறுப்பாளர்:** விஜே பாலன்
**தட்டச்சு:** கலா
**அலுவலக முகாமையாளர்:** நிலானி
**பதிப்பு:** *Can Media Publishing Inc.*

*Vlambaram Publications Inc.*
*GTA SQUARE, 5215 FINCH AVE. E., #201, TORONTO, ON M1S 0C2, CANADA*
*TEL: 416-282-8059* *FAX: 416-282-4978*
*e-mail: Vlambaram@sympatico.ca* *Web: www.vlambaram.com*

# வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

*1. Vlambaram Publications Inc., 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2*
*2. Tel.: 416.282.8059* *3. Fax: 416.282.4978*
*4. email: vlambaram@sympatico.ca* *5. web: vlambaram.com*

# கனடிய அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் தைப்பொங்கல் வாழ்த்துச் செய்திகள்







கனடிய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தைப்பொங்கல் வாழ்த்துச் செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

எமது சமூகத்தையும், எமது நாட்டையும் வலுவானதாகவும், வரவேற்கத்தக்க வகையிலும் மறுசீரமைப்பதற்கு இப்பொங்கல் காலமானது ஏதுவாக அமைகின்றது. 'நாம் கடைப்பிடிக்கின்ற பன்முகத்தன்மையினால் நாம் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு நாடாக பலப்படுத்துவதோடு, எமது சமூகங்களின் பண்பாடுகளை சமஸ்டிமுறை ஆட்சியின் மூலம் வேறுபடுத்திப் பேணிப்பாதுகாப்பதன் மூலம் கனடாவானது இன்று உலகத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது' என்று பிரதமர் குறிப்பிடுகின்றார்.

கனடாவின் வளமான மற்றும் பன்முகத் தன்மை கொண்ட வெற்றிக்கு உங்களின் பங்களிபபும் குடியுரிமை குடியேற்றம் மற்றும் பல்கலாச்சார அமைச்சர் என்றமுறையில் எமது அரசாங்கத்தின் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

உங்களின் சிறப்பான இந்நாளில், வளமான பொங்கலுக்கும் அனைத்துக் கனடிய மக்களுடன் ஒன்றிணைந்து எனது வாழ்த்துக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

யேசன் கெனி கொ. க. பா.உ
குடியுரிமை குடியேற்றம் மற்றும் பல்கலாச்சார அமைச்சர்.

உலகெங்கிலும் வாழும், கனடாவிலும் வசிக்கும் தமிழ் மக்களின், தை மாதத்தில் ஆரம்பிக்கும் இந்தப் பொங்கல் திருநாள் சூரியனை வரவேற்பது போன்றது. இந்த விழா புதி யவாய்ப்புக்களையும் நிலச் செழுமையையும் அறுவடையையும் மற்றும் கனடாவில் வாழும் அனைத்து மக்களின் புரிதலில் உள்ள சமூக கலாசாரத்தின் ஒற்றுமையையும் வெளிப்படுத்துகின்றது

பல்வேறு கலாசாரத்தைச் சேர்ந்த மக்கள் கனடாவில் வாழ்கின்றனர். இந்த தைப்பொங்கல் தமிழ்க் கலாசாரத்தை வெளிப்படுத்துகின்றது. லிபரல் கட்சியின் சார்பாக ஓர் அற்புதமான மகிழ்ச்சியான விழ-ாவிற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.

போப் ராய்,
ஒட்டாவா லிபரல் கட்சித்தலைவர்

தமிழர் திருநாளாம் தைபொங்கல் பெருநாளை முன்னிட்டு குறிப்பாக கனடியத் தமிழருக்கும் பொதுவாக உலகலாவிய தமிழருக்கும் கனடிய அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் தைப்பொங்கல் வாழ்த்துச் செய்திகளை வெளியிட்டுள்ளனர். தைப்பொங்கலைக் கொண்டாடும் கனடிய குடும்பங்களுக்கு எனது மகிழ்ச்சி நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றியை தெரிவிக்கும் ஒரு சந்தர்ப்பத்தையும் நாம் தவறக்கூடாது. தரணியெங்கும் வாழும் தமிழர்கள் ஆண்டுதோறும் அறுவடையின் பெருவிழாவாக கொண்டாடுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். நன்றியை காட்டுவது பலத்தையும் துணிவையும் குறிக்கின்றது. கனடிய தமிழர்கள் எமது நாட்டுக்கு ஆற்றும் சேவையை பாராட்ட இத்தைப்பொங்கல் விழாவானது நமக்கெல்லாம் ஒரு சந்தர்ப்பத்தையும் வழங்குகின்றது.

ஸ்ரீபன் வூட்வேர்த்
நாடாளுமன்ற உறுப்பினர்
கிச்சினர் மத்திய பகுதி.

கனடிய தமிழ் சமூகத்தினருக்கு என்னுடைய தைப்பொங்கல் வாழ்த்தைத் தெரிவிக்க விரும்புகிறேன். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது தை மாதம் புதிய பாதைகளைத் திறக்கும் என்பதாகும் அதுவே பொங்கல் காலத்தில் கூறப்படுவது. நீங்கள் உங்களுடைய அன்பிற்குரியவர்களுடன் கூடி பொங்கலை கொண்டாடும் வேளை வருகிற வருடத்தில் உங்களுக்கு உடல்நலமும் செல்வமும் செழிக்க வாழ்த்துகிறேன்.

ஜிம் கரிஜியானிஸ்
பா.உ ஸ்காபரோ எஜின்கோட்

தைப்பொங்கல் விழாவைக் கொண்டாடும் அனைத்துத் தமிழ் சமூகத்திற்கும் எனது உளமார்ந்த பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தமிழ்ச் சமூக உறுப்பினர்களினால் மனித குலத்தின் உயர்ந்த கொள்கைகளை மதிக்கும் காலமாக இவ்வாண்டின் பொங்கல் விழா திகழ்கின்றது. முழுமனித குலத்திற்கும் கடவுளினால் அள்ளி வழங்கப்படும் ஆசீர்வாதங்களுக்காக நன்றிசொல்லும் தின-மாக இப்பொங்கல்விழா விளங்குகின்றது. பகிர்ந்துண்ணல், பெருந்தன்மை மற்றும் நன்மதிப்பளித்தல் போன்ற கலாச்சார நிகழ்வாக இப்பொங்கல் விழாவானது கொண்டாடப்படுகின்றது.

கனடாவில் வாழ்கின்ற பெரிய தமிழ் சமூகமானது தங்களுடைய பெருமைமிகு மரபுகளைக் கட்டிக்காக்கின்ற பருவமாக இக்காலத்தைக் கருதுகின்றது. நாடு முழுவதும் பாரம்பரியம் மிக்க இப்பொங்கலானது மிகவும் மகிழ்சியாகக் கொண்டாடப்படுவதன் மூலம் ஏனைய கனடியச்சமூகங்களிற்கும் இத்தைப்பொங்க லின் வளமான வரலாறானது பகிரப்படுகின்றது.

நம் தமிழ் சமூகத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகள் நல்ல ஒரு கனடாவை உருவாக்குவதற்குரிய பலத்தையளிக்கின்றது. ஒவ்வொரு துறையிலும் நீங்கள் ஆற்றிய அளப்பரிய முயற்சியினால் எங்கள் நாடானது பலபெரிய சாதனைகளை நிகழ்தியுள்ளது. கனடிய அரசின் சார்பாக மகிழ்சி, ஆரோக்கியம் மற்றும் நல்ல அதிர்ஷ்டம் தரக்கூடிய என்னுடைய வாழ்த்துக்களை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

கையில் சீபாக்
பா.உ. பிராம்ரன் மேற்கு.

ப்பறி மாநகர் மக்கள் சார்பிலும் எனது சார்பிலும் தமிழ் மக்களனைவருக்கும் எனது இனிய உளம்கனிந்த பொங்கல் நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளு வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

சூரிய தேவனுக்கு நன்றிகூறும் இவ்விழாக்காலத்தில் உலகத்தமிழர்கள் அனைவரும் தங்களையும், ஏனைய மக்களையும் ஆசீர்வதிக்குமாறு இறைவனை வேண்டி மிகவும் பக்தியுடன் இவ்விழா வினைக் கொண்டாடுகிறார்கள். இப்பொங்கல் விழாவினைக் கொண்டாடுவதன் மூலம் மக்கள் அனைவரும் ஒன்றிணைவதோடு, நல்லெண்ணம் மற்றும் பகிர்தல், உறவாடுதல் வழியாக தங்களுக்கிடையேயுள்ள ஒற்றுமையைப் பலப்படுத்துவதோடு தங்களின் பாரம்பரிய கலாச்சார விழுமியங்களையும் பாதுகாக்க முடியும் என நம்புகின்றேன். எங்களுக்கிடையே பல்வேறு பல்லின கலாச்சார பண்பாடுகளை பகிர்ந்து அனுபவிக்கின்ற இதுபோன்ற சமய கலாச்சார விழாக்களை கனடாவானது வரவேற்று ஏற்றுக்கொள்கின்றது. இப்பொங்கல் விழாவை மகிழ்ச்சியாகக் கொண்டாடும் இவ்வேளை, உங்களுக்கு அமைதியும், நீதியும், நல்வாழ்வும் கிடைக்குமாறும் எனது மனம் நிறைந்த நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பற்றிக் பிறவுண்
நாடாளுமன்ற உறுப்பினர்,

கனடியச் சமுதாயத்திற்கு கனடியத் தமிழர் அர்ப்பணிப்புடன் ஆற்றிய சேவைகளுக்கு நன்றிசொல்வதற்கு இப்பொங்கல் விழாவை ஒரு வாய்ப்பாகக் கருதுகின்றேன். தொழிற்துறை, பண்பாடு மற்றும் கலை-கலாச்சாரம் போன்றவற்றில் கனடா வெற்றி பெறுவதற்கு நீங்கள் உதவியுள்ளீர்கள்.

பல்வேறு கலாச்சார விழாக்களுடன் ஒன்றிணைந்த தைப்பொங்கல் கொண்டாட்ட மானது அறுவடைகாலத்தின் ஆரம்பத்தைக் குறிக்கின்றது. இந்த நேரத்தில் கடந்தகால நினைவுகளை நினத்துப் பார்ப்பதோடு வரும் வசந்தகாலமானது உங்களுக்கும், உங்களின் குடும்பத்தினர்களுக்கும் மற்றும் நீங்கள் நேசிப்பவர்களுக்கும் நல்ல வளமான வாழ்வைக் கொண்டுவரவேண்டும் என வேண்டுகின்றேன்.

கனடியக் குடிமக்களான நாங்கள் பன்முகத்தன்மை, சமாதானம் மற்றும் கலாச்சாரப் பண்புகளைக்கொண்ட ஒரு நாட்டில் வாழ்வதற்கு கொடுத்து

தொடர்ச்சி 08ஆம் பக்கம்

**APPLEMORE AUTOMOTIVE**

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

**416-285-4998**

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# கதவு திறந்தே இருக்கிறது



## சத்குரு வாசுதேவ்

யோக மரபில் உலகைப் படைத்தவராக கடவுளைப் பார்ப்பதில்லை. பிரபஞ்சத்தின் மூலமென்று அவரைக் காட்டுவதில்லை. வாழ்வின் விதையாக இறைவனை சுட்டுவதில்லை. கடவுள் என்பவர் வாழ்வின் மலர்ச்சி. யோக மரபில் கடவுள் தன்மையின் குறியீடாக மலர் காட்டப்படுகிறது. ஏனெனில் ஒருவருக்கு நிகழக்கூடிய உச்சகட்ட மலர்ச்சியே கடவுள்தான்.

நீங்கள் எங்கிருந்து வந்தீர்கள் என்பதில் யோகா அக்கறை செலுத்துவதில்லை. எங்கே போகப் போகிறீர்கள் என்பதில்தான் அது அக்கறை காட்டுகிறது. ஆனால் ஒன்று என்னவாக இருக்கிறது என்பதிலிருந்துதான் அது என்னவாகப் போகிறது என்பதைப் பார்க்க முடியும். அதற்காகத்தான் இப்போதைய நிலையிலிருந்து தொடங்குகிறோம். என்னவாக இருந்தது, என்னவாக இருக்கிறது என்பதையெல்லாம் விட என்னவாகப் போகிறது என்பதில்தான் கவனம் அதிகம் தேவை.

எல்லோரும் கடவுளை தந்தையாகப் பார்க்கிற போது யோக மரபு அப்படிச் சிந்திப்பதில்லை. மாறாக, உங்களுக்குள் உருக்கொள்ளக்கூடிய தன்மையாக கடவுளை உணர்த்திக் காட்டுகிறோம். உங்களுக்குள் அதனை வளர்த்தால் உங்களுக்குள்ளேயே அது உருப்பெறும். நீங்கள் வளர்த்தெடுக்கவில்லை என்றால் உங்களுக்குள் ஒரு விதையாக மட்டும் அது நிலைத்திருக்கும்.

எனவே யோகக் கலையின் அறிவியலைப் பொறுத்தமட்டில் ஆன்மீகம் என்று நாம் அழைப்பதெல்லாம் விதையை வளர்த் தெடுத்து மலரச் செய்வதுதான். ஒரு மலரின் அழகுக்கும், நறுமணத்திற்கும் முக்கியத்துவம் தருவதால், ஒரு கனியின் இனிமைக்கும், செழுமைக்கும் முக்கியத்துவம் தருவதால் விதை நமக்கு முக்கியமாகிறது.

இல்லையென்றால், விதையை நாம் பொருட்படுத்தவே மாட்டோம்.

நீங்கள் ஆன்மீகப் பாதையில் நடையிடுகிறீர்களென்றால் உண்மையைத் தேடுகிறீர்கள் என்றுதான் பொருள். ஆனால் என்ன விதமான உண்மையைத் தேடுகிறீர்கள் என்பதும் முக்கியம். கோயில், தேவாலயம், மசூதி, ஆசிரமம் என்று பலவித மான இடங்களுக்கு மனிதர்கள் செல்கின்றனர். ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான உண்மையை எதிர்நோக்கிச் செல்கின்றனர். பயன்தரும் வரையில் தாங்கள் தேடுவது என்ன விதமான உண்மை என்று யாரும் பொருட்படுத்துவதில்லை.

ஆனால், யோக மரபில் முன்னெடுத்து செல்லும் விஷயம் இதைப்போன்று பயன்தரக்கூடியது அல்ல. இது அனைத்தையும் தலைகீழாக திருப்பிப் போடக் கூடியது. வாழ்வில் ஏதோ ஒன்றை சாதிக்க வேண்டும் என்பவர்களுக்கான பாதை அல்ல அது. தானற்றுப் போக வேண்டும் என்று எண்ணுபவர்களுக்கான வழி. வெல்ல வேண்டும் என்று எல்லோருக்கும் ஆசை. வெல்லப்பட வேண்டும், சரணடைய வேண்டும் என்று யாருக்கு ஆசை? உலகியல் பாஷையில் ஒரு முட்டாளுக்குத்தான் அப்படி ஆசை வரும் என்பார்கள். ஆனால் தானற்றுப் போக வேண்டும், சரணடைய வேண்டும் என்று ஆசைப்பட்ட "முட்டாள்களின்" மிக நீண்ட பட்டியல் நம் பாரம்பரியத்தில் உண்டு. ஆணவம் மிக்க மனிதர்களாக இல்லாமல் வெறும் மண்ணைப்போல் இந்த பூமியில் வாழ விரும்பியவர்கள் அவர்கள். உலகியல் வாழ்க்கைக்கு அவர்கள் பொருந்த மாட்டார்கள் என்று புரிந்ததால் சிவன் அவர்களை அரவணைத்துக் கொண்டார்.

கண்மூடித்தனமான அர்ப்பணிப்பு உணர்வு காரணமாகவே அவர்கள் கருணைக்கு ஆளானார்கள். சாமர்த்தியத்தோடும், சக்தியோடும் மனிதர்கள் செயல்பட்டாலும் கதவுகள் திறக்கும். கருணையின் பேராலும், பரிவின் பேராலும் கூட கதவுகள் திறக்கும். தான் என்னும் முனைப்பு துளியும் இல்லாமல் தவழ்ந்து போக நேர்ந்தாலும் கூட தாண்டிப்போக வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். வெட்கம், கோபம், பொறாமை, அகங்காரம் என்று எதுவுமே இல்லாதவர்களால் உச்ச நிலையை எளிதில் எட்ட முடிந்தது. ஆமாம். அவர்களால் மட்டுமே எட்ட முடிந்தது.

ஓர் இந்தியனுக்கு முறையான வழிபாட்டு இடம்கூட அவசியமில்லை. கண்ணெதிரே காணும் எதனையும் அவனால் கடவுளாக்க முடியும். இது ஓர் அற்புதமான தொழில்நுட்பம். அபாரமான உற்பத்தி திறன். கல்லின் ஒரு பகுதியை அவன் கடவுள் என்று அறிவித்துவிட்டால் அடுத்த நாளே ஆயிரக்கணக்கானவர்கள் அந்தக் கல்லை வலம் வந்து வழிபட்டுக் கொண்டிருப்பார்கள். இதில் எதைத் தொழில்நுட்பம் என்கிறேன் என்றால் ஒரு கல்லைக் கூட விழுந்து வணங்க அவன் மனம் தயாராக இருப்பதைத்தான். அளவு கடந்த அர்ப்பணிப்புணர்வோடு ஒரு கல்லையும், குச்சியையும், மலரையும், விழுந்து வணங்கும் இந்த எளிய அர்ப்பணிப்புணர்வு என்னும் தொழில்நுட்பம்தான் இந்தியாவை எல்லாம் கடந்த நிலைக்கு எண்ணற்றவர்களை ஏற்றுமதி செய்யும் நாடாக ஆக்கியது.

இதனால்தான் இந்த மண்ணிலும், இந்த பாரம்பரியத்திலும் தன்னை உணர்ந்தவர்கள் எண்ணிலடங்காதவர்கள் என்னும் அளப்பரிய ஆசிர்வாதம் கிடைத்தது. இது உலகில் வேறெங்கும் இல்லை. ஏனென்றால் ஏதாவதொன்றை வணங்க வேண்டுமெனில் அதற்கென்று அவர்களுக்கு சில நிபந்தனைகள் இருந்தன. ஆனால் புழு பூச்சியிலிருந்து மரம் மட்டை வரை எதையும் வணங்க நீங்கள் தயாராகும்போது உங்களுக்கு எந்தவோர் எல்லையும் இல்லை. பரம்பொருளை உணர பல லட்சம் வாய்ப்புகள் உங்களுக்கு! இவற்றில் ஏதாவதொன்றில் உங்களுக்கான வழி திறக்கலாம். இந்தக் கதவுளை உங்களால் தட்ட முடியாது. ஏனெனில் இந்தக் கதவுகள் திறந்தே இருக்கின்றன. மூடியிருக்கும் கதவைத்தான் நீங்கள் தட்ட வேண்டும். ஆனால் இங்கே எல்லாக் கதவுகளும் திறந்தே இருப்பதால் அது எங்கே இருக்கிறது என்பதையே நீங்கள் உணர்வதில்லை.

தட்டுவதால் கதவு திறக்கிறது என்றால் அதில் ஒருவிதமான போட்டி இருக்கிறது. தட்டியது நீங்கள். திறந்தது யார்? கண்டிப்பாக கடவுள்தான். கடவுளின் மகன் தச்சராக இருந்ததுண்டு. ஆனால் தச்சுத் தொழிலைக் கற்றுக் கொள்ளவில்லை. எனவே கதவுகளை அவர் அமைக்கவில்லை.

தட்ட வேண்டிய தேவை இல்லாமல் திறந்தே இருந்ததால்தான் நீங்கள் கண்டுபிடிக்க வில்லை. மூடி வைத்திருந்தால் முட்டி மோதி இருப்பீர்கள். கண்ணெதிரே இருந்ததையும் நீங்கள் காண மறந்ததால்தான் யோகிகள் உங்களை தலைகீழாக நிறுத்தினார்கள். ஏனென்றால் வசதிக்குறைவான நிலைகளில் உங்களால் உண்மையை உணர முடியும். ஒரு குறிப்பிட்ட பயிற்சியை எப்படிச் செய்கிறீர்கள் என்பதைவிட என்ன மன நிலையில் செய்கிறீர்கள் என்பது மிகவும் முக்கியம்.

என்னவிதமான உண்மையை நீங்கள் தேடுகிறீர்கள் என்று கேள்வியைப் பாருங்கள். உண்மை என்ற சொல்லுக்கே ஏற்கெனவே இருப்பது என்றுதான் பொருள். அது நீங்களோ, நானோ உருவாக்கக் கூடியதல்ல. இருப்பதை உணர்வது என்றால் விழிப்பு நிலைக்கு வருவது. நீங்கள் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்கிறீர்களென்றால் உங்களை சற்றே உலுக்கி எழுப்ப வேண்டும். உங்கள் குழந்தைகளை உறக்கத்திலிருந்து எழுப்ப முயலும்போது நீங்கள் பார்த்திருப்பீர்கள் சற்றே உலுக்கினால் இன்னொரு பக்கம் திரும்பி படுத்துக் கொள்வார்கள். ஜன்னல்களைத் திறந்தால் இன்னொரு பக்கம் திரும்பி படுத்துக் கொள்வார்கள். அவர்களை நன்றாக உலுக்கித்தான் எழுப்ப வேண்டும்.

ஒருவரை உறக்கத்திலிருந்து எழுப்ப தீவிரமான வழிகளைக் கையாள்வது அவருடன் உங்களுக்கிருக்கும் உறவின் ஆழத்தைப் பொறுத்தது. அந்த உறவு ஆழமாக இல்லாத பட்சத்தில் தலையில் தண்ணீரைக் கொட்டியோ, பழுக்கக் காய்ச்சிய இரும்பால் இழுத்தோ, எழுப்ப முற்பட்டால் அவருடனான உறவை நீங்கள் இழந்து விடக்கூடும். அந்த உறவு ஆழமானதாக இருந்தால் நீங்கள் என்ன செய்தாலும் ஏற்றுக் கொள்வார்கள்.

துரதிருஷ்டவசமாக அத்தகை ஆழமான உறவுகளை உருவாக்குவது இந்தக் காலங்களில் அத்தனை எளிதல்ல. பழைய பாரம்பரியச் சூழலில் குருவின் வருகை நிகழும் முன்பே அவருடனான உறவு ஆழமானதாக இருக்கும். அவர் வருகை நிகழும்போது அவருடைய பணி மிக எளிதாக முடிந்து விடும். அத்தகைய சூழல் இப்போதில்லை. இந்த உறவை மெள்ள மெள்ள உருவாக்க வேண்டி இருக்கிறது. கூடுதலாக ஒரு வார்த்தை சொன்னாலும் மனிதர் விலகி விடுவர்.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

ஒரு முறையைப் பின்பற்றுவது என்று நீங்கள் முடிவு செய்தால், உங்கள் மனதை தயார் படுத்திக் கொள்ள வேண்டும். அப்போதுதான் அந்த முறை பயன்தரும். எல்லா நிலைகளிலும் நிபந்தனைகளையும் மாற்று வழிகளையும் உருவாக்கிக் கொண்டே போனால், அதனால் ஏற்படும் பாதிப்புகள் மிகக் கொடுமையானவையாக இருக்கும். உங்கள் மரணத்தின் பிறகும் கூட அவை உங்களை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

எனவே, உங்கள் ஆன்மீகப் பாதையை ஒரு வழிமுறையாகக் கைக் கொள்ளப் போகிறீர்களா? அல்லது மரணத்திற்குப் பிறகும் தொடரும் போராட்டமாக ஆக்கிக் கொள்ளப் போகிறீர்களா? என்பது உங்கள் கைகளில்தான் இருக்கிறது.

ஸ்பெயின் நாட்டின் எல்கிரெக்கோ என்று ஓர் ஓவியர் இருந்தார். ஒருநாள் எல்லா ஜன்னல்களையும் சாத்திக் கொண்டு வீட்டில் அமர்ந்திருந்தார். அவரைத் தேடி வந்த நண்பர் ஒருவர், "இந்த நாள் மிகவும் அற்புதமாக இருக்கிறது. ஏன் வீட்டிற்குள்ளேயே இருக்கிறீர்கள்? வெளியே போவோம் வாருங்கள். இல்லையென்றால் ஜன்னல்களையாவது திறந்து வையுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். அதற்கு எல்கிரெக்கோ "எனக்குள் இருக்கும் வெளிச்சம் ஒளிவீசிக் கொண்டிருக்கிறது. வெளியில் இருந்து வரும் வெளிச்சம்

தொடர்ச்சி 08ஆம் பக்கம்



வாங்க மோட்கேஜ் பற்றி பேசலாம் ! !

# மோட்கேஜ் கிளினிக்

**சனிக்கிழமை வோக் - இன் 9.00 am - 5.00 pm வரை**

## 2 Yr Fixed Rate - 2.59%

( OAC )

தற்பொழுது நீங்கள் வைத்திருக்கும் மோட்கேஜ்
செக்கன்ட் மோட்கேஜ் , லைன் ஒவ் கிரடிட்
எல்லாத்தையும் ஒரு பேமன்ராக மாத்தலாமா ? ?

கொன்சுயுமார் புரபோசலுக்கு கட்ட வேண்டிய காசை
வீட்டுக்குளிருந்து எடுத்து கட்டலாமா ?

நல்ல றேட்டில மோட்கேஜ் இருக்கு ஆனால் பிரேக்
பண்ணாமல் கொஞ்ச காசு எடுக்கலாமா ?

வேற என்னென்ன கடனை ஒரே பேமன்ராக மோட்கேஜுடன் சேர்க்கலாம் ?

சாமத்திய வீட்டுகடன் சீதனகாசுக்கடன்

மகளின்ர அரங்கேற்ற கடனை மறந்திட்டேனா ? ?

வந்துபேசிப்பாருங்கோ!! பிடிச்சிருந்தா ........... மேல பேசுவம்

அழையுங்கள்



## 416-644-3555

22 ⇐ Ext ⇒ 28

**CENTUM Rapid Mortgages Inc.**

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4



**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ. இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Team Leader & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

HOME TRUST EQUITABLE TRUST FirstLine MORTGAGES TD Scotiabank CIBC

# விளையாட்டுத் தகவல்கள் 321

## ஐ.ஐ.சி. டெஸ்ட் தரவரிசை: 2-வது இடத்தையும் இழக்கிறது இந்தியா

டெஸ்ட் கிரிக்கெட் தரவரிசையில் இப்போது இரண்டாவது இடத்தில் உள்ள இந்திய அணி அந்த இடத்தை தென்னாபிரிக்காவிடம் இழக்க இருக்கிறது. அவுஸ்திரேலியாவுக்கு எதிரான அடுத்த இரு டெஸ்ட் போட்டிகளை வென்று டெஸ்ட் தொடரை சமநிலை செய்தாலும் இந்தியா 2-வது இடத்தை இழப்பது உறுதி. அதே நேரத்தில் அவுஸ்திரேலியா 4-0 என்ற கணக்கில் டெஸ்ட் தொடரை வென்றால், இந்தியாவும் அவுஸ்திரேலியாவும் ஏறக்குறைய ஒரே தரவரிசைப் புள்ளியில் இருக்கும். ஆனால் மிகச்சிறிய வித்தியாசத்தில் இந்தியா 3-வது இடத்தைப் பிடிக்கும். அவுஸ்திரேலியா தொடர்ந்து 4-வது இடத்திலேயே இருக்கும். இலங்கைக்கு எதிரான டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்கா 2-1 என்ற கணக்கில் வென்றுள்ளது என்பதும் நினைவுகூரத்தக்கது. அதே நேரத்தில் டெஸ்ட் தரவரிசையில் இந்திய முன்னணி துடுப்பாட்ட வீரர்களான சச்சின், திராவிட், சேவாக், லட்சுமண் ஆகியோர் பின்னடைவைச் சந்தித்துள்ளனர். சச்சின் 4-வது இடத்தில் இருந்து 6-வது இடத்துக்கு பின்தள்ளப்பட்டுள்ளார். டிராவிட் 15-வது இடத்துக்கு வந்துவிட்டார். அவர் முன்பு 11-வது இடத்தில் இருந்தார். லட்சுமண் ஓர் இடம் பின்தங்கி, 18-வது இடத்தில் உள்ளார். முதல் இருபது வீரர்கள் பட்டியலில் இருந்த சேவாக், இப்போது 4 இடங்கள் பின்தங்கி 22-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார். அதே நேரத்தில் இந்தியாவுக்கு எதிராக முச்சதம் அடித்த அவுஸ்திரேலிய கேப்டன் மைக்கேல் கிளார்க் முதல் 10 இடத்துக்குள் வந்துள்ளார். அவர் 12 இடங்கள் முன்னேறி 8-வது இடம் பிடித்துள்ளார். சுமார் 15 மாத இடைவெளிக்குப்பின் அவர் முதல் 10 வீரர்கள் பட்டியலில் இடம் பிடித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவின் மற்றொரு துடுப்பாட்ட வீரரான மைக்கேல் ஹசி, 4 இடங்கள் முன்னேறி 12-வது இடத்துக்கு வந்துள்ளார். பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் அவுஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் ஹில்பெனாஸ் முதல்முறையாக முதல் 20 இடங்களில் வந்துள்ளார். 22-வது இடத்தில் இருந்த அவர் 11-வது இடத்துக்கு முன்னேறியுள்ளார். 10-வது இடத்தில் உள்ள நியூசிலாந்தின் டேனியல் வெட்டோரியை விட அவர், 2 புள்ளிகள் மட்டுமே பின்தங்கியுள்ளார்.

## படுதோல்வியடைந்த இலங்கை அணி : 259 ஓட்டங்களால் தென்னாபிரிக்கா வெற்றி

இலங்கை அணியுடனான முதலாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணி 259 ஓட்டங்களால் வெற்றியீட்டியுள்ளது. 302 ஓட்டங்கள் எனும் இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20ஓவர்களில் 43 ஓட்டங்களுடன் சகல விகெட்டுகளையும் இழந்தமை குறிப்பிடத்தக்கது. ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இலங்கை அணி பெற்ற மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கை இதுவாகும். 1986 ஆம் ஆண்டு சார்ஜாவில் நடைபெற்ற மேற்கிந்திய அணிக்கெதிரான போட்டியில் இலங்கை அணி 55 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தமையே இதுவரை அவ்வணியின் மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. 2004 ஆம் ஆண்டு இலங்கை அணிக்கெதிராக ஸிம்பாப்வே அணி பெற்ற 35 ஓட்டங்களே ஒருநாள் சர்வதேச போட்டியொன்றில் ஓர் அணி பெற்ற மிகக் குறைந்த ஓட்ட எண்ணிக்கையாகும்.

இன்றைய போட்டியில் இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான உபுல் தரங்க, திலகரட்ன தில்ஷான் இருவரும் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தனர். தினேஷ் சந்திமால், குமார் சங்கக்கார இருவரும் தலா 4 ஓட்டங்களுடனும் ஏஞ்சலோ மத்திவ் ஓட்டமெதுவும் பெறாமலும் ஆட்டமிழந்தபோது இலங்கை அணி 9 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது. மஹேல ஜயவர்தன 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 6 ஆவது விக்கெட்டாக ஆட்டமிழந்தார். அப்போது இலங்கை அணி 13 ஓட்டங்களை மாத்திரமே பெற்றிருந்தது. இலங்கை அணியின் சார்பில் ஆகக்கூடுதலாக கோசல குலசேகர 19 ஓட்டங்களைப் பெற்றார். முன்னதாக, தென்னாபிரிக்க அணியின் சார்பில் ஹஸிம் அம்லா 112 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. ஜக் கலிஸ் 72 ஓட்டங்களையும் அணித்தலைவர் ஏபி டி வில்லியர்ஸ் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.



## 2011-ல் தலைசிறந்த கால்பந்து வீரர் மெஸ்ஸி தெரிவு

2011-ம் ஆண்டில் தலைசிறந்த கால்பந்து வீரருக்கான விருதுக்கு ஆர்ஜென்டினாவின் லயோனல் மெஸ்ஸி தேர்வு செய்யப்பட்டுள்ளார். சர்வதேச கால்பந்து சம்மேளனம் இந்த விருதை அறிவித்துள்ளது. தொடர்ந்து 3-வது ஆண்டாக மெஸ்ஸி இந்த விருதைப் பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. 24-வயதுக்குள் இந்த விருதை தொடர்ந்து மூன்று ஆண்டுகள் பெற்ற வீரர் என்ற பெருமையும் அவருக்குச் செல்கிறது. இதற்கு முன்னர் பிரான்ஸின் ஜிடேன், பிரேசில் வீரர் ரொனால்டோ ஆகியோர் இந்த விருதை மூன்று முறை பெற்றுள்ளனர். 1991-ம் ஆண்டு முதல் இவ்விருது வழங்கப்பட்டு வருகிறது. ஆர்ஜென்டினா தேசிய அணியில் மட்டுமின்றி, பார்சிலோனா அணிக்காகவும் மெஸ்ஸி விளையாடி வருகிறார். சாம்பியன்ஸ் லீக், ஸ்பானிஷ் லீக், ஐரோப்பா சூப்பர் கோப்பை, ஸ்பானிஷ் சூப்பர் கோப்பை ஆகியவற்றில் மெஸ்ஸியின் அபார ஆட்டத்தில் பார்சிலோனா அணி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது. கடந்த ஓராண்டில் சர்வதேச போட்டிகளில் மெஸ்ஸி 53 கோல்கள் அடித்துள்ளார். இது தவிர மற்றவர்கள் கோல் அடிக்க பலமுறை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். கால்பந்து விளையாட்டின் மூலம் அதிக அளவு பணத்தையும், அதை விட அதிகமான புகழையும் சம்பாதித்தவர்கள் வரிசையில் முதலிடத்தில் உள்ளவரும் இவர்தான்.

## சர்வதேச கோல்ப் போட்டி: இரண்டு ஆண்டுகளுக்கு பின் டைகர் உட்ஸ் சாம்பியன்

சர்வதேச கோல்ப் போட்டிகளில் பங்கேற்ற முன்னணி வீரரான டைகர் உட்ஸ் (Tiger Woods) இரண்டு ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸின் தவுசன்ஸ்ஒக்ஸ் நகரில் உலக சாம்பியன்ஸ் ஷிப் கோல்ப் போட்டிகள் நடந்தன.

இதில் உலகின் நம்பர் 1 வீரரான டைகர் உட்ஸ் பங்கேற்றார். இவர் ஜாக்ஜான்சன் என்பவரை 18வது சுற்றில் வீழ்த்தி சாம்பியன் பட்டத்தை வென்றார். கடந்த 2009ம் ஆண்டு தனது சொந்த குடும்ப விவகாரம் மற்றும் பாலியல் புகாரில் சிக்கிய டைகர் உட்ஸ் இரண்டு ஆண்டுகளுக்குப்பின் மீண்டும் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார். கடைசியாக கடந்த 2009ம் ஆண்டு நவம்பர் 15ம் திகதி அவுஸ்திரேலியாவில் நடந்த மாஸ்டர்ஸ் கோல்ப் போட்டியில் சாம்பியன் பட்டம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

எஸ். கணேஷ்





# 2012 இல் ஆதனவிலையில் இறக்கம்?

## நிதி நிறுவனங்களின் அபாய அலாரம்!

கனடாவின் நிதி நிறுவனங்களின் அண்மைய பொருளாதார அறிக்கைகளின்படி, கனடிய ஆதனவிலை உச்சத்தை அடைவதாகக் தெரிவிக்கின்றது. மேலதிக ஆதனங்கள் சந்தையில் இருப்பதால் 2012 இல் ஆதனவிலை குறையும் சாத்தியமே அதிகமாகக் காணப்படுவதாக நிதிநிறுவனங்கள் பயம் தெரிவித்துள்ளன. அத்துடன் கனடிய மக்களின் கடனின் தொகை, இதுவரை



சரித்திரத்தில் இல்லாதளவிற்கு அதிகமாகவும் காணப்படுகின்றது. CIBC இன் தலைமை அதிகாரி Gerry Mccaughey இதனை மேலும் உறுதிப்படுத்தியுள்ளார். Royal Bank, Bank of Montreal தலைமைப் பொறுப்பாளர்களும், ஒரேமாதிரியான எண்ணத்தையே தெரிவித்துள்ளனர். CMHC நிறுவனமும், கிட்டத்தட்ட இதேமாதிரியான அபிப்பிராயத்தையே தெரிவித்துள்ளது. பொதுவாக டிசம்பர் மாதத்தில் ஆதனவியாபாரம் அமைதியாகவே காணப்படும். ஆனால் 2011 இன் மார்கழி மாதம் இதற்கு மாறாகக் காணப்பட்டது. எனினும் அமெரிக்காவில் ஏற்பட்டது போல இங்கு ஏற்படாது. ஆயினும் இறக்கம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது என கூறப்பட்டுள்ளது. கடந்த பல வருடங்களாக, இதே நிறுவனங்கள் இவ்வாறே கூறிவருகின்றன என்பதனை விளம்பர வாசகர்கள் கடந்த பல கட்டுரைகளில் எழுதி வருவதனை வாசித்திருப்பீர்கள். 2008/2009 இல் ஏற்பட்ட, விலைச்சரிவு குறைந்த வட்டிவீதத்தின் மூலம் முண்டு கொடுக்கப்பட்டு, குறிப்பிட்ட காலத்தில் விலை ஏறுமுகமாக்கப்பட்டது. குறைந்தளவான வட்டிவீத சூழ்நிலை தொடர்ச்சியான விலை அதிகரிப்பிற்கு வழிகோலியது. அத்துடன் தொடர்ச்சியான புதிய வரவாளர்களும் விலை அதிகரிப்பிற்கு காரணமாக காணப்பட்டது. இம்முறை முக்கிய வங்கிகளின் தலைவர்கள் விலை இறக்கத்தைப்பற்றி அபாய அலாரம் அடித்துள்ளார்கள். 10 வீதமான விலை இறக்கம் ஏற்படலாம் என இவர்கள் எதிர்வு கூறியுள்ளனர். எது எவ்வாறாயினும் 25% மான விலை இறக்கம் வரை தங்களால் சமாளிக்க கூடிய மாதிரி தாம் அடமானக் கடன் கொடுத்துள்ளதாக Royal Bank அதிபர் திரு. நிக்ஷன் தெரிவித்துள்ளார். றோயல் வங்கி அடமானம் 2 Billion வரை கொடுத்துள்ளது. CIBC கிட்டத்தட்ட 1 Billion அடமானக் கடன் வழங்கியுள்ளது. நிதி நிறுவனங்கள் மிக மிக கவனமாகவே கடனை

**நாமும் நமது இல்லமும்**

ராஜா மகேந்திரன்

**தொடர் - 358**

வழங்குகின்றன. அமெரிக்கா மாதிரி அல்ல. எது எப்படி இருப்பினும், விலை இறக்கம் தவிர்க்க முடியாமல் இருக்கும் என்பதில் வங்கியின் அதிபர்கள் ஒத்துக்கொள்கின்றனர். மேலும் டிசம்பர் 2011 இல், முந்தைய மாதத்தை விட அதிகமான, புதிய ஆதனங்கள்

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

HomeLife/GTA Realty Inc. Brokerage* *Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



Raja Mahendran, P. Eng.
Broker/Owner

STORE FOR LEASE
KENNEDY & EGLINTON
Yogas Plaza
Retail Store For Lease. 1000 sq.ft. Suitable For Salon, jewellery . Kind Of Uses, Close To TTC, Kennedy Subway Station.

SPACE FOR LEASE



5200 Finch. Ave. East. (Embassy store building) 2nd Floor unit. About 745 sq.ft. 4 Rooms & Large common area Rent $973. Clean unit.

CONDO. FOR SALE




KENNEDY & 401
1 + 1 Bedroom condo. for sale. Close to all facilities. Asking price $264,900. Excellent view.

SALE / LEASE
Over 90% of units occupied in "GTA SQUARE".
Don't miss the opportunity
* Dental Office
* Trophy, Gift stores
* Acupuncture
* Optometrist / optician Office
* Ayurvedic Therapy
* Travel Agency Office
* Cheque - cash in
* Nails
* Many more
Lease Starts from $900 all inclusive Sales starts from $129, 900

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969 & 145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

# ஓ கனடா! உன்னை நான் நேசிக்கின்றேன்!

2012 வருடம் வந்து விட்டது. வருட ஆரம்பத்தில் வந்த செய்திகளின் அடிப்படையில் பார்த்தால் அமெரிக்கப் பொருளாதாரம் மேம்பட்டு வருகின்றது. அமெரிக்காவில் வேலை வாய்ப்பு கூடியுள்ளதாகப் புள்ளி விபரங்கள் தெரிவித்தன. (கனடாவில் சற்றே குறைந்துள்ளது)

ஐரோப்பாவோ தொல்லையில் மூழ்கியுள்ளது. விடிவு காலம் எப்போது வரும் என்று தெரியவில்லை. அமெரிக்கா அதற்காக பொருளாதாரத்தில் வலுவாக உள்ளதா என்றால் அப்படி ஒன்றும் இல்லை. இருந்தாலும் மிகப் பெரிய உலக அதிசயம். 2011 இல் நடந்தது என்னவென்றால் அமெரிக்க நாணயம் வலுப் பெற்றதுதான். இந்த அதிசயம் 2012 இலும் தொடர்கிறது. வருட ஆரம்பத்தில் யூரோ மதிப்பு வேகமாக வீழ்ச்சியடையக் கண்டோம்.

கனடிய டொலரோ ஏறத்தாழ அமெரிக்க டொலருக்கு சமமான நிலையில் தொடர்ந்து இருந்து வருகின்றது. இறங்கிய தங்கம், பெற்றோலியம் போன்றவற்றின் விலை 2012 இல் மீண்டும் ஏறத்துவங்கியுள்ளது. அப்படியானால் கனடிய டொலர் அமெரிக்க டொலரை விட மதிப்பு அதிகம் பெறக்கூடிய நிலையும் வரலாம். அமெரிக்காவில் 2008இலிருந்து சரியத் தொடங்கிய வீட்டு விலைகள் 35 இலிருந்து 40 சதவீதம் வரை வீழ்ந்து விட்டன. பலபேரின் அழுகைக் குரல்கள் கனடிய எல்லைக்கு அப்பால் கேட்கின்றது. நல்ல வேளை. கனடாவின் வீட்டு விலைகள் இன்னும் தொடர்ந்து ஏறிக் கொண்டே இருக்கின்றன. அதனால் இங்கு அழுவார் யாருமில்லை.




ஆனால் இதே நிலை தொடருமா? வரும் தகவல்கள் முன்னுக்குப் பின் முரணாக உள்ளன. ஆனால் அமெரிக்காவைப் போன்று பெரிய வீழ்ச்சி ஒன்றும் வராது என்பதே என் அபிப்பிராயம். ஆனால் பெருகி வரும் தனிநபர் கடன்கள் கவலையைத் தருகின்றது. அமெரிக்காவில் வீட்டுப் பிரச்சினை வருமுன் இருந்ததை விட அதிக அளவில் கனடாவில் தனிநபர் கடன்கள் 15.3 சதவீதம் இருப்பதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

'ஆசையே அலை போல, நாமெல்லாம் அதன் மேலே'. பழைய சினிமாப் பாடல் வரி தான் என் நினைவுக்கு வருகின்றது. கடனை அதிகரிக்காதீர்கள். கடன் வாங்குவதிலும் உங்கள் எல்லை என்ன என்று தெரிந்து கடன் வாங்குங்கள். அப்படி ஒரு நடைமுறையை நீங்கள் கையாண்டால் பொருளாதாரம் எந்த நிலையில் இருந்தாலும் நீங்கள் சமாளித்துக் கொள்ள முடியும்.

கடன் என்று சொன்ன பின், வட்டியைப் பற்றிச் சொல்லாமல் விடலாமா? வட்டி வீதங்கள் தொடர்ந்து குறைந்த நிலையிலேயே இருந்து வருவதற்கான சாத்தியக் கூறுகளே உள்ளன. அதற்காக கடனைக் கூட்டாதீர்கள். மீண்டும் சொல்கின்றேன். வங்கிகள் நிலையான வட்டியைக் குறைத்திருப்பது மகிழ்ச்சியான செய்தி. 4, 5 வருடங்களுக்கு நிலையான வட்டி இன்றைக்கு 3 சதவீதத்தை ஒட்டிக் கிடைக்கக் கூடியதாக உள்ளது. மாறும் வட்டியோ அதை விடக் குறைவாகத் தான் உள்ளது.

அடுத்து ஆர்.ஆர்.எஸ்.பி ஆரம்பித்து விடும். கண்ணை மூடிக் கொண்டு ஆர்.ஆர்.எஸ்.பியில் முதலீடு செய்து விடாதீர்கள். உங்களைக் கவர்ந்திழுக்கும் விளம்பரங்களை எல்லாப் பக்கங்களிலும் கேட்கலாம். றேடியோவில், வானொலியில், செய்தித்தாள்களில் என்று எங்கு பார்த்தாலும் பார்க்கலாம், கேட்கலாம். எல்லோருக்கும் ஆர்.ஆர்.எஸ்.பி நன்மையைத் தருவதில்லை. உங்கள் வருமானம் என்ன? உங்கள் எதிர்காலத்திட்டம் என்ன? என்ன வரி கொடுக்கிறீர்கள் என்பன போன்றவற்றின் அடிப்படையிலேயே ஆர்.ஆர்.எஸ்.பி யைப் பற்றி முடிவு எடுக்க வேண்டும்.

பொருள் ஈட்டுவது ஒரு திறமை. அதை வளர்த்து பத்திரமாக வைத்துக் கொள்வது இன்னொரு திறமை. கனடா சிறந்த நாடு. இந்த நாட்டில் நீங்கள் இரண்டையும் பெறலாம். உங்கள் சூழ்நிலைக்கு ஏற்ற ஆலோசனைகளைப் பெற இக்கட்டுரை ஆசிரியருடன் தொடர்பு கொள்ளலாம். தொலைபேசி எண் : 416.473.6100
இணைய தளமுகவரிகள்:
www.dreamsandmoney.com,
www.perri.com



பெரி. முத்துராமன்

# கதவு திறந்தே...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

அதைத் தொந்தரவு செய்வதை நான் விரும்பவில்லை. அதனால்தான் ஜன்னல் களை சாத்தி வைத்திருக்கிறேன்" என்றார்.

இது நிகழவேண்டுமென்றால் உங்களுக்குள் விளக்கை ஏற்ற வேண்டுமா என்ன? விளக்கு ஏற்கெனவே ஒளிர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அது வெளிப்படாத அளவுக்கு நீங்கள் வேண்டாத விஷயங்களைக் கொண்டு அதனை மூடி வைத்திருக்கிறீர்கள். அதன் ஒளியை வெளிப்படச் செய்துவிட்டால் மற்றவை மிக இயல்பாக நடக்கும். யோகா என்கிற கருவி அதனை மிக வேகமாக வெளிப்படச் செய்யும். மரபணுவியல் தொழில்நுட்பம் போலவே நம் வசம் உள்நிலைத் தொழில் நுட்பமுள்ளது. எட்டு வருடங்கள் கழித்துக் காய்க்கக் கூடிய தென்னை மரத்தை மரபணுவியல் தொழில்நுட்பம் ஒன்றரை வருடங்களில் காய்க்கச் செய்யும். அதுபோல் உள்நிலைத் தொழில் நுட்பத்தால் தன்னை உணர்வதற்கு பல பிறவிகள் எடுக்க வேண்டிய நிலை மாறி ஒரே பிறவியில் உங்களால் உணர முடியும்.

எனவே கதவு எங்கே என்று தேடாதீர்கள்!
கதவு திறந்தே இருக்கிறது!!

# கனடிய அமைச்சர்கள்...

03ஆம் பக்கத்தொடர்ச்சி

வைத்துள்ளோம். பன்முகத்தன்மை தழுவி வாழவிரும்பும் எங்களின் ஆசைக்கு தனித்துவம் பொருந்திய தைப்பொங்கல் கொண்டாட்டமானது வலுவூட்டுகின்றது. மக்கள் மத்தியில் சுயநலமின்றி, பெருந்தன்மை மற்றும் நற்குணங்களுடன் வாழ விரும்புகின்றவர்களுக்கு இவ்விழாவானது ஒரு தென்பை அளிக்கின்றது. ஏனைய மக்களும் தங்களது கொண்டாட்டங்களைக் கொண்டாடுவதற்கும் தைப்பொங்கலானது கனடிய மக்களுக்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கின்றது.

சமாதானம் நற்குணம் மற்றும் சிறந்த எதிர்காலத்திற்கு எனது நல்லாசிகள் உரித்தாகுக.

பாம் கில் பா.உ.

தைப்பொங்கலானது கனடியத் தமிழர்களுட்பட அனைதுலகத் தமிழர்களினால் கொண்டாடப்படும் ஒரு புனிதமான விழாவாகும். ஒட்டுமொத்த மனிதகுலத்திற்கும் இறைவனால் அளவிற்கதிகமாக அள்ளி வழங்கப்படும் ஆசீர்வாதங்களுக்காக நன்றி கூறும் விழாவாக இத்தைப்பொங்கலானது திகழ்கின்றது. தமிழ்மக்கள் இறைவனுக்கு நன்றி கூறுவதற்காக பொங்கல் பொங்கி இந்தநாளை ஆரம்பிக்கின்றார்கள். இவ்விழாவானது பல்வேறு வழிகளில் பாரம்பரிய முறையில் உற்சாகமாகக் கொண்டாடப்படுகின்றது.

அனைத்துக் கனடிய குடும்பங்களுக்கும், இந்த விழாவின்மூலம் தமிழ் கலாச்சாரத்தை அனுபவிக்கும் ஒரு வாய்ப்பு உள்ளதோடு,கனடாவின் கலாச்சாரப் பாரம்பரியத்திற்கு கனடியத் தமிழர்களினால் ஆற்றிய பங்களிப்பையும் அங்கீகரிக்கக் கூடிய வாய்ப்பையும் கொடுக்கின்றது. எங்கள் நாட்டின் பிரதமர் அவர்களின் கூற்றுப்படி 'நாங்கள் உலகின் பல கலாச்சாரங்கள் மற்றும் மதங்களை அரவணைத்து ஏற்றுக்கொள்கின்ற ஒரு நாட்டில் வாழ்வதையிட்டுப் பெருமையடைகின்றோம்'. எங்களின் அரசாங்கமானது பல்லின கலாச்சாரத்தை ஒரு பெரிய சொத்தாகக் கருதுவதோடு, எங்களின் பல்லினத்தன்மை மற்றும் தேசிய ஒற்றுமை என்பவற்றை வலிமைப்படுத்துவதற்கும் உறுதி பூண்டுள்ளோம். நம்பிக்கை, அமைதி மற்றும் நல்லெண்ணம் நிறைந்த என்னுடைய வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

மார்க் அட்லெர், பா.உ.
யோர்க் மத்தி.

மிப் பெரிய சந்தோசத்தைக் கொண்டு வரும் பொங்கல் திருநாளை கொண்டாடும் அனைவருக்கும் என்னுடைய வாழ்த்துக்கள்.

அனைவரும் மகிழ்ச்சியையும் சந்தோசத்தையும் தரக்கூடிய அறுவடைக்காலமாக இந்த பொங்கல் திருநாள் மிகவும் பாரம்பரிய விழாவாக கொண்டாடப்படுகிறது. நிச்சயமாக நான் நம்புகிறேன் நீங்கள் அனைவரும் உங்கள் குடும்பத்தினர், நண்பர்கள், மற்றும் உறவினர்களுடன் கொண்டாடுவீர்கள் என்று.

உங்கள் அனைவருக்கும் எனது இந்த ஆண்டிற்கான சிறப்பான வாழ்த்துக்கள்.

பிறட் டூட், பா.உ

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# கடன் தொல்லையினால் வருந்துகிறீர்களா ?
# GET OUT OF DEBT WITHOUT BANKRUPTCY
## வங்குரோத்துக்கு செல்லாமல் கடன்களிலிருந்து விடுதலை
## GET OUT OF YOUR DEBT SYNDROMME

WE Settle your debts without bankruptcy



We Work for you, Trusty work for your creditors

உங்கள் அனைத்து கடன்களில்லிருந்தும் 80% வரையிலான கழிவை பெறுவதற்கும்

உங்கள் வீடு, வாகனம், மற்றும் சொத்துக்கள் அனைத்தும் சட்டமுறையில் பாதுகாப்பதற்கும்

கடன் கொடுத்தோரின் தொலைபேசி மிரட்டல்களையும், கடன் வட்டிகளை நிறுத்துவதற்கும்

மாதாந்தம் உங்கள் வருமானத்தில் இருந்து ஒரு பகுதியை கடன்காரர்கள் வசூலிப்பதை நிறுத்துவதற்கும்

ஓர் சிறிய மாதாந்தகட்டணத்தினுடாக எல்லா கடன்களையும் தீர்க்கும் வசதி செய்வதற்கும்

சகல கடன் பிரச்சனைகளிலிருந்து தீர்வுகாண சிறந்த நிபுணத்துவ வழிமுறைகளுக்கும்

உங்கள் மாதாந்த வருமானம் அரசாங்க அட்டவணைக்குட்பட்டிருந்தால்
இலவச ஆலோசனைகளையும், இலவச சேவைகளையும் பெறுவீர்கள்................

**ARE YOU CONCERNED** ABOUT YOUR DEBTS ?
ABOUT YOUR HOUSE HOLD DEBTS ?

உங்கள் இறுதி முடிவை எடுக்கும் முன்னர் ஒரு தடவை எங்களை அழையுங்கள்

**இத்துறையில் பல வருட அனுபவமிக்க ARU KRISH ஜை**

**இன்றே அழையுங்கள்**

இலவச ஆலோசனைகளுக்கு

# (416) 556-9287

**Credit Revolving Center**
**(GTA Square )**

PEACE OF MIND
CREDIT REVOLVING CENTRE

5215 Finch Ave.E, Suite #223, Scarborough, ON M1S0C2

# அந்த வீடு எதற்காக விற்பனை செய்யப்படாது சட்டரீதியாக தத்தளிக்கின்றது?

## கனடிய தகவல் தொடர் 164

ஸ்காபரோவில் என் நண்பன் ஒருவர் வாழும் வீட்டின் அருகே உள்ள பெரிய தனி வீடு ஒன்றில் சற்று வயதான ஒரு தம்பதி மட்டும் பலகாலம் வாழ்ந்து வந்தனர். அவர்களுக்கு ஒரேயொரு மகள். அவர் ஆரம்ப பாடசாலை ஒன்றின் ஆசிரியை. அடிக்கடி தமது பெற்றோரிடம் மகள் குடும்பம் வந்து போவார்கள். எனது நண்பனின் அயலவர் என்ற ரீதியில் எனது நண்பருக்கு அறிமுகம். அவர் வீட்டிற்கு நானும் சென்று வருவதால் எனக்கும் அவர்கள் சற்று அறிமுகம்.

என்ன ஆச்சரியம்! அந்த வீடு கடந்த ஒரு சில ஆண்டுகளாக எவருமே குடியிருக்காது பூட்டியபடியே காணப்படும். குவிந்த நிலையில் உள்ள பனிக்கட்டிகள், கோடை காலத்தில் வளர்ந்த நிலையில் உள்ள புற்தரைகளை அவர்களின் மகள் அல்லது மருமகன் பல தடவை காலங்கள் தவறவிட்ட நிலைமையிலும் அவசரமாக வந்து துப்பரவாக்கி விட்டு போய்விடுவார்கள். தொடர்ந்து வீடு குடியிருப்போர் அல்லது மனித நடமாட்டம் எதுவுமின்றி பூட்டியபடியே காணப்படும்.

சற்று அறிமுகம் இருந்தபடியால் என்ன நடந்தது? என வினவினால் சற்று வயது முதிர்ந்த அந்த மனிதன் நினைவுகளை அழிக்கும் 'அல்ஸைமர்' (Alzhemer) என்னும் நோயினால் பீடிக்கப்பட்டு முதியோர் மருத்துவ இல்லத்தில் இருப்பதாகவும் தனியே இருக்க முடியாத அந்த தாய் மகளுடன் இப்பொழுது தங்கியிருப்பதாகவும் தெரியவந்தது.

இனி அந்த வீடு விற்பனை செய்தேயாக வேண்டும். ஆனால் கடந்த மாதங்களில் ரொறொன்ரோவில் வீடுகள் நல்ல விலைகளில் அதிவிரைவாக விற்பனை செய்யும் சந்தர்ப்பங்கள், சூழ்நிலைகள் இருந்தும் இந்த வீடு விற்பனை செய்ய முடியாத நிலைமை. வாடகைக்கு கொடுப்பது என்றாலும் சட்டப்படியான பதிவுகளுடன் வாடகைக்கு வழங்கல் என்ற நகர்வினை முன் எடுக்க முடியாத நிலைமைகள் இதுவே. அங்கு எழுந்துள்ள பிரச்சினை என்ன?

அந்த வீட்டினை விற்பனை செய்ய முடியாத அளவுக்கு சட்டப்பிரச்சினை ஒன்று குறுக்கே நிற்கின்றது. அதாவது தம்பதிகள் இருவருடைய பெயரிலும் வீடு இருந்தும் நினைவுகள் சீரற்று அந்த மனிதன் இருப்பதாலும், அவர் சுயமான நிலையில் கைச்சாத்திட முடியாத துன்பகரமான ஒரு நிலைமை தொடர்வதாலும் அந்த வீட்டினை விற்பனை செய்ய முடியாமல் இருக்கிறது.

இச்சம்பவம் தொடர்பான நிலவரங்களை பற்றி நம்மோடு அறிமுகமான சில சட்ட ஆய்வாளர்களோடு கலந்துரையாடிய போது, இவ்வாறு சிக்கல்களில் இருந்த பல வாடிக்கையாளர்களின் துயர அனுபங்களை அவர்களும் பகிர்ந்து கொண்டார்கள். சரி! இந்த சம்பவத்திலிருந்து என்ன பாடத்தினை நாம் படித்துக்கொண்டோம். அந்த மனிதனுக்கு ஏற்பட்டது போன்று உடல் அல்லது மனரீதியாக இயங்க முடியாத என்பது எவருக்கும் எந்த நேரத்திலும் ஏற்படலாம் என்பது பலரும் அனுபவரீதியாக கண்ட ஒரு உண்மை!

**அப்படியானதொரு துர்பார்க்கிய நிலைமை ஏற்பட்டால் தங்கள் வங்கி கணக்குகள், சேமிப்புகள், முதலீடுகள், வீடு, உடமைகள் யாவற்றிலும் சரியான தீர்மானத்தினை தங்கள் சார்பில் எடுத்து அதற்குரிய நடவடிக்கைகளை சரியான இடத்தில், ஒழுங்காக தொடர்வது யார்? இதுவே இங்கு எழுந்துள்ள முக்கியமான கேள்வி?**



இதற்கு கனடிய மத்திய, மாகாண அரசின் சட்டமா அதிபதியின் அமைச்சகத்தினால் வழங்கும் பதில் வேறு ஒன்றுமல்ல. இந்த நிலைமைகள் தங்களுக்கு வரலாம் என்ற ஆபத்தினை முற்கூட்டியே உணர்ந்து ஆரோக்கியமாக இருக்கும் காலத்திலேயே தங்களின் இத்தகைய பணியினை தொடர ஒரு பிரதிநிதியினை (Appointing Your Attorney) தங்கள் உறவுகளிலிருந்து நம்பிக்கைகுரியவராக தெரிந்து நியமித்தல் வேண்டும். தம்பதிகள் இருவரில் ஒருவரின் நிலைமை பாதிப்படைந்தால் இவ்வீடு தொடர்பாக தீர்மானங்கள் எடுத்து அடுத்த கட்ட நகர்வினை முன் எடுப்பதற்கு மற்றவருக்கு பூரண அதிகாரம் வழங்கும் இவ் ஆவணத்தினை (Power of Attorney) ஆரோக்கியமாக இருக்கும் போதே கைச்சாத்திட்டு வைத்திருந்தால் இன்று அந்த தம்பதியருக்கு ஏற்பட்ட நிலைமை எதிர்காலத்தில் எவருக்கும் ஏற்படமாட்டாது. அப்படியொரு சட்டரீதியான பிரதிநிதியாக தங்களுக்குள்ளோ அல்லது இன்னொருவரையோ நியமித்து வையுங்கள் என்பதனையே இவ் அனுபவம் வழிகாட்டுகின்றது.

அந்த தம்பதியின் நிலையில் அவர்களுக்குத் தீர்வு என்ன?

நோய் வாய்ப்பட்டவர் சுகமாகி எழுந்திருக்க வேண்டும்! இது அவரின் வாழ்வின் இறுதி கட்டம் என்பதால் அது சாத்தியப்பட மாட்டாது. அடுத்தது என்ன? அவரின் மரணத்தின் பின்பே அடுத்த கட்டத்தினை நோக்கி அவர்களின் குடும்பத்தினர் நகரலாம். மரணத்தின் பின்பு வீடு, மனைவி, அல்லது பிள்ளையுடன் சமகூட்டு உரிமையாகவிருந்தால் மற்றவர் பெயரில் இலகுவாக மாற்றலாம். அவரது தனி பெயரில் மட்டுமிருந்தால் 'மரண சாசன பத்திரம்' (Last will & Testament) என்ற ஆவணம் அவர் ஏற்கெனவே கைச்சாத்திட்டு இருக்கவில்லையானால் உடனடியாக குடும்பத்தவர்கள் பெயருக்கும் மாற்ற முடியாது. தொடர்ந்து குடும்பத்தவர்கள் இவ்வீடு தொடர்பாக நீதிமன்றத்திற்கு மனு செய்து, நீதிமன்றத்தின் நிறைவேற்றும் செலவு (Court Probation Fees) மற்றும் வக்கீல் செலவுகள் (Legal Cost) யாவும் செலுத்தியே வீடு என்றதின் உரிமைப்பத்திரம் குடும்பத்தவர்களின் பெயருக்கு பகிர்ந்து வழங்கப்படும். மரணத்தின் பின்பு மரணமானவரின் உரிமைகாரர்கள் பெயரில் வீடு பகிர்ந்து சட்டரீதியாக வழங்கும் போது, அவர்களில் ஒருவர் குறுக்காக இழுக்கத் தொடங்கினால் தீர்வு காண்பது என்பது இன்னும் சிக்கலாக தொடரும் சில நேரங்களில் உரிமைக்காரர் களில் எவராவது அதாவது பிள்ளைகளில் ஒருவர் 18 வயதுக்கு குறைந்தவராக விருந்தால் நிலைமை இன்னும் சற்று சிக்கலாகலாம். ஏனெனில் 18 வயதுக்குக் குறைந்தவர் இவ்வீட்டிலுள்ள உரிமைப் பங்கினை விற்பனை செய்ய வேண்டுமாயின் அவர் அந்த வயதினை அடையும் வரை மேலும் காத்திருக்க வேண்டும்.

அப்படியானால் தீர்வு என்ன?

ஆரோக்கியமான, தெளிவான நிலைமையில் இருக்கும் போதே இரு சட்டரீதியான ஆவணங்களை கைச்சாத்திட்டு வைத்திருத்தல் வேண்டும். அவையாவன

1. மரணத்தின் பின்பு எவர் எவருக்கு உடமைகள் போய் சேரல் வேண்டும் என்ற சாசன பத்திரம் (Last will & Testament) இது பற்றி முந்திய இதழில் கட்டுரை வெளியாகியிருந்தது.

2. எண்ணங்கள், சிந்தனைகள், சீரழியும் நிலையில் தீர்மானம் எடுக்கும் அதிகார பிரதிநிதி (Appointing Your Attorney)

**தங்கள் சார்பில் அதிகாரம் எடுக்கும் பிரதிநிதி நியமனம்** (Appointing Your Attorney) **என்றால் என்ன?**

இதனை ஆங்கிலத்தில் பின்வருமாறு தெளிவு பண்ணப்படுகின்றது. A POWER OF ATTORNEY IS A LEGAL DOCUMENT THAT GIVES SOME ONE ELSE THE RIGHT TO ACT ON YOU BEHALF அதாவது தங்களின் குறிப்பிட்ட ஒரு உடமையின் விடயத்தில் தீர்மானம் எடுக்கும் சட்டரீதியான ஒரு பிரதிநிதியின் நியமனம் என தமிழில் குறிப்பிடலாம்.

இதில் இருவகை உண்டு.

1. தொடர்ச்சியான அதிகார பிரதிநிதியின் நியமனம் (Continuing Power of Attorney for Property)

இதுவே ஒரு மனிதனின் எண்ணங்கள், சிந்தனைகள் சீரழியும் நிலை தொடருமானால் மட்டும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இன்னொருவருக்கு வழங்குவது ஆகும்.

2. தொடர்ச்சியற்ற அதிகார பிரதிநிதியின் நியமனம்
(Non Continuing Power of Attorney)

இது தற்காலிகமாக ஒருவர் வெளிநாடுகளுக்கு போகும் போது மட்டும் குறிப்பிட்ட காலங்களுக்கு இடையில் தேவையேற்படின் தற்காலிகமாக தீர்மானம் எடுக்கும் பிரதிநிதியாக நியமித்தல் ஆகும்.

(உதாரணமாக தாயக மண்ணில் உள்ள நில, புலங்களை விற்பனை செய்ய கனடாவிலிருந்து உறவுகளில் எவருக்கேனும் வழங்கும் அதிகார பிரதிநிதித்துவத்தினை இங்கு குறிப்பிடலாம்.)



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

YARL WINDOW BLINDS & DRAPER
VENETIAN / VERTICAL / ROLLER
WOOD / FORM WOOD
BLINDS WOOD & VINYL SHUTTERS
WE ARE SPECIALIZED IN CUSTOM MADE Drapery & Blinds


Since 1991
Tel: 416.806.5397
905.201.7733
Call: selvam
We have experience to make your home more beautiful

# பொங்கல் பொங்குவோம்!



பொங்கல் பொங்குவோம் - தைப்
பொங்கல் பொங்குவோம்
எங்கும் உள்ளவர் - ஏற்றம்
எய்தப் பொங்குவோம்!

பச்சை அரிசிநல் - பாசிப்
பருப்புச் சர்க்கரை
உச்சப் பாலிலே - பரிதி
உயரப் பொங்குவோம்!

என்றும் நன்மைகள் - செய்யும்
இரவிக்(கு) எங்களின்
நன்றி சொல்லுவோம் - பொங்கும்
நாக ரிகத்தினால்!

இமயத் திராவிடர் - பெருமை
இலங்கப் பொங்குவோம்
தமிழர் மரபுகள் - நின்று
தழைக்கப் பொங்குவோம்!

சாதி வேற்றுமை - செத்துச்
சாம்ப ராகவும்
ஆதி மடமைகள் - உண்மை
அறிவில் வேகவும்

வலுவி ழுந்தவர் - வறியர்
வாழ்வி ழுந்தவர்
புலம் பெயர்ந்தவர் - புதிய
பொழுது காணவும்

தொழுது வாழ்ந்திடா - உழவர்
தொழிலில் ஓங்கவும்
வழுவிலா நெறி - முறைகள்
வாழ்வைத் தாங்கவும்

வாழப் பிறந்தவர் - தங்கள்
மண்ணை ஆளவும்
ஈழத் தமிழர்கள் - இன்னல்
இடர்கள் மாளவும்

பொங்கல் பொங்குவோம் - அன்புப்
பொங்கல் பொங்குவோம்
எங்கும் உள்ளவர் - இன்பம்
எய்தப் பொங்குவோம்!



**கவிஞர் வி. கந்தவனம்**

# அந்த வீடு...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

**அதிகாரம் வழங்கும் பிரதிநிதி நியமனம்** (Appointing Your Attorney) **தொடர்பான நடவடிக்கைகள் எப்படி முன் எடுப்பது?**

1. மாகாண அரசின் சட்டமா அதிபதியின் அலுவலகத்திற்கு (Ministry of the attorney general of Ontario) 416.314.2800 அல்லது 1.800.366.0335 என்ற தொலைபேசிக்கு அழைக்கும் போது சரியாக வழிகாட்டும் தகவல்களை அனுப்பி வைப்பார்கள்.

2. பின்வரும் இணையதளத்திற்கு சென்று தகவல்களை அறிந்து கொள்வதுடன், விண்ணப்பபடிவங்களையும் பதிவு இறக்கம் செய்து பெற்றுக்கொள்ளலாம். www.attorneygeneral-jus.gov.on.ca/english/family/pgt/poa.pdf

விண்ணப்பங்களை நிரப்பி தாங்களாகவே அடுத்தவர் உதவியில்லாது ஆவணத்தினை தயாரித்து வைத்திருக்கலாம்.

3. வக்கீல் ஒருவரின் உதவியுடன் ஆவணத்தினை கைச்சாத்திடுவது சாலச்சிறந்தது. வக்கீலின் உதவியுடன் தயாரிக்கும் போது தேவையான சட்டரீதியான சொற்கள், வசனங்களின் பிரயோகங்கள் (Legal words & Phrases) ஆகியவற்றுடன் தயாரிக்கப்பட்டு அவர்களின் சாட்சி கையொப்பங்கள், அதிகார சீல்களுடன் (Legal Stamp) இப்பத்திரத்தினை தயாரிப்பது வலிமையுடையதாக இருக்கும்.

4. ஒருவருக்கு பதிலாக கூட்டாக ஒன்றுக்கு மேற்பட்டவர்களையும் நியமிக்கலாம். நியமிக்கப்பட்டவரால் இயங்கமுடியாத நிலைமை ஏற்பட்டால் இரண்டாவது, மூன்றாவது வரிசையில் ஏனையோரையும் நியமிக்கலாம். ஆனால் நியமிக்கப்படுபவர் 18 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். நியமிக்கப்பட்டவரை ரத்து செய்ய விரும்பினால் அவ்வாறு விரும்பிய நேரத்தில் ரத்து செய்து வேறு எவரையேனும் நியமிக்கலாம்.

இறுதியாக முடிவில் ஒன்று!

நம்பி நியமிக்கப்பட்டவர் தலைகீழாக பிரட்டி துரோகம் செய்யாதவராக குடும்பத்திலிருந்து தெரிவு செய்ய வேண்டும். நியமிக்கப்பட்டவர் தமக்கு வழங்கப்பட்ட உரிமையினையும் அதிகாரத்தினையும் பிரட்டி அடிக்க தொடங்கினால் எவராலும் ஒன்றும் செய்யமுடியாது. சட்டத்தாலும் பாதுகாப்புத் தேடுவது சிரமம். எதற்கும் நியமனம் என்பது ஜாக்கிரதையாக கையாள வேண்டும்.

• இது எனது சிறு அறிவுறுத்தல் மட்டுமே. இது பற்றிய பூரண தகவல்களை உங்களது சிறந்த சட்டத்தரணி அல்லது இது பற்றிய பூரண தகவல்களைத் தரக்கூடியவர்களுடன் கலந்தாலோசித்து முடிவெடுப்பது எதிர்கால சிக்கல்களுக்குத் தீர்வாகலாம்.

NetTek
Training & Solutions Inc

WORRIED about..
No Jobs? Laid Off? EI Ran Out? Part-time?

"You May Qualify for Second Career
Free Funding up to $28,000"

Change Your Career! By Second Career!!



SECOND CAREER
FREE FUNDING
For Eligible Clients*

UNEMPLOYED?
* Laid off after 2005 or Working less than 20 Hours
MATERNITY BENEFIT?
(Received clients within 5 years)
* Tuition/Books/Living/Daycare/Transportation Expenses
ALL FREE

Continue SERVING THE COMMUNITY FOR 14 YEARS

CAREER DIPLOMAS
* BUSINESS ADMINISTRATION
* COMPUTERIZED ACCOUNTING
* NETWORK MANAGEMENT

JOBS READY
- Bank Teller
- Accounts Clerk
- Documentation Clerk
- Administrative Clerk
- Bookkeeper
- Help Desk Support
- Technical Support Analyst
- Inventory Clerk
- Hardware Installation
- and More...

416-431-4545

TORONTO CAMPUS
(Markham Rd./Lawrence Ave.)
868 Markham Road #104,
Scarborough, ON, M1H 2Y2

MARKHAM CAMPUS
(Markham Rd./Denison Rd.)
20 New Delhi Road #97
Markham, ON, L3S 0B5

OPENING SOON

nettek-training@rogers.com www.nettek-training.com

PRIVATE CAREER COLLEGE
(Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005)

New Career Will Change Your Future!

# கிழக்கு சீனாவில் புதிய பாலம்!

கிழக்கு சீனாவில் அண்மையில் திறந்து விடப்பட்ட பாலமானது உலகிலேயே கடலுக்கு குறுக்காக கட்டப்பட்ட மிக நீளமான பாலம் என்ற பெருமையை பெறுகிறது



அன்ரனி மனோகரன்

கிழக்கு சீனாவில் அமைந்துள்ள சண்டோங் மாகாணத்தில் மக்களின் போக்குவரத்துக் காக திறந்து விடப்பட்ட பாலமானது உலகிலே கடலுக்கு குறுக்காக அமைக்கப்பட்ட மிக நீளம் கூடிய பாலம் என்ற இடத்தைப் பிடித்துள்ளது. இதனை கட்டிமுடிக்க நாலு வருடங்கள் மட்டுமே பிடித்தாலும், திட்டப்பணிகளுக்கு எடுத்துக் கொண்ட காலமானது 17 வருடங்கள்.

Jiaozhou வளைகுடாவை ஊடறுத்து செல்லும் இந்தப்பலமானது Huangdao மாவட்டத்தையும் Qingdao நகரையும் மற்றும் Hongdao தீவையும் Y போன்ற அமைப்பில் இணைக்கிறது. 42.5 கிலோ மீற்றர் நீளமான இப்பாலமானது உலகிகேயே மிக நீளமான பாலம் என்பதை கின்னஸ் புத்தகம் அறிவித்தது. இதுவரை காலமும் இந்த இடத்தை அமரிக்காவில் லூசியான மாநிலத்தில் அமைந்துள்ள Pontchartrain வாவிக்கு குறுக்காக கட்டப்பட்டிருந்த 38 கிலோ மீற்றர் நீளமான பாலமே பிடித்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. கின்னஸ் புத்தகத்தின் இந்த அறிவிப்பு அமரிக்காவில் சில சர்ச்சைகளை ஏற்படுத்தின. அவர்கள் புதிய வியாக்கியான மொன்றை அறிமுகப்படுத்தினார்கள். Jiaozhou பாலத்தின் சிலபகுதிகள் நிலத்தின் மேல் அமைக்கப்பட்டிருப்பதால், தங்களுக்கு சார்பாக கூட்டல் கழித்தல்களை செய்து, நீருக்கு மேல் அமைக்கப்பட்ட பாலத்தின் நீளம் 25.5 கிலோ மீற்றர் தான் என்று கணக்கிட்டு Pontchartrain பாலமே உலகின் நீளமான நீருக்கு மேலான பாலம் என்று உரிமை கொண்டாடினார்கள். இந்த சர்ச்சைக்கு ஒரு முடிவு கட்ட கின்னஸ் நிருவாகம் இந்த சாதனையை இரண்டு பிரிவுகளாக பிரித்து, ஒன்று தனி நீளம் மற்றது கூட்டுத்தொகை நீளம் என்றவகையில் இரண்டுக்கும் முதலாவது இடத்தைக் கொடுத்தது.





பத்து ஆயிரம் தொழிலாளிகளின் உழைப்பில் உயர்ந்து நிற்கும் இந்தப்பலமானது, ஐந்து லட்சம் தொன் நிறை கொண்ட இரும்பு கம்பிகளாலும், இரண்டு மில்லியன் கனமீற்றர்கள் கனவளவு கொண்ட கொன்கிறிற்றைக் கொண்டும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. பிரான்சில் கட்டப்பட்டிருக்கும் Eiffel Towers கோபுரத்தைப் போன்று 65 கோபுரங்கள் கட்ட தேவையான இரும்பு இப்பாலத்துக்கு பாவிக்கப்பட்டிருப்பதாக கணக்கிடப் பட்டுள்ளது. இந்தப்பாலமானது பூமியதிர்வு, கடல்கோள் போன்ற இயற்கை அழிவுகளுக்கு ஈடு கொடுக்கக்கூடிய மட்டுமல்லாது, கப்பல் போக்குவரத்தின் போது ஏற்படும் விபத்துக்களையும் தாக்குப்பிடிக்க கூடிய முறையில் உருவமைக்கப்பட்டிருப்பதாக கின்னஸ் புத்தகம் உறுதிசெய்துள்ளது. ஆறு வீதிகளையும் இருபக்க கரை பாதைகளை யும் கொண்ட இப்பாலம் ஒன்றரை பில்லியன் டொலர்களை முழுங்கிவிட்டு, ஐயாயிரம் எண்ணிக்கையான தூண்களில் நிமிர்ந்து நிற்கிறது.

பாலம் மக்களின் பாவனைக்கு விடப்பட்டாலும் பாதுகாப்பு தடுக்கைகளில் காணப்படும் இறுக்கப்படாத ஆணிகள், இரவில் பயணிக்கும் போது வெளிச்சமின்மை போன்ற குறைபாடுகளை பத்திரிகைகள் சுட்டிக்காட்டத் தவறவில்லை. சிறு சிறு குறைபாடுகள் இருந்தாலும் அவை மக்களின் பாதுகாப்புக்கு எந்தவித அச்சுறுத்தலாக இருக்காதெனவும், இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்ய இன்னும் இரண்டு மாதம் எடுக்குமென்றும் கட்டிட பொறியியலாளர் எடுத்தியம்பினார். அவர் மேலும் கூறுகையில் தாங்கள் புதிய பல தொழில் நுட்பங்களை யும், பொறிமுறைகளையும் இந்த கட்டுமாண பணியிலிருந்து கற்றுக்கொண்டதாக கூறினார். எது எப்படியோ இந்த கின்னஸ் சாதனையானது மிக அதிக காலம் தாக்குப்பிடிக்காது போல் இருக்கிறது. Guangdong மாகாணத்தையும் Hong Kong நகரத்தையும் இணைப்பதற்காக இன்னுமொரு பாலம் கட்டும் பணியை 2009 ம் ஆண்டு சீன அரசாங்கம் ஆரம்பித்திருக்கிறது. 2016ம் ஆண்டு இப்பாலத்தின் ஒரு பகுதி திறக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அப்பொழுது நீருக்கு மேலாக உள்ளபகுதி மட்டும் 35 மீற்றர் நீளமாக இருக்குமென்றும் அறியப்படுகிறது. உலகிலே உள்ள மிக நீளமான பதினைந்து பாலங்களில் பதினொரு பாலங்கள் சீனாவில் தான் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்கது.

## 2012 இல்

07ஆம் பக்கத்தொடர்ச்சி

கட்டப்படுகின்றன என்பதையும் CMHC தெரியப்படுத்தியுள்ளது.

எதிர்வரும் 2 அல்லது 3 வருடங்களிற்கு தொடர்ச்சியாக விலை குறைவதாகக் கொள்வோம். அவ்வாறு நிலைமை ஏற்பட்டால் புதிதாக ஆதனங்கள் வாங்க இருப்பவர்களுக்கு மகிழ்ச்சியான நிகழ்வாக இருக்கலாம். வேறு ஒரு மாதிரி சிந்திந்தால், வீடு/மனை வாங்குபவர்கள் உடனடியாக விற்காமல் 3 அல்லது 4



வருடங்களிற்கு மேலாக அதே வீட்டில் இருப்பார்களாயின் விலை இறக்கத்தில் எதுவித பாதிப்பும் ஏற்படாது. ஆதனமுதலீடு - நீண்ட கால முதலீடு.

ஏறக்குறைய TREB இனால் சராசரியாக 9000 ஆதனங்கள் விற்கப்படுவதாக கொண்டால், பொருளாதார இறக்கம் ஏற்பட்டாலும் எண்ணிக்கை 7000 இற்கு குறைவாக செல்லும் என எதிர்பார்க்கமுடியாது. அவ்வாறான நிலையில் வாங்குபவர்களும் விற்பவர்களும் சந்தையில் இருப்பது என்பது எப்பொழுதும் உண்மையான நிகழ்வு. இதனால் ஆதன விலை குறைந்தாலும் நீண்ட நோக்கில் பெரிய பாதிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கமுடியாது. ஆனால் தம்மால் மாதாந்தம் செலுத்தக்கூடிய கட்டுப்பணத்திற்கு அதிகமாக மாதாந்த கொடுப்பனவு செய்த ஆதனத்தை வாங்கிய பொழுது, தொழிலை இழந்தால் அல்லது வருமானத்தை இழந்தால் நிலைமை நெருக்கடி யாகலாம். இச்சந்தர்ப்பத்தில் ஆதனத்தை விற்க வேண்டியது தவிர்க்க முடியாமல் போகலாம். அளவான வீடாக, கட்டுக்கடங்கிய மாதந்த கொடுப்பனவாக இருந்தால் ஓரளவு சமாளிக்கலாம், இருந்தும் தனிப்பட்டவர்களின் நிலைமைக்கு ஏற்பவே முடிவுகள் இருக்கும். இதனை தகுந்த நியாயமான ஆதன முகவர்களுடன் நேருக்குநேர் சந்தித்து தகுந்த ஆலோசனைகளைப் பெற்று அதற்கேற்ப முடிவுகளை எடுக்கவும்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

# நியூசிலாந்தில் தமிழ்த் தம்பதிக்கு கிடைத்த மகாராணி விருது

நியூசிலாந்து அரசால் வருடாந்தம் வழங்கப்படும் "மகாராணி விருது" ஒக்லந்தைச் சேர்ந்த தமிழ்த் தம்பதிக்கு இம்முறை வழங்கப்பட்டுள்ளது. ஜோர்ஜ் அருளானந்தம், அவரது துணைவியார் ஆன் உமா ஆகியோரே இந்த விருதினைப்பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். தமிழ்ச் சமூகத்திற்கான கல்விச்சேவைக்காக ஜோர்ஜுக்கும் சமூக சேவைக்காக உமாவுக்கும் இந்தக் கௌரவம் கிடைக்கப்பெற்றுள்ளது. 1998 இல் நியூசிலாந்தில் குடியேறிய ஜோர்ஜ் அக்காலப்பகுதியில் இங்கு அகதிகளாகத் தஞ்சம் புகுந்த தமிழ் மக்கள் முறையாகத் தம் வாழ்க்கையினை ஆரம்பிக்கும் வகையில் உகந்த நடவடிக்கைகளை மேற்கொண்டார். இவரது பணிகள் இவரை நியூசிலாந்துத் தமிழ்ச் சங்கத்தின் தலைவராக்கியதுடன் தமிழ்ச் சங்கத்தின் பணியினை மேலும் சிறப்பாக்கியது.

தமிழின் மீதும் தாயக மக்கள் மீதும் மிகுந்த நேசம் கொண்ட ஜோர்ஜ் இங்குள்ள தமிழ் மக்களுக்காகவும் தாயகத்திலிருந்து வரும் மக்களுக்காகவும் பல பொது அமைப்புகளில் இணைந்து அதில் பல முக்கிய பதவிகளை வகித்ததுடன் பல அரிய சேவைகளை மின்னாமல் முழங்காமல் பெற்றுக் கொடுத்துள்ளார். Ethnic Voice of New Zealand, Tamil Community Education, Consortium of Tamil Associations, New Zealand Refugee Council, Auckland Regional Ethnic Council, Asian Social Services New Zealand, நியூசிலாந்துத் தமிழ்ச் சங்கம் ஆகிய அமைப்புகளில் முறையே நிறைவேற்றுப் பணிப்பாளர் குழு உறுப்பினர், பணிப்பாளர் சபை உறுப்பினர், இணைப்பாளர், தலைவர் போன்ற பல பதவிகளை வகித்தார். இந்தப்பதவிகள் மூலம் நியூசிலாந்தில் குடியேறிய தமிழ் அகதிகளுக்கு குடியேற்றம் மற்றும் புது வாழ்க்கை முறைமை தொடர்பான பல கருத்தரங்குகளை அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் நடத்தினார்.

இவற்றில் போரின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இவர் ஏற்படுத்திக் கொடுத்த உளவளப் பயிற்சிச் செயலமர்வுகள் குறிப்பிடத்தக்கவை. இவர் அமைத்த குடிவரவுக்குழு இங்கு வரும் தமிழ் மக்களுக்கும் அதேவேளை இங்கு குடியேறும் தமிழர்களின் பிரச்சனைகளை குடிவரவுத் திணைக்களம் அறிந்துகொள்ளவும் தக்க பயனுள்ளதாக அமைந்தது எனில் மிகையன்று. நியூசிலாந்துப் நாடாளு மன்றத்தில் பயங்கரவாதத் தடைச்சட்ட மூலம் சமர்பிக்கப்படவிருந்த வேளை ஜோர்ஜ் இங்குள்ள தமிழ்க் கல்விமான்களை உள்ளடக்கிய ஒரு குழுவினை அமைத்து விடுதலைப்புலிகளைத் தடைசெய்வதற்கு எதிரான சந்திப்புக்களை ஏற்பாடு செய்தார். அத்துடன் இலங்கைத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் நியூசிலாந்துக்கு வரவழைத்து நியூசிலாந்தின் முக்கிய பிரமுகர்களுடன் பேசவைத்தார். நியூசிலாந்து, தமிழீழ விடுதலைப்புலிகளைத் தடை செய்யாமைக்கு இவை வழிவகுத்தன.

நியூசிலாந்தின் தமிழ் அமைப்புகளின் ஒன்றியத்திற்குத் தலைமை தாங்கி இலங்கையின் மனித உரிமைகள் தொடர்பான விடயங்கள் பற்றிய கருத்தாடல் களை நியூசிலாந்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களுடன் நடத்தி தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றியும் தனிநாட்டுக் கோரிக்கை பற்றியும் விளக்க ஏற்பாடுகள் செய்தார். கலாசார ஒருங்கிணைப்பும் பரிமாற்றமும் தொடர்பான கருத்தாடல்களை இங்குள்ள சமூகங்களுக்கிடையில் நடத்துவதில் முன்னின்றார். 2003 இல் இவர் ஆரம்பித்த தமிழ்ச் சமூகத்திற்கான கல்வி அமைப்பு மூலம் அமைக்கப்பெற்ற பூங்கா பாடசாலை - மழலைகள் முதல் வயதானோர் வரையிலான பல கல்விச் செயற்பாடுகளை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதன் முக்கிய அம்சமாக சர்வதேச ரீதியிலான தமிழ் அறிவுப்போட்டிகளும் பரீட்சைகளும் நடைபெற்று வருகின்றன. நியூசிலாந்தின் சிறப்புமிக்க தமிழ்ப் பாடசாலையாக இது இயங்கிவருவது குறிப்பிடத்தக்கது. தனியார் நிறுவனம் ஒன்றில் பொறியியலாளராகப் பணியாற்றும் ஜோர்ஜ் அருளானந்தம் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவரும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இலத்திரனியல் மின்னியல் பொறியியற் பட்டதாரியுமாவார். இவரது துணைவியார் உமா 90 களின் இறுதிப்பகுதி முதல் இங்கு வரும் அகதிகளுக்கு அவர்களின் புது வாழ்விற்கான உதவிகளை வழங்குவதில் தொண்டராகச் செயற்பட்டு வந்தார். இவர் மவுண்ட்ரொஸ்கில் சமூக சபை உறுப்பினராகவும் அதன் தலைவராகவும் பணியாற்றினார். நியூசிலாந்து ஆசிய சமூக சேவை நிறுவனம் தேசிய அகதிகள் நிறுவனம் ஆகியவற்றின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். Auckland Refugee Community Coalition அமைப்பின் உப தலைவராக பணியாற்றிய வேளை அகதிகள் சமூகங்களுக்கான முன்பள்ளிப் பாடசாலை ஏற்பாடுகளில் முக்கிய பங்காற்றினார். அகதிகள் மீள் குடியேற்றத்தை வலுப்படுத்தல் தொடர்பில் பல சமூகங்களையும் கொண்ட அகதிகள் பெண்கள் குழாம் ஒன்றை ஆரம்பித்தார். தமிழ் சமூகத்திற்கான கல்வி Tamil Community Education அமைப்பின் பூங்கா தமிழ்ப் பாடசாலையின் இணைப்பாளராகப் பணியாற்றிய இவர் நியூசிலாந்து ஆரம்பக்கல்விப் பாட விதானத்தைத் தழுவிய வகையில் தமிழ் மொழியைக் குழந்தைகளுக்குக் கற்பிக்கும் வகையில் முன்பள்ளியை இதில் ஆரம்பித்தார்.



இத்தமிழ்ப்பாடசாலை மூலம் இந்நாட்டின் கல்வி அமைச்சுடன் ஊடாட்டத்தை ஏற்படுத்திக்கொண்டார் ஆன் உமா ஜோர்ஜ் பல அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதியாகப் பல வெளிநாட்டு மாநாடுகளிலும் கருத்தாடல்களிலும் கலந்து கொண்டுள்ளார். சுனாமி அனர்த்தம் நிகழ்ந்த வேளை Association of Medical Doctors of Asia (AMDA) அமைப்பின் தொண்டராகத் தாயகம் சென்று பணியாற்றினார். இது தொடர்பான ஆய்வுக்கட்டுரையை இவர் 2005 இல் ஜப்பானில் நடைபெற்ற அனர்த்த நிவாரணம் தொடர்பான மாநாட்டில் சமர்ப்பித்திருந்தார். ஜெனீவாவிலுள்ள ஐ.நா தலைமையகத்தின் அனைத்துலக மாநாட்டு நிலையத்தில் நடைபெற்ற அரசசார்பற்ற நிறுவனங்களுடனான ஆலோசனை அமர்விலும் கலந்துகொண்டார். சூரிச்சில் நடைபெற்ற ஜெனிவா கோல் 'Geneva Call '2006 மாநாட்டிலும் பங்குபற்றினார். Asian Pacific Refugee Right Network (APRRN) அமைப்பின் உறுப்பினரான இவர் தாய்லாந்தில் நடைபெற்ற அகதிகள் உரிமை தொடர்பான ஆலோசனை அமர்விலும் கலந்துகொண்டார். ஆசிரியையான ஆன் உமா ஜோர்ஜ் சமூக சேவையில் உள்ள ஆர்வம் காரணமாக சமூகப்பணியில் பட்டதாரியானார்.

அமைதியின் குரல் - Words of Peace

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

1-877-707-3221 / தமிழில் - 416.431.5000

- MAHARAJI -

மஹராஜியின் உரைகள்

On DVD

இலவச DVDக்கு அழையுங்கள்
(416) 431-5000
1 877 707 3221

On TV

Saturdays at 11:00 am
Rogers Cable Channel - 20
Bell Express vu Channel - 219



# சீனாவின் வீட்டு விலை குறைகின்றது?

கடந்த 10 ஆண்டுகளாக தொடர்ச்சியாக அதிகரித்து வந்த சீனாவின் வீட்டுவிலை இறங்கத் தொடங்குகின்றதா? என்ற அச்சம் சீனமக்களுக்கு தோன்றுகின்றது.

இதன் காரணம் என்னவாகலாம்?
கடந்த பல வருடங்களாக சீனாவின் GDP (Gross Domestic Product) ஒன்பது வீதமாகக் காணப்பட்டது. 2008/2009 இல் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலையில், சீனாவிலும் இதன் தாக்கம் ஏற்பட்ட சந்தர்ப்பத்தில் சீன அரசு $700 பில்லியன் பெறுமதியான பணத்தை, பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்கு பாவித்ததன் மூலம் பொருளாதாரத்தின் நிலையை தாக்கிப்பிடித்தது. உலகளாவிய பொருளாதார பாதிப்பு சீனாவில்



ஏற்படவில்லை.

இப்பொழுது ஆதனவிலையில் ஏற்படும் வீழ்ச்சி, ஆதனத்தில் முதலீட்டின் தொகையில் குறைவு, வெளிநாடுகளின் பொருளாதார நெருக்கடியால் ஏற்றுமதியில் குறைவு இவை போன்ற காரணங்கள் சீனா பொருளாதார இறக்கத்திற்கு முகம் கொடுக்க வேண்டி ஏற்படலாம்.

இதற்கு சான்றுபகர்வது போல கடந்த ஆண்டின் (2011) டிசம்பர் மாதத்தின் நடுப்பகுதியில் வீடு/இல்லம் நிர்மாணம் செய்யும் பல நிர்மாண நிறுவனங்கள் விற்கும் விலையை 20% இனால் சடுதியாக குறைத்தன.

பீஜிங் (Beijing) பொருளாதாரத்திற்கு முண்டு கொடுப்பதற்காக வரிகளை குறைத்து, ஏற்றுமதிக்கான வரிகளையும் குறைத்துள்ளது. இவை சரிவராத கட்டத்தில் சீன அரசு இரண்டாவது தடை-வயாகவும் பொருளாதார ஊக்கியாக, பெரிய தொகையை பொருளாதாரத்திற்குள் கொண்டுவரலாம்? (Stimulus Package) என எதிர்பார்க்கலாமா?

இன்றைய உலக நிலைப்பாட்டில் நாடுகளிற்கிடையேயான பொருளாதார வர்த்தகமும் மிகவும் இறுக்கமாகப் பிணைந்துள்ளது. அதுமட்டுமல்லாமல் உலகளாவிய தொலைத்தொடர்பு சாதனங்கள், Social Media போன்றவை நாடுகளில் நடப்பவற்றை உடனுக்குடன் அப்பட்டமாக படங்களுடன் காட்டுகின்றன. மறைப்பதற்கு ஏதுமில்லாமல் போயிற்று.

10 வருடங்களிற்கு முன்பு உலகநாடுகளில் எண்ணக்கூடிய சில நாடுகளே உலக பொருளாதாரத்தை நிர்ணயித்து கொண்டன. உதாரணமாக G7 போன்ற நாடுகளைச் சொல்லாம். இந்த நாடுகளின் பொருளாதார நிலை, நிலைமாற்றம் அடையும்போது G20 என்ற தொகுதி நாடுகள் உருவாக்கப்பட்டன. இவற்றில் முக்கியமாக BRIC (Brazil, Russia, India மற்றும் China) போன்ற நாடுகள் உலகில் முக்கிய இடத்தை பிடித்துள்ளன.

இப்பொழுது GØ என்றும் பேசத்தொடங்கியுள்ளனர். எனினும் கனடிய பொருளாதாரம் சிறிதளவு மந்த கதி ஏற்பட்டாலும் பெரிதான பாதிப்பு ஏற்படும் எனக்கூறமுடியாது.

ஒரு காலத்தில் அதிகூடிய சனத்தொகை, அந்தந்த நாட்டிற்கு சுமையாக இருந்தது. இப்பொழுது அந்த பெரிய சனத்தொகையே பொருளாதாரத்திற்கு பலமாகக் காணப்படுகின்றது. அமெரிக்க வீட்டுவியாபாரம் கடந்த பலஆண்டுகளாக நெருக்கடியிலே உள்ளது. இன்னம் திசை தெரியாமலே அமெரிக்க பொருளாதாரம் உள்ளது.

கடந்த வருடத்தில் ஐரோப்பிய பொருளாதார நெருக்கடி, இப்பொழுது சீனாவின் பொருளாதாரமும், இந்தியாவின் பொருளாதாரமும் ஆரோக்கியமானதாக அல்லது சிறந்ததாக உள்ளது என்று கூறமுடியாது.

இருப்பினும், இதுவரை கனடிய பொருளாதாரம் நிலையாக காணப்படுகின்றது. ஆனால் எதிர்காலத்தில் இறக்கம் ஏற்படலாம் என நிதி அமைச்சர் ஊகம் தெரிவித்துள்ளார்.

இதுவரை கனடிய ஆதனச்சந்தையும் தொடர்ச்சியான வளர்ச்சியையே காட்டி வருகின்றது. புதிதுபுதிதாக கொண்டுவரப்படும் அடுக்குமாடி மனையானாலும், தனியான வீடுகளானாலும் உடனடியாக விற்கப்படுகின்றன. அத்துடன் வாடகையின் நிலைமையும் மிகவும் சிறப்பாகவே காணப்படுகின்றன. எதிர்காலத்து நிலைமை எவ்வாறு இருக்கலாம்!

கனடிய மத்தியிலுள்ள அறுதிப்பெரும்பான்மை கொண்டுள்ள அரசு முன்னெச்சரிக்கையாக பல முன் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதால் கனடிய பொருளாதாரம் ஓரளவு தாக்குப்பிடிக்கும். எனவே ஆதனத்தின் விலையில் அதிக வீழ்ச்சியை எதிர்பார்க்க முடியாது.

# சங்க இலக்கியத்தில் காதலும் நவீன இலக்கியத்தில் காதலும் - காட்சிப்படிமமும்

மனித வாழ்வியல் இன்பத்தை அடிநாதமாகக்கொண்டது. இல்வாழ்க்கையில் இன்பம் தருவது இளமைப்பருவம். குழந்தை, பேதை, பெதும்பை, மடந்தை, மங்கை, பேரிளம் பெண் எனப் பெண்களின் வளர்ச்சிப் பருவங்களைப் பகுத்துப் பார்த்துள்ளனர் எம்முன்னோர். ஒவ்வொரு பருவத்தினருக்கும் உள்ள பண்புக்கூறுகள் அவர்களின் வளர்ச்சிப் பருவங்களோடு தொடர்பு பட்டுள்ளமையை வெளிப்படுத்தும் வகையில் அவை அமைந்துள்ளன.

**- த. சிவபாலு -**

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர். - குறள் 66

என மழலப் பருவத்து இனிமைபற்றிக் குறிப்பிடுகின்றார் வள்ளுவர். அதுமட்டுமன்றிப் பெற்றோருக்கு இன்பம் தருகின்ற ஒரு பருவம் குழந்தைப் பருவமே என்பதற்கு அவர் மேலும்

மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டல் இன்பம் செவிக்கு - குறள் 68

எனக் குறிப்பால் குழந்தைகளோடு விளையாடி மகிழும் இன்பம் அவர்கள் வளர்ந்தவர்களாக வந்துற்றபோது கிடைப்பதில்லை.

வாலிப வயதின் வனப்பு ஆண், பெண் இருபாலாரிடமும் கவர்ச்சி, ஆகர்ச்சனம், உள்ளுணர்வு என்பனவற்றைப் பார்ப்பவர்களிடையே ஏற்படுத்துகின்றது. பார்த்தமாத்திரத்தே மனதைப் பறிகொடுப்போரும் உண்டு. காதல் இன்பம் காமத்தில் உச்சத்திற்குச் செல்லும் என்பார்கள். காமத்தினால் தன்னையே மறக்கும் நிலைக்கு காரிகையரும் சரி காளையரும் சரி செல்வார்கள். நோய்களுள் கொடியது காமநோய் என்பார்கள். காமம் தலைக்கேறின் கற்றது மற்றது, சுற்றம் எல்லாம் மறந்துபடும் என்பது எத்துணை உண்மை என்பதனை சற்று நோக்குங்கால் வள்ளுவர் காமம் பற்றிக்கூறுவதனைப் பார்க்கலாம்.

காமம் கணிச்சி உடைக்கும் நிறை-யென்னும்
நாணுத்தாள் உடைக்கும் கதவு. - குறள் 1251

மனிதரிடையே உள்ள நாணம் என்னும் கதவின் பூட்டை உடைத்துக்கொண்டு வரக்கூடிய திண்மை உடையது காமஉணர்ச்சி. அதனைத் தடுக்கமுடியாது காமநோய் கொண்டவர்களால் என்பது காதலர்களின் உள்ளக் கிடக்கையையும் அவர்களிடம் ஏற்படும் அசாதாரண துணிவையும் எடுத்துக்காட்டுகின்றது.

சங்க இலக்கிய மரபில் ஒவ்வொரு பிரதேசத்திற்கும் ஏற்ப காதலொழுக்கம் சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. புலவர்களின் ஆற்றல் வெளிப்பாடாக அக்காலத்துக் கவிதைமரவில் காதல் ஒழுக்கம் காட்டப்பட்டுள்ளமை வெளிப்படை. ஒவ்வொரு நிலத்தின் சிறப்பினை அங்குள்ள இயற்கைக்காட்சிகள், பயிர்செடிகள், போர் ஒழுக்கம் என்பனவற்றோடு இணைத்து காதலர் நெஞ்சத்து எழுச்சிகளையும் அவர்களின் உள்ளத்து உறைந்து கிடக்கும் உணர்வுகளையும் நேரிடையாகவோ அன்றி தோழியின் அல்லது செவிலித்தாயின் வழியோ எடுத்துக்காட்டும் பாங்கு கற்கும்தோறும் இனிமை பயப்பது.

ஐவகை நிலத்திற்குரிய காதல் ஒழுக்கம் பற்றித் தொடரும் கட்டுரைகளில் பார்க்கலாம்.

# வெகுளாமை (Calm) - 6

'நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்:பகையும் உளவோ பிற?' (குறள் 304 அதிகாரம் 31 - வெகுளாமை) திருவள்ளுவரின் இந்தக் குறளுடன் இந்த இதழின் உரையாடலை ஆரம்பிப்போம். 'ஒருவனுடைய சிரிப்பையும், அகமகிழ்ச்சியாகிய இன்பத்தையும் கொல்கின்ற கோபத்தை விடப் பகையானவை வேறு உள்ளனவோ? மனித வாழ்க்கையில் சிரிப்பும், அகமகிழ்ச்சியும் மிகவும் ஆரோக்கியமான செயற்பாடுகளாக உள்ளன. இவற்றை அழிக்கும் கோபத்தை விடப் பகையான விடயம் எதுவுமில்லை என்று திருவள்ளுவர் எடுத்தியம்பியுள்ளார். கனடாவில் வாழும் பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர் எழுதிய 'வெற்றி பெற' என்ற நூலில் 'கோபம் கொள்ள வேண்டும். கோபம் கொள்ளக் கூடாது என்று வாதிடும் மக்கள் பலர் உள்ளனர். இரு பக்க நியாயங்களையும் சீர்தூக்கிப் பார்த்து முடிவு கட்டுதல் சாலச் சிறந்ததாகும்' என்று குறிப்பிட்டுள்ளார். ஆம் வாசகர்களே! எனது தொடர் கட்டுரையிலும் இந்த இரு பக்க நியாயங்களும் ஆராயப்படுகின்றன. வெகுளாமை என்ற திறமை கொண்ட ஒருவர் எப்போது, எவ்வாறு, எதற்குக் கோபப்படலாம் அல்லது கோபப்படக் கூடாது என்று அறிந்து செயற்படுவர் என்பதே எனது கருத்தாகும்.

கலாநிதி வில்லியம் கிரே டிவூர் குறிப்பிடும் இன்னுமொரு விடயம் 'மனிதர் தமது உணர்ச்சியாகிய கோபம் பற்றிக் கொண்டுள்ள பயம் காரணமாக நெறிப்படுத்தப்படாது அவர்களின் கோபம் புதைக்கப்படுகின்றது' என்பதாகும். நாங்கள் கோபத்தை வெளிப்படுத்தினால் எங்களை யாரும் விரும்ப மாட்டார்கள் என நினைப்பது கோபத்தை உள்ளே புதைப்பதற்குரிய அடிப்படைக் காரணமாகும். எங்கள் உணர்வுகளை உள்ளே அடக்காது வெளிப்படுத்தினால் என்ன பாதிப்பை ஏற்படுத்துமோ என்ற பயம் பொதுவாக நிலவுவதுண்டு. இவ்வாறான நிலைமைகளில் இருந்து விடுபட்டுக்கொள்வதற்குப் பின்வரும் தீர்மானங்களை நாங்கள் எடுத்துக் கொள்ளலாம்.



'எங்கள் கோபம் எங்கள் பாதுகாப்பிற்குரியது. நாங்கள் பாதுகாப்பாக இருப்பதாக உணர்ந்து கொள்வது அவசியம்.

'எங்கள் கோபம் முற்றிலும் இயற்கையான உணர்ச்சி.

'எங்கள் உடலில் உள்ள எல்லாப் பகுதிகளையும் போல எங்கள் கோபமும் தேவையானது.

'எங்கள் கோபத்தைப் பலத்துடனும், ஆரோக்கியத்திடனும் இருப்பதற்காகப் பயன்படுத்த முடியும்.

'நாங்கள் நேசிக்கின்றவர்களைப் பாதுகாப்பதற்கு எங்கள் கோபத்தைப் பயன்படுத்த முடியும்.

எமது உணர்ச்சிகள் காய்கறிகளைப் போன்றவை என்று கூறுவதுண்டு. காய்கறிகளை அவ்வப்போது பயன்படுத்தாது விட்டால் பழுதடைந்து பயனற்றதாகி விடும். அதுபோல் எமது உணர்ச்சிகளை உரிய முறையில் அவ்வப்போது பயன்படுத்த வேண்டும். அன்றேல் எமது உணர்ச்சிகள் பயனற்றதாகி விடும். இந்த உதாரணம்



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

Train to be a ...
Community Service Worker With CO-OP
Other Diploma Programs:
Computerized Accounting
THE CANADIAN PAYROLL ASSOCIATION CPA ACP L'ASSOCIATION CANADIENNE DE LA PAIE
Network Engineering
Microsoft | IT Academy Program
Business Administration
Medical Office Assistant
EI, WSIB, ODSP Clients and New Immigrants welcome

citi COLLEGE
You may qualify for
SECOND CAREER
If you are laid off after January 2005
Working less than 20 hours / week
Call us now for details
(416) 840-9179
www.CitiCollege.ca
Customized Corporate Training available for:
MS-Office 2003, 2007, 2010
Upgrade MS-Office 2003 to 2007 or 2010
Microsoft server 2003 and 2008 Subjects
A+ Certification / Cisco CCNA
OACC PROUD MEMBER ontario association of career colleges
Call Now: (416) 840-9179
Registered as a Private Career College under the Private Career Colleges Act, 2005
Financial Assistance may be available to those who qualify

# வெகுளாமை...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

கோபம் என்ற உணர்ச்சிக்கும் பொருந்து கின்றது. எங்களின் கோப உணர்ச்சியை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தாது அதிக காலம் புதைத்து வைத்திருக்கும் பொழுது காய்கறிகளைப்போல் அந்த உணர்ச்சியும் பயனற்றதாகி விடும்.




ஒரு குடும்பத்தின் உண்மைக் கதை ஒன்றை எடுத்துக் கொள்வோம். அந்தக் குடும்பத்தில் மனைவி நாள் தோறும் தாமதமாக நித்திரை யில் இருந்து எழும்புவார். அவர் சிறுவயதில் இருந்து பழகிக் கொண்ட பழக்கம் அவ்வாறே இருந்தது. அவளின் பெற்றோர் அவளை ஒருபோதும் இதற்காகக் கண்டித்தது கிடையாது. ஆனால் அவளின் இந்தப் பழக்கம் இல்லற வாழ்க்கையில் சில சிக்கல்களை உருவாக்கியது. காலையில் அவசர அவசரமாக வேலைக்குப் புறப்படும் கணவனுக்கு வேண்டிய அலுவல்களை மனைவி கவனிப்பதில்லை. அதனால் மனைவி மீது கணவன் கோபப்படுவது வழக்கமாகி விட்டது. ஆனால் மனைவியால் இதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அவர்களிற்கிடையில் விரிசல் நாளுக்கு நாள் அதிகரித்துச் சென்றது. இவ்வாறான நிலைமைகள் பல குடும்பங்களில் காணப்படுகின்றது. மனைவி சிறு பராயத்திலிருந்து பழக்கப்பட்டதனால் தன்னை மாற்றிக் கொள்ளமுடியாதவளாக உள்ளார் என்பதைக் கணவன் புரிந்து கொள்ள வேண்டும். மனைவியும் தன்னை மாற்றிக் கொள்ள முயலவேண்டும். இல்லறத்தில் விட்டுக் கொடுப்புக்கள் அவசியமானது. இவ்வாறாக சிறு விடயங்களில் ஏற்படும் கோபம் நாளடைவில் பூதாகரமாகி விடுவது உண்டு.

சென்ற இதழில் கோபத்தைத் தணித்துக் கொள்வதற்கான வழிமுறைகளாக நடத்தல், நகைச்சுவையான படங்களைப் பார்த்தல் எனப் பல்வேறு வழிமுறைகள் பற்றிக் குறிப்பிட்டிருந்தேன். இவை யாவும் கோபத்தினால் ஆபத்து ஏற்படாது இருப்பதற்காக ஒருவர் மேற்கொள்ள வேண்டிய தற்காலிகமான நடவடிக்கைகளே ஆகும். இவை நிரந்தரமான தீர்வு இல்லை என்பதை நாங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். ஒரு முக்கோண கூர்னுனிக் கோபுரப்படமாக (Pyramid diagram) இந்த விடயத்தைக் கற்பனை செய்து கொண்டால் அதன் மேற்பகுதியான பத்து வீதமான படலமே கோபம் ஆகும். மிகுதி தொண்ணூறு வீதமும் வலி (Pain), பயம் (Fear), சுய பெறுமதியின்மை (no Self-worth) போன்ற படலங்கள் இருக்கும். கீழே உள்ள இந்த மூன்று விடயங்களை நீக்கினால் மட்டுமே கோபத்திற்கான நிரந்தரத் தீர்வு ஏற்படும். கோபத்தின் பின்புலமாக வலி, பயம், சுய பெறுமதி யின்மை போன்ற விடயங்கள் புதைந்து கிடப்பது பற்றிக் குறிப்பிடுவதால் இந்த அணுகுமுறையைக் கோபத்தின் தொல் பொருளாராய்ச்சி (Archaeology of Anger) என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். எங்களுக்கு ஏற்படும் கோபத்திற்குக் காரணமாக உள்ளே புதைந்து கிடக்கும் விடயங்களைக் காண வேண்டும். அடிப்படையில் நாங்கள் சுய பெறுமதி கொண்டவர்களாக (Self-worth) இருக்க வேண்டும். இதற்கான சுலபமான ஒரு வழிமுறை ஆன்மீகப் பயிற்சியாகும். ஆன்மீகப் பயிற்சியால் ஒருவர் சாந்த சீலராக இருப்பதற்கான அடிப்படைக் காரணம், அவர் மிகுந்த சுய பெறுமதி கொண்டவராக இருப்பதே ஆகும். சுய பெறுமதி ஏற்படும் பொழுது வலி, பயம் போன்ற விடயங்கள் மனத்தில் குடி கொள்ள இடமில்லை. அதனால் தேவையற்ற கோபம் உருவாகவும் இடமில்லை. ஒரு தொல்பொருளாய்வாளர் தொல்பொருளாராய்ச்சியில் தேடுவது போல கோபத்தின் பின்புலங்களை அறிய முற்பட வேண்டும். இவற்றை அறிந்து அவற்றை நீக்குவதே நிரந்தரமான தீர்வாக இருக்கும். சுய பெறுமதி என்றால் என்ன என்பது பற்றிச் சிறிது விரிவாக ஆராய்ந்து கொள்ளுதல் அவசியம் என்று நினைக்கின்றேன். நாங்கள் சுய கௌரவம் (Self-esteem) பற்றி அறிந்திருக்கின்றோம். எங்களைப் பற்றி நாங்கள் கொண்டுள்ள உணர்வுதான் சுய கௌரவம். இது இலகுவாக மாற்றப்படக் கூடியது. சுய பெறுமதி என்பது முற்றிலும் வேறான ஒரு விடயம். நாங்கள் பிறக்கும் பொழுது ஒரு குறிப்பிட்ட சுய பெறுமதி கொண்டவர்களாகப் பிறக்கின்றோம். இதனை நாம் இழக்க முடியாது. ஆனால் வாழ்க்கை முறைகளினால் எங்களின் சுய பெறுமதி மறைக்கப்பட்டு எங்கள் பெறுமதியை மறந்தவர்களாக மாறி விடுவோம். ஆன்மீகப் பயிற்சியால் எங்கள் பெறுமதியை மீண்டும் நினைவிற்குக் கொண்டுவரலாம். 'உங்களைப் போல் பிறரையும் நேசியுங்கள்' என்ற கோட்பாட்டை அமல் படுத்துவதற்கும் சுய பெறுமதி அவசியம். எங்களையும், எங்கள் சுய பெறுமதியையும் நேசித்தால் மட்டுமே எங்களால் பிறரை நேசிக்க முடியும். இந்தத் தன்மை எங்களைப் பொறுப்பு வாய்ந்தவர்களாக இருக்கச் செய்யும். இதன் மூலம் வெகுளாமை என்ற திறமை கொண்டவர்களாக சமூகத்தில் எங்களால் வாழமுடியும் என்று கூறிக்கொண்டு இன்றைய உரையாடலை நிறைவு செய்கின்றேன்.

அன்பான வாசகர்களே!

'விளம்பரம்' பத்திரிகையில் நான் எழுதிய 'நினைவாற்றல்' தொடர்கட்டுரை பல வாசகர்களின் வேண்டுகோளுக்கேற்ப வண்ணப்படங்களுடன் நூல் உருவில் வெளிவந்துள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியையும் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றேன். இந்த நூலினை விளம்பரம் பத்திரிகை அலுவலகத்தில் வாங்க முடியும். இந்த நூல் வெளிவர உதவிய 'விளம்பரம்' நிருவாகத்தினர், வாசகப் பெருமக்கள் எனப் பலருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நூலினை வாங்கிப் பயன் பெறுவதோடு, உங்களின் ஆதரவு மூலம் மேலும் பல படைப்புக்களைக் கொண்டுவர என்னை ஊக்குவிப்பீர்கள் என்ற நம்பிக்கையுடன் விடைபெறுகின்றேன். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.

வெளிவந்துவிட்டது !

அகணியின்

"நினைவாற்றல் " அறிவியல் நூல்

Memory book ! (200 Pages)

நூலின் உள்ளே

மன வரைபடம்
மூளை உறுப்புக்கள்
மூளையின் தொழிற்பாடு
மூளைப் பயிற்சிகள்
நினைவாற்றல் நுட்பங்கள்
குறைபாடுகள்
உணவுகள்
மேலும் பல்வேறு விபரங்களுடன்




கற்போர்
பெற்றோர்
முதியோர்
கற்பிப்போர்
அனைவருக்கும்
பயனுள்ள
ஒரு நூல்

கடந்த ஒரு வருட காலமாக "விளம்பரம்" பத்திரிகையில் வெளிவந்த "நினைவாற்றல்" தொடர்கட்டுரை பல வாசகர்களின் வேண்டுகோளுக்கிணங்க "நினைவாற்றல்" வண்ணப்படங்களுடன் நூல் உருவில் வெளிவந்துள்ளது.

இந்த நூலினை விளம்பரம் அலுவலகத்தில் வாங்கிக்கொள்ளலாம்

# புலரட்டும் புதியவாழ்வு!



நிலமகளை நேசித்து
உழுதுண்டு வாழ்ந்து
உயர்ந்திட்ட தமிழினமே!

ஊரைவிட்டு வந்தாய்
உலகமெல்லாம் கண்டாய்
புலமண்ணின் பெருமைக்காய்
பெரிதும் உழைத்திட்டாய்

என்றாலும் எங்கள் தாய்வழியை
நெல்விளைத்து சோறுடைத்து பண்பாட்டை
எள்ளளவும் மறக்காது பொங்குகிறாய்
பொங்கு! பொங்கி மகிழ்
புலரட்டும் புதுவாழ்வு தமிழர்க்கெல்லாம்.

- தவா மயில்வாகனம்
ஹொலண்ட்

# வாழ்க்கை நம் கையில்!

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய

இயற்கையால் படைக்கப்பட்ட உயிரினங்களில் மனித இனத்தை மட்டுமே ஆறறிவு அதாவது எதையும் பகுத்தறியும் தன்மை கொண்ட இனமாகப் படைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு படைக்கப்பட்ட மனிதன் தனது தவறான செயல்களால் இயற்கையைச் சீரழித்து இன்று நோயும் மருந்துமாக வாழ்கிறான். காற்றை - ஆகாயத்தை மாசுபடுத்தி தான் வாழும் சூழ்நிலையையே மாசுபடுத்துகிறான். அதன் விளைவே நோய். இன்று 40வயதைத் தாண்டியவர்களில் 80வீதமானோர் தினமும் மருந்து மாத்திரைகளை உட்கொள்பவர்களாகவே இருக்கின்றனர்.

எந்த நோயும் தானாக வருவதில்லை. அதனை நாமே வரவழைத்துக் கொள்கிறோம். இதற்கு பிறரைக் குற்றம் சொல்லவேண்டியதில்லை. இன்றைய பொருளாதார தேடலில் உடலைப் பேணுவதுபற்றி யாரும் நினைப்பதில்லை. பொருள் என்பது அனைவருக்கும் தேவைதான். அதற்காக உடலைப் பாதுகாக்காதிருப்பது தற்கொலைக்குச் சமனாகும் நோய் வந்த பின் மருத்துவர்களை நாடுகிறார்களே தவிர அந்த நோய் வந்த காரணத்தை அறிய எவரும் முயற்சிப்பதில்லை. அதற்கு நேரமும் இல்லை.

பொதுவாக நோய் வருவதற்கான காரணங்களை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. புறச்சூழ்நிலைகளால் வருவது அதாவது உணவு பழக்கவழக்கம்.

2. அகச் சூழ்நிலையால் வருவது அதாவது மனது சம்பந்தப்பட்டது.

இதைத்தான் சித்தர்கள் மலச்சிக்கலும் மனச்சிக்கலும் ஆதிநோய்கள் என்கின்றனர். இதில் எந்த ஒன்று இருந்தாலும் மற்றொரு சிக்கலும் அழைக்காமல் வந்து ஒட்டிக்கொள்ளும். உணவு என்பது இப்போது பசியைப் போக்குவது தான் என்றாகிவிட்டது. அவசர கதியில் விரைவாக உண்பதால் நோய்களும் விரைவாக வந்துவிடுகின்றன. உணவை உண்ணும் முன் முகம் கைகள் சுத்தம் செய்து இருக்கையில் அமர்ந்து சாப்பிட வேண்டும். எளிதில் ஜீரணமாகும் உணவுகளையே உண்ண வேண்டும். கோபம், மனச்சஞ்சலம், துக்கம் உண்டான நேரங்களில் உண்பதைத் தவிர்க்க வேண்டும். சாப்பிடும் போது கதைத்துக் கொண்டும், தொலைக்காட்சி பார்ப்பதையும் தவிர்ப்பது நல்லது.

உணவானது அனைத்துச் சத்துக்களும் சரிவர இருக்கும் வகையில் இருக்க வேண்டும். அதாவது அறுசுவை உணவாக இருக்க வேண்டும். எண்ணெயில் பொரித்த, எளிதில் ஜீரணமாகாத உணவுகள், வாயுவை அதிகரிக்கச் செய்யும் உணவுகளைத் தவிர்க்க வேண்டும்.



குறிப்பாக காலை உணவு முக்கியமானது. இரவு உணவு மென்மையானதாகவும் எளிதில் சமிபாடடையக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் இரவு உணவை வேளைக்கு முடித்து சற்று நடைப்பயிற்சி செய்ய வேண்டும்.

### அகச் சூழ்நிலை

அகச்சூழ்நிலை என்பது உடலுக்குள் நடைபெறும் செயல்களைக் குறிக்கிறது. உடலுக்குள் வாதம், பித்தம், வாயு போன்றவற்றின் செயல்பாடுகள் சீர்குலைவ-தால் உடல் நோய்வாய்படுகிறது. அத்துடன் மனித மனத்தை குரங்கிற்கு ஒப்பிடுகின்றனர். நிமிடத்திற்கு நிமிடம் நொடிக்கு நொடி மாறக்கூடியது தான். மனம் எதையும் பணம் கொடுத்து வாங்கலாம். ஆனால் மனஅமைதி தேடி எங்கே போவது? கோயில்களுக்குப் போகலாம், விரதம் இருக்கலாம். மன அமைதி கிடைக்குமா? அது ஆழ்மனதிலிருந்துதான் வரவேண்டும். அதை எப்படி அடைவது? ஒருவருக்கு மனஅழுத்தம் ஏற்படும்போது அதற்காக மருந்து வகைகளை உட்கொள்ளவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார். அந்த மருந்தின் மூலம் பூரணமாக குணமடைந்தவர் யாரும் உண்டா? இல்லை என்று தான் பதில் கிடைக்கிறது.

இவ்வாறான மனத்தைச் செம்மைப்படுத்தத்தான் நம் முன்னோர் கோயில்களைக் கட்டிவைத்தனர். அதோடு பூஜைகள் கூட்டுப்பிரார்த்தனை போன்றவற்றை நெறிப்படுத்தினர். ஆனால் இப்போதுள்ள வாழ்க்கை முறையில் நாளாந்த வாழ்விலே மன இறுக்கம் அதிகரித்து மருத்துவத்துறையில் கண்டுகொள்ளப்படாத நோய்கள், எந்த மருந்திற்கும் கட்டுப்படாத பிணிகள் உருவாகின்றன.

### இதற்கான தீர்வுகள்

1. உடலை எப்போதும் இறுக்கமாக (Flexion) ஆக வைத்துக் கொள்ள வேண்டும். நடைப்பயிற்சி யோகாசனப் பயிற்சி என்பன முக்கியமானது.

2. பிராணாயாமம் என்னும் மூச்சுப்பயிற்சி முறைகள் மனதில் தோன்றும் எதிர்மறையான (Negative Thought) எண்ணங்களை நீக்கி உள்ளத்தை அமைதிப்படுத்துகின்றது.

### விசேட மூச்சுப் பயிற்சிகள்

1. கபாலபாதி - 3 சுற்றுகள்
2. அனுலோமா - வினுலோமா - 9 சுற்றுகள்
3. சித்தாளி - 5 தடவைகள்
4. பரமாரி - 3 தடவைகள்
5. பன்திரிகா - 5 சுற்றுகள்

இதனால் ரத்தம் சுத்தமாகின்றது, நரம்புகளுக்கு புத்துணர்ச்சி ஏற்படுகிறது, தோல்வியாதிகள் நீங்குகின்றன. உடலிலுள்ள நோய்க் கிருமிகள் அனைத்தும் அழிகின்றன. அழகும் இளமையும் மேலோங்குகின்றன.

இதனைத் தொடர்ந்து மனதை ஒருமுகப்படுத்தும் தியானப்பயிற்சி செய்ய வேண்டும். வாழ்வில் எதை எதையோ அடைய வேண்டுமென்று நினைத்தால் அதையே கருப்பொருளாகக் கொண்டு தியானமுறையில் இருக்கவும். நாளடைவில் நினைப்பது நிறைவேறுவதை காணமுடியும்.



ஆரோக்கிய வாழ்வு
N. செல்வசோதி
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721



mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்


Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022
5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# இலட்சியம் ஒருபோதும் சாகாது!

## நேர்காணல்: நடிகர் விவேக்

சென்ற இதழ் தொடர்ச்சி...

தமிழ்த் திரையுலகின் நகைச்சுவையில் எத்தகைய மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன?

“நகைச்சுவை நடிகர்களை உடனடியாக மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். நிறைய சோதனைகளுக்குப் பிறகுதான் ஏற்றுக் கொள்வார்கள். அந்த சோதனைகளில் வெற்றிபெற்று மக்கள் மனங்களில் இடம்பிடித்து விட்டால் அப்புறம் அவர் ராஜ்ஜியம்தான். அப்படி மக்கள் ஏற்றுக் கொண்ட இக்கால நகைச்சுவை நடிகர்கள் கவுண்டமணி, செந்தில், வடிவேல் மற்றும் நான் இந்த நால்வர்தான். மற்றவர்கள் வருவார்கள், கொஞ்சம் காலம் நிற்பார்கள். பிறகு மக்களின் சோதனையில் தாக்குப்பிடிக்க முடியாமல் போய்விடுவார்கள். நான் குறிப்பிட்ட நால்வரில் கவுண்டமணி, செந்தில் இருவரும் ஒரு ஸ்டைலை ஏற்படுத்தி வைத்திருந்தார்கள். அதன்பிறகு வந்தவர்களில், கிராமிய மணத்தில் வடிவேலுவும் படித்த நடுத்தட்டு மக்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கிற நகைச் சுவைகளை நானும் செய்தோம். அது இப்படியே தொடர்கிறது.”

உங்களுக்குச் சவாலாக இருந்த நகைச்சுவை நடிகர்கள் யார் யார்?

“வி.கே.ராமசாமிதான். மற்ற யாராக இருந்தாலும் நான் சமாளித்து விடுவேன். அவரிடம் அது முடியவில்லை. ‘தம்பிக்கு ஒரு பாட்டு’ என்றொரு படம். அந்தப் படத்தில் அவர் ஹவுஸ் ஓனர். நான் வாடகைக்கு வீடு கேட்பேன். அந்தக் காட்சியில் நடிக்கப் போகும் போது இவர் போன தலைமுறை ஆள்தானே, எளிதாகச் சமாளித்து விடலாம் என்று நினைத்துக் கொண்டு போனேன். வாடகை பற்றிப் பேசுகிற மாதிரி காட்சி. அவர், வாடகை ஆயிரம் ரூபாய் என்பார். அதற்கு நான், கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்றதும் சட்டென ஒரு ரூமை இடிக்க முடியுமா என்று அவர் கேட்க, யூனிட்டில் எல்லோரும் சிரித்துவிட்டார்கள். அதன்பின்னும் அந்தக் காட்சி தொடர்கிறது. வாடகை எழுநூறு, அறுநூறு என்று பேரம் பேசுவோம். ஒரு இடத்தில் உங்களுக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம் அறுநூற்றைம்பது என்று சொல்ல வேண்டும். நான் உங்களுக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம் என்றதும், அப்ப யாருக்குக் கொடுக்கலாம்னு இருக்கே என்று கேட்டுவிட்டார். அப்போதும் எல்லோரும் சிரித்துவிட்டார்கள். இதை மனதில் வைத்துக்கொண்டு ‘நினைவுள்ள வரை’ என்கிற படத்தில் நடிக்கும்போது, ரிகர்சலில் ஒன்றும் பேசமாட்டேன். டேக்கில் சில வசனங்களைச் சேர்த்துக் கொள்கிறேன் என்று இயக்குநரிடம் தனியாகச் சொன்னேன். இயக்குநரோ, அவரிடம் எதுவும் வைத்துக்



கொள்ளாதீர்கள். அவர் ஏடாகூடமாக எதையாவது சொல்லிவிடுவார் என்று சொன்னார். படத்தில் காட்சிப்படி அவர் எனக்குச் சித்தப்பா, ஒரு ஜோசியக்காரரும்கூட. நானும் என் நண்பரும் அவரிடம் ஜோசியம் கேட்போம். கேட்டு முடித்ததும் நண்பர் போன பிறகு, அவர் என்னைக் கூப்பிட்டு அவனோடு சேராதே. அவன் ஜெயிலுக்குப் போய்விடுவான் என்று சொல்வார். அந்த இடத்தோடு முடிக்காமல் அதற்குப் பின் முருகசாமிப் படம் முன்பு இருக்கும் வாழைப்பழம் என்று கேட்பதற்காக, அந்த ஊதுபத்தி ஸ்டாண்ட் எனக்கு வேணும் என்றேன். அவர் கொஞ்சமும் அசராமல், அது சாமிக்கு என்றார். நானும் விடாமல் எந்த சாமிக்கு என்றேன். இந்த ராமசாமிக்குப் போடா என்று சொல்லி விட்டார். அப்போதும் நான் அவரிடம் தோற்றுத்தான் போனேன். எனக்கு அதிலும் ஒரு சந்தோஷம்தான்.”

தமிழில் முழுநீள நகைச்சுவைப் படங்கள் அதிகம் எடுக்கப் படுவதில்லையே, ஏன்?

“தமிழில் ஹீரோக்களின் வியாபாரத்தைப் பொறுத்தே படங்கள் திட்டமிடப்படுகின்றன. அப்படிப் பார்க்கும்போது தனியாக நகைச்சுவை நடிகர்களுக்கான வியாபாரம் என்பது இங்கே மிகவும் குறைவு. அது மட்டுமின்றி, நகைச்சுவை நடிகர்களுடன் ஜோடியாக நடிக்க எந்தக் கதாநாயகியும் ஒப்புக்கொள்வதும் இல்லை. இவற்றோடு இப்போதெல்லாம் ஒரு படம் நன்றாக இருக்கிறது என்று பேச்சு வருவதற்கு முன்பே திரையரங்கிலிருந்து தூக்கிவிடுகிறார்கள். இவ்வளவு காரணங்களால் நகைச்சுவை நடிகர்களைக் கதாநாயகனாக்கி யாரும் படமெடுக்கத் துணிவதில்லை.”

ஆனால், கதாநாயகனைவிட நகைச்சுவை நடிகர்கள்தானே அதிகம் புகழ் பெறுகிறார்கள். இதன் ரகசியம் என்ன?

“கதாநாயகர்கள் நாம் செய்ய முடியாத காரியங்களை எல்லாம் திரையில் செய்கிறார்கள். எனவே, அவர்களை எல்லோருமே அண்ணாந்து பார்க்கிறார்கள். ஆனால், நகைச்சுவை நடிகர்கள் சாதாரண மக்களைப் போல்தான் இருக்கிறார்கள். எனவே, எங்களை நண்பர்களாக அல்லது தங்களில் ஒருவனாகப் பார்க்கிறார்கள். அதோடு எல்லோரையும் சிரிக்க வைப்பதால் மக்களோடு அதிக நெருக்கம் ஏற்படுகிறது.”

புதிய நகைச்சுவை நடிகர்கள் போல நகைச்சுவை நடிகைகள் அதிகமாக உருவாவதில்லை, ஏன்?

“இப்போது நடிக்க வருகிறவர்கள் எல்லாம் நிறையப் பணம், உடனடி புகழ் வேண்டும் என்றே விரும்புகிறார்கள். அதனால், எல்லோருமே கதாநாயகியாக நடிக்கவே விரும்புகிறார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு விஷயம் புரிவதில்லை. கதாநாயகியாக நடித்தால் சில ஆண்டுகள்தாம் நடிக்க முடியும். நகைச்சுவை வேடங்களில் நடிக்கத் தொடங்கினால் பல ஆண்டுகள் நீடிக்கலாம்.”

திடீரென மரம் நடும் இயக்கத்தைத் தொடங்கி சுற்றுப்புறச் சூழல் ஆர்வலர் ஆகிவிட்டீர்களே, என்ன காரணம்?

- பிலிம்நியூஸ் கிருஸ்ணன் -

“எல்லாவற்றுக்கும் இந்தியாவின் முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாம் அய்யா தான் காரணம். ஒரு நகைச்சுவை நடிகனாக இருந்து மக்களை மகிழ்விப்பதோடு நின்றுவிடாமல் சமுதாயத்துக்குப் பயனுள்ள ஏதாவது ஒன்றைச் செய்ய விரும்பினேன். இந்நிலையில் அப்துல்கலாம் அய்யா ஒருநாள் என்னிடம் தமிழகம் முழுவதும் 2011 டிசம்பர் மாதத்திற்குள் பத்து லட்சம் மரக்கன்றுகளை நட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். தற்காலத்தில் சுற்றுச்சூழல் சிக்கல் என்பது பெரிதாக இருக்கிறது. அதிலிருந்து பூமியைப் பாதுகாக்க இயற்கையைப் பேணுவது ஒன்றுதான் சிறந்த வழி என்று அய்யா சொன்னார். என்னால் முடியுமா என்ற எண்ணம்தான் முதலில் வந்தது. ஆனால், ‘முயன்றுதான் பார்ப்போமே அந்த முயற்சியில் தோற்றால் கூட தப்பில்லை’ என நினைத்துக்கொண்டேன். 500 கோடியில் தயாரிக்கும் ராக்கெட்டே புறப்பட்ட பத்தாவது நிமிடத்தில் கடலில் விழுந்துவிடுகிற போது, நமது லட்சியம் சரிவர நிறைவேறாமல் போனால் கலங்கிவிடக் கூடாது. முடிந்தவரை போராடிப் பார்ப்போம் என்று இறங்கினேன். ஆரம்பத்தில் நான் இப்படி நினைத்தாலும் இப்போது எனக்கு முழு நம்பிக்கை வந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, மரங்களை நாம் இப்போது நட வேண்டிய அவசியம் என்ன என்பதை விஞ்ஞான பார்வையோடு கலாம் என்னிடம் விளக்கியிருந்தார். அதன்படி பார்த்தால், இந்தியா முழுவதுமே 100 கோடி மரங்களை நட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். வீட்டுக்கு ஒரு மரம் என்று கூட சொல்கிறார்களே அது தவறு, ஆளுக்கொரு மரம் நட்டால்தான் அது முடியும். பத்து லட்சம் மரக்கன்றுகளை நான் நட வேண்டும் என்று கிளம்பியபோது ஒவ்வொரு ஊரிலும் எனக்கு பெரிய ஆதரவு கொடுத்தது மக்களும் சமூக

தொடர்ச்சி 39ஆம் பக்கம்

**Sitham Sam Shanmugam** (Sales Rep)
HomeLife/GTA Realty Inc.
HOMELIFE HIGHER STANDARDS
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

Brand New homes from builder detached 1900 sqft. double garage Price $285,000 London ON HWY 401 & University of Weston *10% Appreciation in 2 years expected

Daisy Mart Brand New convenience store at Tim Hortons North of Newmarket at Leslie Main Road

0 - 5 years Newer homes in Stouffville

Renovate and Sell Old detached bungalow near University of Toronto

# விளம்பரம் 22 ஆவது ஒன்றுகூடல் ஆண்டுவிழா

விளம்பரம் பத்திரிகையின் 22 ஆவது வருடாந்த ஒன்றுகூடல் வழமைபோல் புதுவருடத்தில் வரும் முதலாவது சனிக்கிழமை (ஜனவரி 07, 2012) அன்று GTA Square இல் அமைந்திருக்கும் Event Centre இல் நடைபெற்றது.

இவ் ஒன்றுகூடலுக்கு வழமைபோல் விளம்பரம் பத்திரிகையில் எழுதுபவர்களும் அவர்களது குடும்பத்தினரும் சமூகம் அளித்திருந்தனர். ராஜ்மீரா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார். கனிமாஸ்டரின் தமிழ்த்தாய் வாழ்த்து, ஆதிரை, சங்கவி




சகோதரிகளின் கனடிய தேசியகீதம் அதை தொடர்ந்து ஒரு நிமிட அமைதி வணக்கத்துடன் மாலை 7.00 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமானது. விளம்பரம் இதழில் எழுதுபவர்களை ராஜ்மீரா அழைத்து சில நிமிடங்கள் உரையாற்றுமாறு கேட்டுக்கொண்டார். அதை தொடர்ந்து அழைக்கப்பட்டவர் எழுதும் விடயம் பற்றிய அதுதொடர்புள்ள சினிமா பாடலை கனிமாஸ்ரர் பாடி நகைச்சுவை கலந்த சிந்தனையை தூண்டினார்.

விளம்பரத்தில் சமயத்தை பற்றி தவறாமல் எழுதி எமது ஆன்மீக அறிவை துலங்கவைக்கும் நா.க. சிவராமலிங்கம் ஐயா அவர்கள் விளம்பரத்தை வாழ்த்தினார். சிந்தனைப் பூக்கள் பத்மநாதன் விளம்பரத்தின் ஆரம்பகாலத்தையும் தற்போதைய வளர்ச்சியையும் பற்றி விளம்பரத்துடன் ஈடுபடுபவர்களின் நேர்மையான உழைப்பை பாராட்டினார். நிதியும் மூலதனமும் பற்றி எழுதிவரும் பெரி. முத்துராமன் கோபத்தால் வரும் தீமையை விளக்க ஒரு கதை கூறி எல்லோரையும் சிந்திக்க வைத்தார். ஆளுமை வளர்ச்சிக்கு பிரார்த்தனைகள் பற்றி விளம்பரத்தில் தொடர்ந்து எழுதிவருபவரும், விளம்பரம் மூலம் இந்தக் கட்டுரைகளின் தொகுப்பை நூலுருவில் வெளியிட்டவருமான லலிதா புருடி அம்மையார் அவர்கள், அங்கீகரித்தல் (Acceptance) என்ற கோட்பாட்டை கடைப் பிடிப்பவர்க்கு வாழ்வில் பிரச்சனைகளே வராது என்று விளக்கினார். அவர் விளம்பரத்தில் ஆங்கிலத்தில் ஒரு பகுதி இருந்தால் நன்றாக இருக்கும் என்றார்.

உணவே மருந்து எனக்கூறிவருபவரும், விளம்பரத்தில் எம்மை நாம் பாதுகாப்பது எப்படி என தொடர்ந்து கட்டுரைகள் எழுதி வருபவரும், விளம்பரத்தில் எழுதிய கட்டுரைகளை புத்தகமாக வெளியிட்டவருமான வைத்திய கலாநிதி கே.ரி. கோபால் விளம்பரம் பதிப்பாளரால் இவ்வருடம் எழுத்தாளர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட உணவுப் பொருட்கள் கொண்ட பொதிக்கு நன்றி தெரிவித்தார். அதற்கு அடுத்து ஆதிரையின் 'சின்னஞ் சிறு பெண்போல' பாடலை தொடர்ந்து ராசம்மா ராச்சியம் என்ற நகைச்சுவை தொடரை தொடர்ந்து விளம்பரத்தில் எழுதிவரும் கலகலப்பு தீசன் விளம்பரத்தில் புதிய எழுத்தாளர்களையும், புதிய தலைமுறையினரையும் எழுத ஊக்குவிக்க வேண்டும் என்றார்.

இவற்றை தொடர்ந்து விளம்பர பத்திரிகையின் பதிப்பாளர் மகேந்திரன் பேசும்போது விளம்பரம் இணையத்தளத்தை (www.vlambaram.com) இவ்வருடம் புதுப்பொலிவுற செய்ய இருப்பதாக கூறினார். அத்துடன் விளம்பரத்தில் எழுதுபவர்கள் தங்கள் கட்டுரைகளில் தமிழ் இலக்கணப் பிழைகள் வராது பார்த்துக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இதைத் தொடர்ந்து விளம்பரத்தில் கடந்த வருடம் தொடர்ந்து 'நினைவாற்றல்' பற்றி கட்டுரைகளை எழுதிவந்த அகணி (சுரேஸ்) அவர்கள் அதை நூல் உருவாக்கி வெளியிட்டார். இதன் முதற்பிரதியை திரு. திருமதி. மகேந்திரன் அவர்கள் பெற்றுக்கொண்டனர். கனிமாஸ்ரர் இந்த நூலை விமர்சனம் செய்து உரையாற்றினார். அவர் தனது உரையில் நினைவாற்றலை ஊக்குவிக்கும் பல விடயங்கள் இந்த நூலில் உள்ளதை தொட்டுக் காட்டினார். இந்நூல் பலருக்கு பிரயோசனப்படும் என்பதையும் பலர் ஏற்கெனவே இதை வாசித்து வந்ததை விளம்பரத்தில் இக்கட்டுரைக்கு வந்த கடிதங்கள் மூலம் காணலாம் என்றார். பொருளடக்கத்தில் பக்கங்கள் குறிப்பிடப்படாமையையும் ஒருமுடிவுரை இல்லாமையையும் போன்ற சில குறைபாடுகளை தவிர புத்தகம் நல்லமுறையில் எழுதி பதிப்பித்து வெளியிடப்பட்டுள்ளதாக கூறினார். அதை தொடர்ந்து சுரேஸ் எற்புரை வழங்கினார்.

விளையாட்டுக்களைப் பற்றி விளம்பரத்தில் தொடர்ந்து எழுதிவரும் கணேஸ் இப்பத்திரிகை ஒரு சமூக முன்னேற்ற சஞ்சிகை என்றும், பிள்ளைகள் விளையாட்டில் காட்டும் வெற்றிகளை பற்றி மேலும் பெருமையுடன் எழுதுவதற்கு விளையாட்டில் திறமையாக இருக்கும் பிள்ளைகள் பற்றி பெற்றோர் இதனை நடத்துபவர்கள், முன்னோடிகள் தனக்கு அறியத்தருமாறும் கேட்டுக் கொண்டார். காப்புறுதி பற்றி எழுதிவரும் சிவ. பஞ்சலிங்கம் விளம்பரத்தின் வளர்ச்சியை வாழ்த்தினார். அதற்கு அடுத்து சங்கவியின் ஆயர்பாடி பாடலை தொடர்ந்து விளம்பரத்தில் சினிமா பற்றி எழுதிவரும் ரதன் உரையாற்றினார். அவர் விளம்பரத்தின் தரத்தை தக்கவைத்துக் கொள்ளகூடிய நல்ல சினிமா விமர்சினங்களை மட்டுமே பிரசுரிக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். ஆரோக்கிய வாழ்வு பற்றி எழுதிவரும் N. செல்வசோதி விளம்பரம் பத்திரிகை தொடர்ந்து வெளிவர வாழ்த்தினார்.

விளம்பரத்தில் கடந்த தைப்பொங்கல் தினத்தில் இருந்து ஆரம்பித்த இளையோர் ஆக்கம் பகுதியில் இதுவரை கட்டுரைகள் எழுதிய நாலு இளையோர் சார்பில் பேசிய ஆரணி, தன்னை விளம்பரத்தில் கட்டுரை எழுத ஊக்குவித்தவர்களை நினைவு கூர்ந்து தனது கட்டுரைகளில் எழுத்துப்பிழைகளை மட்டுமே அப்பாவும், பாமா அன்ரியும் திருத்துவதாகவும் மற்றையவை எல்லாம் தனது சொந்த முயற்சியே என்றார். அத்துடன் தங்களது கட்டுரைகளுக்கு பெரியோர்கள் கருத்துக்கள் தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். அவர் அவையில் இருந்தவர்களை அவர்களது பிள்ளைகளையும் தமிழில் எழுத ஊக்குவிக்குமாறு கேட்டார்.

இதனை தொடர்ந்து சங்க இலக்கியங்கள் பற்றி எழுதி வரும் சிவபாலு மாஸ்ரர் அவரைத் தொடர்ந்து கனகசபாபதி அதிபர் உரையாற்றினார். அவர் தனது உரையில் நினைவாற்றலில் வரும் 'நரம்பு அணு' விற்கு பதிலாக 'நரம்புக்கலம்' என்னும் சொல் மிகவும் பொருத்தம் என்றார். அதேபோல் 'நரம்புமுளை' என்ற பதமும் உபயோகப்படுத்தப்பட்டிருக்கலாம் என்றார். மேலும் கூறுகையில் தான் ஒரு 'பொறுக்கி' என்றார். அதாவது தான் பலதும் பத்துமான விடயங்களை பல இடங்களில் இருந்து பொறுக்கி எடுத்து எழுதுவதாக கூறினார்.

அதிபரை தொடர்ந்து உரையாற்றிய துறையூரான் என்னும் பெயரில் கட்டுரைகள் எழுதிவரும் சின்னையா சிவனேசன், விளம்பரத்தில் எழுத்துப்பிழைகள் இல்லாமல் வர அவற்றை சரிபார்த்து வரும் பத்திரிகை ஆசிரியர் அவருடன் உதவிபுரிபவர்களின் ஆற்றலை வியர்ந்தார். இவற்றை தொடர்ந்து இரவு உணவும் பாடல்களும் நடைபெற்றன. விளம்பரத்தின் 22 ஆவது ஒன்றுகூடல் பாடல்களுடன் தொடர்ந்து இனிதே நிறைவு பெற்றது.






# கடவுளின் கெஸ்ட் ஹவுஸ்! ஆலப்புழா!



## கேரளா சுற்றுலா இடங்கள் - 3

ஆலப்புழாவின் தனித்தன்மையான சுண்டி இழுக்கும் கவர்ச்சி உப்பங்கழிகள் என்றால், ஆலப்புழா படகுப் போட்டிகள் மலைக்க வைக்கும் வசீகரம். ஆலப்புழாவின் பாம்புப் படகுப் போட்டிகள் உலகப் பிரசித்தமானவை! செண்ட மேளங்கள் அதிர, வாத்தியங்கள் முழங்க, 110 பேர் அமரக்கூடிய மிக பல நீளமான பாம்புப் படகுகள், நூற்றுக்கணக்கான படகோட்டி களின் ஒத்தசைவு வேகத்தால் நீரைக் கிழித்தபடி அதிவேகமாகச் சீறிச் செல்லும் அழகைக் காண பிரமிப்பூட்டும். இந்திய அரசின் கலாசார செய்திப் படங்கள், தொலைக்காட்சி செய்திப் படங்களில் இந்தப் படகுப் போட்டியின் உச்ச வேகக் காட்சிகளை நீங்கள் கூட பார்த்திருக்கலாம். எவ்வளவு நீளமான படகு.... எவ்வளவு பேர் நூல் பிடித்தமாதிரி ஒரே சமயத்தில் வேகவேகமாகத் துடுப்புப்போட்டு படகை விரட்டுகிறார்கள் என்று வியந்திருக்கலாம்.

ஆலப்புழா பாம்புப் படகுப் போட்டியின் பெயர் 'நேரு கோப்பை படகுப்போட்டி'. வருடம் தோறும் ஆகஸ்ட் மாதத்தில் துவங்கும். இக்காலத்தில் பல நாடுகளில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள். இதனால், ஆகஸ்ட் மாதம் முழுக்க ஆலப்புழாவில் எல்லாக் கட்டணங்களும் எகிறி இருக்கும். நேரு கோப்பை தவிரவும் பல படகுப் போட்டிகள் உள்ளன. அவற்றில், புளிங்குன்னுவில் ஆகஸ்ட் கடைசி சனிக்கிழமை நடைபெறும் ராஜீவ் காந்தி படகு போட்டி, ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் நடைபெறும் நீரெட்டுபுரம் படகு போட்டி, ஹரிப்பாட்டில் நடைபெறும் சம்பக்குளம் படகு போட்டி, ஜுலை மாதம் சுண்டன்வள்ளத்தில் நடைபெறும் பாம்பு படகு போட்டி ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இதுவரைக்கும் காயல், படகு வீடுகள், படகுப் போட்டிகள் பற்றி மட்டுமே சொல்லிக்கொண்டு வருவதால் இவை மட்டும்தான் ஆலப்புழா என நினைத்துவிடாதீர்கள். படகுகளுக்கு அடுத்து, ஆலப்புழா பயணத்தில் கட்டாயம் பார்க்க வேண்டியது: காயங்குளம் கிருஷ்ணாபுரம் அரண்மனை. இது மார்த்தாண்ட வர்ம மன்னனால் 18ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது ஆகும். ஆழப்புழாவில் இருந்து சுமார் 45 கி.மீ தொலைவில் உள்ளது. இரண்டு அடுக்கு களைக் கொண்டது இந்த அரண்மனை. கீழ்த்தளத்தில் காணப்படும் கஜேந்திர மோட்சம் சுவரோவியம் நிச்சயம் உங்களை ஆச்சரியப்படுத்தும். மேலும், இங்குள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள ஓவியங்கள், வெண்கலச் சிற்பங்கள் அரண்மனையின் வரலாற்றை உணர்த்துகின்றன.

தமிழகத்தின் நெற்களஞ்சியம் தஞ்சாவூர் என்றால், கேரளத்தின் நெற்களஞ்சியம் குட்டநாடு. இது ஆலப்புழா அருகில்தான் உள்ளது. இங்கு எங்கு திரும்பினாலும் பச்சைப் பசேல் நெல் வயல்வெளிகள்தான். இதுதவிர வாழை, வள்ளிக்கிழங்கு, கொடிவள்ளிக்கிழங்கு என பல வகை பயிர்களையும் பயிரிடுகின்றனர். குட்டநாடு கடல் மட்டத்தில் இருந்து 2 மீட்டருக்கு கீழே அமைந்துள்ளது. இருந்தபோதிலும் இங்கு விவசாயம் செழிப்பாக நடப்பது நமக்கு மட்டுமல்ல, அந்த ஊர்க்காரர்களுக்கே ஆச்சரியம் என்கிறார்கள்.

மேலும் ஆலப்புழா கடற்கரை, கருமாடிக்குட்டன் புத்தர் சிலை, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த புன்னப்பரா கிராமம் உள்ளிட்ட பல இடங்கள் ஆலப்புழா மாவட்டத்தில் பார்க்க வேண்டியவை.

கோயிலுக்குப் போகாமல் திரும்பினால் நமது பயணம் நிறைவு பெறுமா? ஆலப்புழாவில் இருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ளது அம்பலப்புழா ஸ்ரீகிருஷ்ணர் கோவில். இந்தக் கோவிலின் உட்புறச் சுவர்களில் வரையப்பட்டுள்ள மகாவிஷ்ணுவின் தசாவதார காட்சிகள் காண்போரை ஆச்சரியப்படுத்தும். இங்கு பள்ளிபாணா என்ற பெயரில் ஒரு மாயமந்திரக் கலை நிகழ்ச்சி 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படுகிறது. இந்த மாயமந்திரக் கலை நிகழ்ச்சி பார்வையாளர்களை கதிகலங்கச் செய்யும் தன்மை வாய்ந்தது. அம்பலப்புழா ஸ்ரீகிருஷ்ணர் கோவிலில் பிரசாதமாக பால்பாயசம் வழங்கப்படுகிறது. இதன் சுவை, பக்தர்களின் நாவைச் சுழற்றச் செய்யும்.

அம்பலப்புழா நீராட்டுபுரத்தில்தான்

**- வழிப்போக்கன் -**

சக்குலத்து பகவதி அம்மன் கோவில் அமைந்துள்ளது. பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய முக்கடவுள்களையும் தோற்றுவித்த மகாசக்தியாக போற்றப்படுபவள் இந்த பகவதி. இங்கு நடக்கும் பொங்கல் மகா உத்சவ விழா பிரசித்தம். இதில் நாடு முழுவதிலும் இருந்து பெண்கள் பங்கேற்று அம்மனை வழிபடுகிறார்கள்.

கேரளத்தின் மிகப் பழமையான கோயில்களில் ஒன்றான ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி கோயில் ஆலப்புழா அருகில்தான் உள்ளது. ஹரிப்பாடில் இருந்து 1 கி.மீ. தூரம். இங்கு தை மாசம் நடைபெறும் தைப்பூச மகோத்சவம் பிரபலம். இந்த தைப்பூச திருவிழாவுக்காக ஆயிரக்கணக் கான பக்தர்கள் காவடி ஆடி இக்கோயிலுக்கு வருவார்கள். காவடியாட்டம் கரை கடந்த உற்சாக வெள்ளமாயிருக்கும். இக்கோயிலின் மூலவர் வேலவன், இவர்தான் கேரள மாநிலத்திலேயே மிகப்பெரிய மூலவர் என்றும் கருதப்படுகிறார். கேரளத்துக்கே உரிய கதகளி ஆட்டமும் நடக்கும். ஆனால், கதகளி பார்க்க வேண்டுமென்றால், ஹரிப்பாடைவிட செட்டி குளங்கரா பகவதி அம்மன் கோயில் சிறந்த தேர்வு. காயங்குளத்திலிருந்து 5 கி.மீ. தொலைவில் உள்ளது இந்த பகவதி அம்மன் கோயில். இங்கு பரணி திருவிழா பல கலாசார நிகழ்ச்சிகளுடன் நடைபெறும். கதகளி விடிய விடிய நடக்கும். மேலும் மத வழிபாட்டு கலைகளான குதியோட்டம், கூட்டுக்காழ்ச்ச ஊர்வலம், கலாசார நிகழ்ச்சிகள், வழிப்பாட்டு நாட்டார் கலைகளான படயணி, கோல்களி, அம்மன்குடம் ஆகியவை பரணி திருவிழாவின் தனிச்சிறப்புக்கள்.

ஆழப்புழாவில் இருந்து சுமார் 20 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது எடத்துவா சர்ச். இந்த சர்ச் 1810ஆம் ஆண்டில் கட்டப்பட்டதாகும். ஐரோப்பாவின் மத்திய கால கோதிக் கலைப்பாணியில் இந்த சர்ச் வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு வந்து மனம் ஒன்றிப் பிரார்த்தனை செய்தால் மனநோய், புத்தி பேதலிப்பு குணமாகும்

தொடர்ச்சி 40ஆம் பக்கம்

## ஆஸ்துமா நோய்க்கு நிரந்தர தீர்வு கனடாவில் நிரூபிக்கப்பட உள்ளது

இந்தியா, இலங்கை, மலேசியாவில் நிரூபிக்கப்பட்ட இப்புதியமுறை சிகிச்சை கனடாவிலும் சிவநாயகம் மோகனதாசினால் நிரூபிக்கப்பட்டு இந்நோய்க்கு உள்ளானவர்களுக்கு நிரந்தர விடுதலை ஏற்படுத்தப்பட உள்ளது. தொடர்ந்து தமிழர்கள் பரந்து வாழும் மற்றைய நாடுகளுக்கும் எடுத்துச் சென்று நிரூபிக்கப்படவுள்ளது.

இவர் கனடா, ரொறன்றோவில் 2011 டிசம்பர் 3 ஆம் திகதி அன்று 2020 ஊசிகளை தலையில் குற்றி கின்னஸ் உலக சாதனையை ஏற்படுத்தியவர் ஆவார்.

100 பேர் கொண்ட இந்த திறந்தவெளி அரங்கு நிகழ்விற்கு எவ்வித கட்டணமும் பங்குபற்றும் நோயாளிகளிடம் அறவிடப்படமாட்டாது என அறியத்தருகின்றோம். இந்நிகழ்வை முன்னெடுத்துச் செல்வதற்கு பண உதவி தேவையாக உள்ளது. தயாள உள்ளம் படைத்த உறவுகள் உங்களால் முடிந்த உதவிகளை அளித்து இந்நோயினால் அவஸ்தைப்படும் நோயாளர்களின் விடிவுக்கு ஒத்துழைப்பு நல்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

உதவி புரியும் உறவுகளின் அனைத்து விபரங்களும் ஊடகங்கள் வழியாக வெளிப்படுத்தப்படும்.

**Contact Details:** Sivanayagam Mohanathas
**Tel:** 416.877.1515 **E-mail:** Kavatha_mohan@hotmail.com

**Bank Details**
**Bank:** TD Canada Trust
**Branch Number:** 0330 **Account Number:** 529580


Success is always
about being
the first...
First commercial development serving the Morningside Heights Community
Very limited amount of units available only 21,000 square feet
The buildings are designed for owner/endusers
Restaurant/Retail units for sale
So hurry, call our knowledgeable agents today to get all the details about this exciting opportunity. There is only a very limited amount of units available. Once they are gone, the doors to this opportunity will also be closed for good!
THE SHOPPES®
MORNINGSIDE HEIGHTS
Call Now for Details:
416 321 6969

# மனவெளி கலையாற்றுக்குழுவினரினால் நடத்தப்பட்ட 15ஆவது அரங்காடல் நிகழ்வு

கடந்த ஞாயிற்றுக்கிழமை (08/ 01/ 2012) மார்க்கம் தியேட்டரில் மனவெளி கலையாற்றுக்குழுவினரின் அரங்காடல் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது. முதுவேனிற் பதிகம் என்னும் கவிமொழிவுடன் அரங்காடல் நிகழ்வு ஆரம்பமானது. கனேடிய முன்னணிக் கலைஞர்களான: நவம், திருமாவளவன், மெலிஞ்சிமுத்தன் ஆகியோர் தமக்கே உரியபாணியில் கவிமொழிவுப் பூக்களை கேட்போர் ரசித்து விளங்கும் வண்ணம் அள்ளிச்சொரிந்தனர். ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளைச்செய்து, ஓடிஓடி உழைத்து பெரியவீடு வாங்கினாலும் ஆற அமர ஓரிடத்தில் இருக்கமுடியா நிலைகள் கவிதை களின் வெளிப்பாடாக அமைந்தன.





'எழுப்பாதீர்கள் இவன் சற்று நேரம் உறங்கட்டும்
என்னிடம் ஒரு சாமரம் கொடுங்கள்' என்னும் அற்புதவரிகள் மனிதன் ஆரோக்கியமாக வாழ ஓய்வு தேவை என்னும் கருத்தைப்பிரதி பலிப்பனவாக விளங்கின. எதற்காக ஓடுகிறோம்? வாழ்க்கையின் அர்த்தங்களை அறிவதற்கு மனிதனுக்கு எங்கே நேரம்? வளர்ச்சியில்லா நிலைகளையும், அர்த்தங்கள் புரியா வாழ்க்கையையும் வெளிப்படுத்தும் 'கவிமொழிவு' சிந்திக்கத்தூண்டும் நல்ல கருத்துக்கருவூலங்களாக திருமாவளவன் அவர்களின் கவிதைகள் அமைந்திருந்தன. நவம் அவர்களின் நெறியாள்கை மேலும் மெருகூட்டின.

நாட்டு நடப்புகள், மக்கள் மூடநம்பிக்கைகள், அரசியல் போக்குகள் என்பவற்றை குறியீட்டு முறையில் வெகுலாவகமாகவும் விறுவிறுப்பாகவும் நேரமுகாமைத்துவத்தை கருத்திற்கொண்டும் நகைச்சுவையாகவும் அமைந்த நாடகம்தான் 'பூச்சியப் பெருவெளி' என்னும் நாடகம். காலாகாலமாக நடந்து வரும் நிகழ்வுகளையும் நடைமுறையில் நடப்பவற்றையும் பரிசீலனைசெய்துபார்த்து மக்களே ஏமாறாதீர்கள் என்று விழிப்புணர்வு ஊட்டும் வகையில் இந்நாடகம் அமைந்திருந்தது. இந்நாடகம் செழியனின் சிறப்பான பிரதியாக்கத்துடனும் துஷி ஞானப்பிரகாசத்தின் நுட்பமான நெறியாள்கை யிலும் பார்வையாளர்கள் மனம் கொள்ளும் வகையிலும் அமைந்திருந்தது. நாடகக் கலைஞர்கள் நாடகத்துக்கு உயிர் ஊட்டும் வகையில் தம் நடிப்பை பாத்திரங்களுக்கு ஏற்ப வெளிப்படுத்தியிருந்தனர்.

சகாப்தன் அவர்களின் ஆக்கத்திலும் மதிவாசன் அவர்களின் நெறியாள்கையிலும் உருவான நாடகம் அடுத்து இடம் பெற்றது. வாழ்க்கையை வெறுத்து தற்கொலை முயற்சியில் தோல்வி அடைந்தவர்களின் நிலையை அவர்கள் எதிர்நோக்கும் சிக்கல்களை அவர்கள் மன நிலையில் இருந்து 'இறவாமல் பிறவாமல்' என்னும் நாடகம் மூலம் வெளிப்படுத்தி இருந்தனர். மனிதர்கள் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் தொல்லைகளில் இருந்து நீங்க ஒரு துடிப்புடன் சாவையே அணைக்க விரும்புகின்றனர். ஆனால் சாவும் மனிதர் விரும்பிய நேரம் வருவதில்லை. காலம் கடந்தபின் தானாக வரும்சாவை எதிர்கொள்ள மனத்தைரியமும் இல்லை. விருப்பமும் இல்லை. இக்கருத்துக்களை இந்நாடகக்கலைஞர்கள் தத்தம் பாத்திர இயல்புக்கேற்ப வெளிக்கொண்டு வந்துள்ளனர்.

'முரண்மூளை நோய்' (SCHIZOPHRENIA) என்பது ஒரு கடுமையான மன நோய். அது நோயாளியை யதார்த்தத்துடன் தொடர்பு இழக்கச்செய்துவிடுகிறது. மனதில் எழும் பொய்த்தோற்றங்களையும் யதார்த்த நிலையையும் பிரித்துப்பார்க்க முடியாது பரிதவிக்கும் நிலையே இது. இதனால் படும் அவஸ்தைகளை நடனம் மூலம் வெளிக்கொண்டு வந்த நிகழ்வே 'மண்மேல் தொலையும் வேர்கள்' என்னும் குழுநடனம் ஆகும். சிந்தியா சிவசிதம்பரம் அவர்களின் ஆக்கத்திலும் இயக்கத்திலும் உருவான நடன நிகழ்வு என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. இந்த மன நோய் பற்றியும் நடன நுட்பங்கள் பற்றியும் புரிந்து கொண்டவர்களுக்கு மட்டுமே இந்நிகழ்வு திருப்தியைக்கொடுத்திருக்கும் என நம்பலாம்.

'உலகமே நாடக மேடைதான் எல்லோரும் நடிகர்கள் தான் மனிதன் உள்ளவரை உலகம் உள்ளவரை நாடகம் தொடரும். திருப்பங்கள் எப்பவும் வரலாம். மனிதரையும் உலகத்தையும் வெறும் புறக்கண்ணால் மட்டுமன்றி அகக்கண்ணாலும் பார்த்து உண்மை பொய்களை அறிந்து வாழ வேண்டும் என்னும் கருத்துக்களைப்பிரதிபலிக்கும் வகையில் 'சவரக்குறிப்புகள்' என்னும் நாடகம் அமைந்திருந்தது. 'நாடகம் எப்படி வேண்டுமானாலும் மாறலாம்' என்னும் கூற்று வரலாற்றுப்போக்குகளை திரும்பிப் பார்க்க வைக்கின்றது. செழியன் அவர்களின் ஆக்கத்திலும் புராந்தகன் அவர்களின் சிறந்த இயக்கத்திலும் உருவான சவரக்குறிப்புகள் நாடகம் மனித சமுதாயத்தையே மேடையில் காணவைக்கும் தோற்றத்தை அளித்தது. சபையோர் இந்நிகழ்வுகள் யாவற்றையும் உன்னிப்பாகக் கவனித்தார்கள் என்பதை நிகழ்வுகள் நடைபெறும் வேளைகளில் இடையிடையே பலத்த கரகோசமிட்டு ரசித்ததையும் அவதானிக்க முடிந்தது. அறிவிப்பாளர் செல்வன் அவர்களும் அறிவிப்பாளர் பணியை திறம்படச் செய்துள்ளமை பாராட்டத்தக்கது. குறியீட்டு கலைகளை ரசிப்பதற்கு விடயம் அறிந்த ஆரோக்கியமான ரசிகர்கள் பெருக வேண்டும் என்பதையும் உணரமுடிந்தது. பொதுவாக நாடகக்கலைஞர்கள் யாவரும் தம் பாத்திரங்களை உணர்ந்து சிறப்பாக நடித்திருந்தார்கள். பல்வேறுபட்ட மாற்றங்களையும் சிக்கல்களையும் சந்தித்து வாழும் இக்காலகட்டத்தில் இத்தகைய அரங்காடல்கள் வரவேற்கத்தக்கதே.

- ரஞ்சி கதிர் -

Sales Reps. Welcome
For All your Real Estate & Investments Needs!
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)

* INDEPENDENTLY OWNED AND OPERATED
HomeLife/GTA Realty Inc. Brokerage *
5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# முகப்பருக்கள் (Pimples / Acne)

## எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?

இப்பருக்கள் சில ஆண், பெண் இருபாலருக்கும் ஏற்படலாம். இளம் வயதில் ஏற்பட்டு சிலருக்கு முகத்தின் அழகைக் கெடுப்பதுடன் மனதில் மிகக் கவலையும் ஏற்படுத்தக்கூடியது.

இப்பருக்கள் ஏற்பட்டால் 19, 20 வயதிற்குள் தானாக மறையும் தன்மையுடையது. ஆனால் அப்பருக்களை நாம் தாக்கினால் முகத்தின் அழகு குறைவதுடன் உரிய இடத்தில் காயத் தழும்புகள் ஏற்பட்டு விடும். எனவே எக்காரணமும் கொண்டு நசிக்கவோ, கிள்ளவோ, சொறியவோ கூடாது. இந்த முகப்பருக்கள் ஏற்படுவதற்கு சில காரணம் உண்டு என அறிய முடிகின்றது. நமது தோல் பகுதிக்கு வழுவழுப்பையும் போசாக்கையும் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நெய் சுரப்பிகள் அடைக்கப்பட்டு அழற்சித் தன்மை ஏற்பட்டு முகப்பருக்கள் வரலாம் எனவும் அறிய முடிகின்றது.

மேற்கூறப்பட்ட வயதை உடையோருக்கு பருக்கள் ஒரேமாதிரி இருக்காது. சிலருக்கு பெரிதாகவும் முகம் பூராகவும் இருக்கலாம். சிலருக்கு பருக்கள் குறைவாகவும் இருக்கலாம். சிலருக்கு பருக்கள் முகத்தில் தோன்றாமலும் இருக்கலாம். இப்படியான நிலைக்கு காரணம் சில உண்டு. அவை



1. தோல்பகுதிக்கு வழுவப்பையும், போசாக்கையும் கொடுக்கின்ற நெய்ச்சுரப்பி கள் சுரக்கும் அளவைப் பொறுத்தது. இதில் இருந்து சுரக்கும் திரவம் Sebum என அறிய முடிகின்றது.

2. பக்டீரியா கிருமிகள் நெய்ச்சுரப்பிகளில் பரவி வரலாம். அக்கிருமிகள் ஆபத்து இல்லாத நோயை ஏற்படுத்தாத புரபுயோன பக்டீரியா அக்னிஸ் (Propionibacterium Acnes) எனக் கூறப்படுகின்றன.

அடுத்து ஹோர்மோன் (Hormones) ஆண்களின் விதைப்பகுதி, பெண்களின் சூலகம் மற்றும் அற்றினீன் சுரப்பியில் இருந்து சுரக்கும் அன்ரோயென் (Androgen) ஹோர்மோன் என்பன முகப்பருக்களைத் தோன்றி விக்கும் தன்மையைத் தீர்மானிக்கும் சக்தியுள்ளவை எனவும் அறிய முடிகின்றது.

மேலும் ஒரு குடும்பத்தில் முகப்பருக்கள் வந்து தொல்லைகள் ஏற்பட்டிருந்தால் குடும்பத்தைச் சேர்ந்த மற்றோருக்கும் வருவதற்கு இடம் உண்டு. இப்பருக்கள் தோள் மூட்டு நெஞ்சுப்பகுதி, முதுகு, முகம் போன்ற இடங்களில் வரலாம். ஆனால் இப்பருக்கள் உணவுவகையால் ஏற்படும் என கூறமுடியாது. வசிக்கும் சுற்றாடல் நல்லமுறையில் அமைந்திருந்தால் பருக்கள் ஏற்படாது. அதாவது சுத்தமான காற்றோட்டச் சூழ்நிலை, செறிந்த சூரிய ஒளி இருக்க வேண்டும். இந்நாட்டின் சூரிய ஒளியைப் பெறுவது கடினம். எனவே உணவுகளில் நல்ல பசுமையான கீரைவகைகள், காய்கறிவகைகளைப் பாவித்து வந்தால் முகப்பருக்களைக் குணப்படுத்த முடியும். உ+ம் கரட், பீற்றூட் என்பனவற்றின் சாறு மிகநன்று. அத்துடன் சம்பல் செய்தும் பாவிக்கலாம்.

மற்றும் கொழுப்புப் பொருட்கள் எண்ணெய்ப் பொருட்கள் எடுப்பதினால் முகப்பருக்கள் உருவாவதில்லை. ஆனால் இவை நமது எடையை அதிகரிக்கச் செய்வதுடன் இரத்த அழுத்தம் நீரிழிவு என்பவற்றை ஏற்படுத்தவல்லது. முகத்தை நன்கு கழுவி சுத்தம் செய்து வருதல் வேண்டும். சோப்பு போட்டு சுத்தம் செய்யலாம். மேலும் தங்கள் குடும்ப வைத்தியர்களிடம் சென்றால் அதற்குரிய கழும்பு கிறீம் வகைகளை பாவிக்கும்படி கூறுவார்கள். அத்துடன் தகுந்த முறைகளை மேலும் கூறிக் கொள்வார்கள். இதனால் பக்டீரியா கிருமிகளை அழிக்க முடியும்.

ஒருவருக்கு முகப்பருக்கள் தோன்றி இருந்தால் முகத்திற்குப் பாவிக்கும் பவுடர் கிறீம் வகைகளைப் பாவிப்பது நல்லதல்ல. சில பெண்களுக்கு மாதாந்த மாதவிலக்கு வருவதற்கு 2, 3 நாட்களுக்கு முன் முகப்பருக்கள் தோன்றுவதும் உண்டு. அவை மாதவிலக்கு வந்து சில நாளில் மறைந்து விடும். ஆனால் நாம் அவ்வேளையில் பருக்களுக்குத் தாக்கத்தைக் கொடுத்தால் காய வடுக்கள் தோன்றலாம். எனவே எதற்கும் நாம் அவதானமாக இருக்க வேண்டும். இதனால் கவலைகள் தவிர்க்கப்படும்.


**வைத்திய கலாநிதி**

**கே.ரி. கோபால்**



D.A.M.S R.A.M.P (Sri Lanka)
C.D.S - C.N.H.P (Canada)
Tel.: 647.718.3909





**நியூதேவி உணவகத்தார் Anniversary ஐ முன்னிட்டு தமது வாடிக்கையாளர்களுக்கு வாரந்த Special புதிய விலைகளை அறியத்தருகிறார்கள்.**

- திங்கட்கிழமை: பிட்டுக்கொத்து (Veg) - $3.99
  பிட்டுக்கொத்து (M/C) - $4.99
- செவ்வாய்க்கிழமை: 5 இட்லி (சட்னி, சாம்பார்) - $2.49
  V. Rice - $4.49 M / C Rice - $5.49
- புதன்கிழமை: மரக்கறி கொத்துரொட்டி - $3.99
  M/C கொத்து - $4.49
- வியாழக்கிழமை: இடியப்பகொத்து Veg. - $3.49
  M/C இடியப்பக்கொத்து - $3.99
- வெள்ளிக்கிழமை: 8 கறி சைவச்சாப்பாடு - $4.99 (வடை, பாயசம்)
  5 தோசை சட்னி, சாம்பார் - $2.49
  (Without சட்னி, சாம்பார்) - $1.99
- சனிக்கிழமை / ஞாயிற்றுக்கிழமை: - V. Rice பிரியாணி - $5.49
  M/C Rice பிரியாணி - $5.99
- ஞாயிற்றுக்கிழமை: Veg. நூடில்ஸ் - $4.49
  M/C நூடில்ஸ் - $4.99

**எல்லா நாட்களும்**
50 தோசை, 50 இட்லி (No Chatny, No Sambar) - $19.99

தொடர்புகளுக்கு: 416.288.0303



**LAW OFFICE**

**STEFANO FORTINI**

B.A., LL.B., Barrister & Solicitor

3 Catherine Avenue,
Aurora, Ontario
L4G 1K4

Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com



**ELECTRICAL WORKS**



**FRIDGE, WASHER, DRYER** போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளுக்கு: ஈசன் - 416-286-2880

# BASEMENT RENT

**MORNINGSIDE & SHEPPARED**
சந்திப்புக்கு அருகாமையில் புத்தம்புதிய ஒரு விசாலமான படுக்கை அறை பெரிய யன்னலுடன் bsmt இல் வாடகைக்கு உண்டு. Sep. entrance, laundry, cable, internet. Close to TTC, pizza, mall. Students, working people or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.899.1123

**MARKHAM & LAWRENCE**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.801.4681

**MCCOWAN & DENISON**
1 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall.
Avail. February 01, 2012.
647.706.4922 / 416.522.3314

**WARDEN & LAWRENCE**
1 Bedroom bsmt for rent. Sep.entrance, kitchen, living room, laundry, cable & internet including. Close to TTC, hwy (401, DVP). Avail. immediately.
Ladies or couple only.
தொடர்புகளுக்கு: 416.997.6575

**KINGSTON & SCAR.GOLF CLUB**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.831.6343

**DONMILLS & STEELES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Close to TTC. No smoking & No drink Very strictly. Rent $325. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.855.2148

**9TH LINE & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to YRT, bank, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.560.4152

**BELLAMY & EGLINTON**
Large space - high ceiling - one bedroom - kitchen - Sep. entrance - bsmt - water - hydro - heating - internet - laundry.
Rent $729. All included.
Aloysius: 416.993.9709

**MARKHAM & 14TH AVE**
Newly 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, bank. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.315.5256

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall, school.
Avail. Anytime.
416.332.3624 / 647.309.7790

**ELLESMERE & SCAR.GOLF CLUB**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.419.7873

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, kitchen, living hall. Close to TTC, mall. Avail. Anytime. Bachelor student preferred.
416.624.6895 / 416.498.7914

**MARKHAM & DENISON**
2 bedroom bsmt for rent. Sep. entrance, Parking, laundry 1 ½ washroom. Close to school, bus, shopping. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.280.6145

**MARKHAM & LAWRENCE**
4 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, shopping. Avail. immediately. அறைகள் தனித்தனியாக கொடுக்கப்படும்.
647.706.4881 / 416.439.4076

**MARKHAM & ELSON**
1 Bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to TTC, mall. Avail. February 01, 2012.
905.472.1370 / 647.500.4564

**MCCOWAN & DENISON**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC. Single girl or single boy preferred. Avail. February 01, 2012
416.587.5843 / 905.472.1454

**MCCOWAN & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, kitchen, livingroom. Close to school, hospital, TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.7570

**MARKHAM & DENISON**
2 Bedroom brand new bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to TTC, walmart, bank, school.
Avail. immediately.
647.761.5599 / 905.479.5599

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to to TTC, mall, Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 905.294.8634

**VICTORIAPARK & LAWRENCE**
1 Bedroom walk-out brand new bsmt for rent. Close to TTC, mall, துர்க்கை அம்மன். Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.208.9096

**BRIMLEY & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. January 15, 2012. Old people or Couple. விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 416.292.9966

**MORNINGSIDE & MCLEVIN**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school, library.
Avail. February 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.732.6931

**MARKHAM & ELSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, mall, YRT. Avail. immediately. தனிநபர் அல்லது Couple விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.567.9877

**14TH AVE. & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. No pets & No smoking. Avail. immediately. Rooms தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.833.8691

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable, internet. Close to TTC, mall, temple. Avail. immediately.
Ladies or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.292.0964

**NEILSON & FINCH**
1 bedroom bsmt for rent with food. Parking, cable, laundry. Close to Malvern Mall, school & bus. Ladies preferred. Avail. immediately.
416.297.4100 / 647.986.4100

**MCCOWAN & STEELES**
Bsmt for rent. Sep. entrance. Close to all facilities. Avail. immediately. No parking.
416.825.8083 / 905.948.9449

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to TTC. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.206.3436

**MCCOWAN & ELLESMERE**
Newly renovated 2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.431.2922 / 416.846.7973 / 416.855.7281

**MCCOWAN & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. பெண்கள் மட்டும்.
தொடர்புகளுக்கு: 647.704.5580

**BIRCHMOUNT & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, internet, cable. Close to TTC, school, mall.
416.818.7317 / 647.344.1556

**MORNINGSIDE & SHEPPARD**
Brand new 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, HWY 401, walmart, mall.
Avail. immediately. தொடர்புகளுக்கு:
647.345.8437 / 416.625.2309

**MORNINGSIDE & STAINS**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry cable, internet, multicultural channel. Close to TTC, mall. Avail. Anytime.
416.509.0102 / 416.321.1948

**ALEXMUIR & FINCH**
(BETWEEN MIDLAND & BRIMLEY)
2 Bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, laundry, cable. Avail. Anytime.
416.292.9640 / 416.453.4264

**MIDLAND & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.875.6869

**WARDEN & SHEPPARD**
2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, laundry, cable. Close to TTC, mall. Avail. immediately.
416.795.7321 / 416.419.7545

**MORNINGSIDE & HWY 401/MCLEVIN**
1 or 2 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking. Close to mall, wal-mart, nofrills, library, 4 elementary school, University. Small family or seniors preferred.
தொடர்புகளுக்கு: 416.834.1081

**MARKHAM & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.271.6657

**KINGSTON & MORNINGSIDE**
Newly done 2 bedroom bsmt for rent. Sep. entrance, washer, dryer, parking. Close to TTC, school, shopping. Avail. immediately. No pets. Rent negotiable.
416.289.9507 / 416.720.9507

**MEADOWVALE & KINGSTON**
1 Bedroom bsmt for rent. Parking, laundry, full washroom. Close to all facilities.
Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.344.0585

**VICTORIAPARK & ELLESMERE**
1 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry, utilities inclu. Close to TTC, mall & more.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.576.2655 / 416.444.2655 / 416.844.2655

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to TTC, mall.
Avail. immediatelty.
647.783.4850 / 905.294.2674
416.293.6211

**WARDEN & SHEPPARD**
ஒரு அறை basement மூன்று நேரச் சாப்பாட்டுடன் வாடகைக்கு உண்டு. எல்லா வசதிகளும் அண்மையில் உண்டு. பெண்கள் அல்லது வயோதிபப் பெண்கள் விரும்பத்தக்கது.
Avail. immediately.
416.299.4895 / 416.201.1222

# CONDO FOR RENT

**NEILSON & MCLEVIN**
1 Bedroom condo. for rent. Close TTC, mall.
Avail. immediately.
416.208.7246 / 416.896.8388

# CONDO FOR RENT OR SALE

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom condo for sale or rent. Close to TTC, mall, temple. Avail. immediately.
416.282.2668 / 416.799.0352

# RESTAURANT FOR SALE

Scarborough வில் ஐந்து வருட காலமாக நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ் உணவகம் ஒன்று விற்பனைக்கு உண்டு
647.333.9676 / 416.431.5931

# SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**
சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 25, 26

# ROOM RENT

**MCCOWAN & HWY 401**
1 Bedroom for rent. parking, laundry. Close to TTC, Scarborough Town Center.
Avail. immediately.
647.628.6494 / 647.350.3956

**MARKHAM & ELLESMERE**
10 Tuxedo Court
2 அறைகள் கொண்ட Apt. இல் ஒரு அறை உடனடியாக வாடகைக்கு உண்டு. Close to TTC, school, shopping, தமிழ்கடைகள். Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.430.0140

**MARKHAM & LAWRENCE**
Rooms வாடகைக்கு உண்டு. Kitchen, washroom, sep. entrance, parking, laundry. Close to mall, school, TTC. Excellent condition.
Avail. immediately.
416.438.2552 / 647.853.5524

**MARKHAM & ELLESMERE**
1 Bedroom bachelor apt இல் வாடகைக்கு உண்டு. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.301.8909

**NEILSON & MCLEVIN**
1 Bedroom for rent. Sep.entrance, laundry. Close to TTC, school, mall, library.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.831.8549

**BRIMLEY & SHEPPARED**
4 அறைகள் கொண்ட வீட்டில் upper level room for rent. Start immediate occupancy. Close to mall, park, TTC, school, bank.
Also house avail. for family.
தொடர்புகளுக்கு: 416.824.7725

**BELLAMY & ELLESMERE**
மேல்தளத்தில் 3 அறைகள் வாடகைக்கு உண்டு. Close to all facilities. Avail. March 01, 2012.
தொடர்புகளுக்கு: 647.920.2185

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom for rent. Washroom, livingroom, kitchen, sep. entrance, hydro & cable included. Close to Mclevin, Markham & Sheppard.
தொடர்புகளுக்கு: 416.286.8840 / 416.738.6373 / 416.278.8624

**MIDLAND & EGLINTON**
1 Bedroom for rent. Laundry, parking. Close to TTC, Kennedy Subway. Ladies preferred.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.402.5253

**BRIMLEY & LAWRENCE**
1 Bedroom for rent. Laundry, parking. Close to TTC, S.P Importants. Avail. Anytime.
No smoking.
தொடர்புகளுக்கு: 416.264.7891

**KENNEDY & LAWRENCE**
1 Room for rent. Attached washroom, 3 min. walk to Lawrence LRT. ஒருவர் விரும்பத்தக்கது.
Available immediately.
416.994.9635 / 416.757.9456

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Ladies preferred.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.906.5013

# ROOM RENT

**LAKESHORE BLVD & ISLINGTON**
Rooms for rent. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.417.5059

**BURNHAMTHORPE & Q.E.W.**
சந்திப்புக்கு அருகாமையில் Condo. இல் 2 அறைகளில் 1 அறை வாடகைக்கு உண்டு.
**MARKHAM & LAWRENCE**
சந்திப்புக்கு அருகாமையில் Condo. இல் 2 அறைகளில் 1 அறை வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.875.4051

**MARKHAM & STEELES**
1 Room for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.703.1343

**BRIMLEY & STEELES**
1 Room for rent. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.844.7550

**BELLAMY & LAWRENCE**
Rooms for rent. Close to all facilities. Avail. immediately. Rent $280. All inclusive.
416.289.3459 / 416.433.0491

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
416.335.5242 /416.820.1999

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt இல் சகல வசதிகளுடன் உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 416.288.0303

**MCCOWAN & FINCH**
1 Bedroom for rent. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.298.3797

**MCCOWAN & EGLINTON**
2 Bedroon for rent. Close to all facilities.
Avail. Immediately.
416.792.2545 / 647.857.9773

**BIRCHMOUNT & MCNICOLL**
Rooms for rent. Close to all facilities.
Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.293.6211

**NEILSON & FINCH**
**MORNINGSIDE & FINCH**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately.
647.361.9527 / 416.825.9717

# மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட 2இல் செவ்வாய் உள்ள 34 வயதுடைய B.A. பட்டதாரியான மாப்பிள்ளைக்கு நல்ல குணமுடைய மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.
தொடர்புகளுக்கு: 416.768.8105

# FHAMIE DAYCARE

2 வயதிலிருந்து 7 வயது உள்ள குழந்தைகளை பராமரிக்கப்படும். English & Tamil வகுப்பு நடத்தப்படும்.
416.502.3033 / 647.855.3477

# SPACE FOR RENT

**KENNEDY & EGLINTON**
**HWY 10 & DUNDAS**
தொடர்புகளுக்கு: 647.716.2599

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கொக்குவில் Temple road இல் 2½ பரப்புக்காணியுடன் 3 அறைகள் கொண்ட வீடு ஒன்று விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 416.806.5397

# GRINDING MILL FOR SALE

சகல இயந்திர உபகரணங்களுடன் Grinding mill ஒன்று விற்பனைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: 416.500.6979

# HOUSE FOR RENT

## H/R

**MARKHAM & DENNISON**
4 Bedroom + 2 bedroom bsmt for rent. Also other 2 bedroom bsmt rent in a same intersection. Close to all facilities.
Avail. February 01, 2012
905.599.1622 / 647.986.8622

**STEELES & 9THLINE**
4 Bedroom house for rent. 4 Washrooms. Close to all facilities. 2 Bedroom bsmt also avail. Avail. February 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.931.3444

**BIRCHMOUNT & ELLESMERE**
3 Bedroom house for rent. Kitchen, living room, 2 1/2 washroom. Close to all facilities. No pets & No smoking. $1590 + utilities. Avail. February 01, 2012.
தொடர்புகளுக்கு: 416.291.5311

**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
அறைகள் தனியாகவும் கொடுக்கப்படும்.
வயோதிபர்கள் விரும்பத்தக்கது.
647.293.7090 / 416.283.9696

**MARKHAM & SHEPPARD**
3 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. Parking, laundry. Avail. immediately.
அத்துடன் Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance.
பிள்ளைகளையும் பராமரிக்கப்படும்.
416.724.1837 / 416.707.8053

**BRIMLEY & SHEPPARD**
**ELLESMERE & BELLAMY**
3 bedrooms upper floor + 3 bedrooms in the Bsmt house for rent. Close to all facilities.
Avail. immediately.
416.388.8662 / 416.543.4737

**MARKHAM & ELLESMERE**
3 Bedroom house for rent. Parking. Close to TTC, high school, mall. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 647.710.9526

# JOB JOB JOB

## தேவை

**9TH LINE & STOUVILLE**
வீட்டுடன் இருந்து பிள்ளைகளைப் பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை.
647.991.5871 / 416.852.4512

**KENNEDY & ELLESMERE**
சந்திப்புக்கு அருகாமையில் அமைந்துள்ள தமிழ் சுப்பர் மார்கட் ஒன்றின் மீன் பகுதிக்கு வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. மேலதிக தொடர்புகளுக்கு: 647.430.8238

**MIDLAND & LAWRENCE**
Flooring stone experience sale person in scarborough.
தொடர்புகளுக்கு: 416.830.3932

**இலங்கை கனேடிய சமூக சேவை நிலையம்**
- Settlement Service
- Domestic Violence
- Alcohol Counseling
- Other Social Service

தொடர்புகளுக்கு
Main Office: Mississauga
Branch Office: Scarborough
**905.268.0259**

# இன்சுவை உணவுகள்

We can delivery your home. **அப்பம்,** தோசை, கொத்துரொட்டி, குழல்பிட்டு, பிரியாணி மற்றும் Shorteats, cake பலகார வகைகள் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும்.
Birthday, ஒன்றுகூடுதல், விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டில் வந்து special யாழ்ப்பாண அப்பம், தோசை சுடச்சுட செய்தரப்படும்.
Monthly சாப்பாடும் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு: 647.522.7599

# மணமகன் தேவை

1985 இல் பிறந்த பல்கலைக்கழகப் பட்டதாரியான 8இல் செவ்வாய் உள்ள மணமகளுக்கு ரொரன்ரோவில் படித்த வேலை புரியும் நற்குணமுள்ள மணமகன் தேவை.

தொடர்புகளுக்கு: விளம்பரம்
***5215 FINCH AVE. E.,***
***#201, TORONTO, ON M1S 0C2,***
***CANADA***

# CAR FOR SALE

Honda Accord 1997. Silver colour.
Toyota Camry 1994. Green colour.
தொடர்புகளுக்கு: 416.400.1265

# CAR WANTED

Toyota camry 1995 - 1998. 4 Cylinder.
Any condition.
தொடர்புகளுக்கு: 416.832.1359

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 24, 26



# மாணவர் பகுதி

S.F. Xavier (ஆசிரியர்)

BY. Mr. S.F. Xavier (Teacher) -TEL: 647.340.9490 / 647.831.0070

## Answers TUTORIAL 290

(1) 4 x 6! = 2880

(2) Let A be the event Sureka goes h Toronto University. And B be the event selene goes to Toronto. P (A) = 1/2, P (B/A) = 3/4. Then P (B n A) = P (n) X P(B/A)
= 1/2 X 3/4 3/8
Probability of both attend Toronto University in 3/8

(3) for f(x) is continuous, xt x = 5
y = 8 ——— (i) 5a + 3 = 8———(ii)
25 + 5b + a = 8 ———(iii) Sub a = 1 is (iii)
25 + 5b + 1 = 8 5 = -18
b = -18/5 a = 1, = -18/5

(4) Problem is Lt $\frac{(x + 8)^{1/3} - 2}{x}$
x——> 0
Let u = $(x + 8)^{1/3}$, Then $u^3$ = x + 8
x = $u^3$ - 8 when x ——> 0, U ——> 2.
Lt $\frac{(x + 8)^{1/3} - 2}{x}$ Lt $\frac{u - 2}{u^3 - 8}$
u ——> 

= LT $\frac{U - 2}{(u - 2)(u^2 + a + 4)}$
U ——>2
LT $\frac{1}{u2 + x + 4}$
u ——> 2
1/4 + 4 + 4 = 1/12

(5) Lim $\frac{\sqrt{x + 1} - \sqrt{2x + 1}}{\sqrt{3x + 4} - \sqrt{2x + 4}}$
x ——>0
=Lt √x + 1 - √2x + 1 x √x + 1 + √2x + 1 x √2x +4
√x + 1 + √2x +1 √3x + 4 - √2x + 4 x √3x + 4 + √2x + 4

=Lt is (x + 1 - 2x - 1) √3x + 4 + √2x + 4
x —> 0 (3x + 4 - 2x - 4 x √x + 1 + √2x + 1
Lt (-1) (4/2) = -2
x —> 0

### Tutorial 291 Questions

((1) A coin is tossed nine times, In how many wages could the resulted be six heads and three tails? (For Gr. 12)

(2) For what value of b does Lim $x^2$ + bx - 3/x - 1 exist. (For Gr. 12)

(3) A student 1.6m tall walks directly away from a lamp post at a rate of 1.2 m/s. A light is situated 8m above the ground on the lamp post. Show that the student's shadow is lenthening at a rate of 0.3 m/s. When she is 20m from the base of the lamp post. (For Gr. 12)

(4) Find the equation of the tangent to the graph of $y^3$ - 3xy - 5 = 0 at (2, -1). (For Gr. 12)

(5) Given a and b are unit vectors.
(a) If the angle between them is 60˚ calculate (6a + b), (a - 2h)
(b) If Ia + hI = √3, determine (2a - 5h), (h + 3a). (For Gr. 12)

# இன்னொரு...

### 29ஆம் பக்கத்தொடர்ச்சி

வணக்கத்துடனேயே நின்றுவிட்டாங்களே இந்தக் கல்லுளி மங்கன்கள்.
வெளியே அடுத்த அறையில் மணியன் மற்ற மூவருடனும் நின்று பார்த்துக் கொண்டிருந்தான். இவர்களது உரையாடல்களை உடனுக்குடன் மொழிபெயர்த்துக் கூறுவதற்கு. ஆனாலும் அவனுக்கு அதிக வேலை இல்லாதது போல் இருந்தது.

இப்போது செழியனும் கார்த்திக்கும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.
இவர்களிடம் நேரடியாகவே விடயத்திற்கு வரவேண்டும் உண்மையிலேயே இவர்களிடம் ஏதோ இரகசியம் மறைந்துதான் உள்ளது.

இந்த நேரத்தில் சான் கூறியதை நினைவு படுத்திக் கொண்டான் கார்த்திக்.
'ஒருவேளை இவர்கள் உண்மையில் வேற்றுக் கிரகத்தில் இருந்துதான் வந்தவர்கள் எனின் இவர்களது அறிவியல் நிலை மிகவும் உயர்ந்ததாக இருக்கும். அப்பிடியானவர்கள் ஒருவேளை வன்முறைகளை விரும்புபவர்களாக இருக்க மாட்டார்கள். நட்பாக நெருங்கினால்தான் இவர்களிடம் இருந்து விடயங்களைப் பெறக் கூடியதாக இருக்கும். பார்த்து நடந்து கொள்ளுங்கள்'

அவ்வறையில் இருந்த கதிரையில் செழியன் அமர்ந்து கொண்டான். அதில் ஆபத்தில்லை என்பது அவனுக்குத் தெரியும். முகத்தில் சலிப்புத் தெரிந்தது. இயல்பாகவே அந்தச் சலிப்பு வந்ததா அல்லது அப்படிக் காட்டிக் கொண்டானா தெரியவில்லை. :இவங்கள் கதைக்கவே மாட்டாங்கள் போலை இருக்கு. நாங்கள் கேட்பது இவர்களுக்கு விளங்காமல் இல்லை என்பது முகத்தைப் பாக்கவே தெரியுது ஏன் இப்படிப் பேசாமல் இருக்கிறாங்கள்?'

கார்த்திக் நாகராசனுக்குக் கிட்டவாக வந்து கேட்டான் 'சரி, நாங்கள் நேரடியாகவே விசயத்திற்கு வருகிறோம். நன்றாகவே தமிழ் கதைக்கின்றீர்கள். பார்ப்பதற்கும் யாழ்ப்பாணத்தவர்களின் சாயல் தென்படுகின்றது. நீங்கள் பூமியின் தமிழ் மக்கள்தான் என்பதில் எங்களுக்கு எந்தவித ஐயமுமில்லை. அப்ப ஏன் கதைக்கிறியள் இல்லை? உங்களின் உடைகளிலும், உடம்புகளிலும்தான் வித்தியாசமான, பூமியில் இல்லாத பொருட்களின் படிவுகள் இருக்கின்றன. அதுதான் பெரிய'. நீங்கள் பூமியல்லாத வேறு கிரகத்தில் இருந்து வந்திருக்கின்றீர்களா? அல்லது பூமியில் உள்ள ஏதாவது இரகசிய விஞ்ஞான அமைப்பின் உறுப்பினர்களா?'

இந்த நேரத்தில் அவர்களில் ஒருவன், இன்பன் அதிசயமாக, தனது மௌனத்தைக் கலைத்துப் பேசுவதற்கு வாயைத்திறந்தான்.

(இன்னமும் வரும்)

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at *Scarborough & Stouffville*
**Contact: 647.340.9490 / 647.831.0363**

BUY, SELL or LEASE
Dinesh Jeganathan
Sales Representative

cell: 647-895-3466
email: jdinesh@live.ca
office: 416-298-3200
fax: 416-298-3440
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, Ontario, M1P 4S6
*each office independently owned and operated
** Not intended to solicit Buyers/Sellers under representation agreement.

# இளையோர் ஆக்கம்

விளம்பரம் தனது எழுத்தாளர்களை வருடம் தோறும் தை மாதத்தில் வரும் முதல் சனிக்கிழமை கௌரவிக்கின்றது. கடந்த வைபவத்தில் பல எழுத்தாளர்கள் விளம்பரத்தில் அடுத்த தலைமுறையை எழுதத் தூண்டவேண்டும் என்று கேட்டு கொண்டார்கள். அதற்கு இணங்க விளம்பரத்தின் பொங்கல் இதழ் உடன் **இளையோருக்காக இளையோரால் தமிழில் எழுதப்படும் ஆக்கங்களை பிரசுரிக்கப்படுகின்றது.**

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 24, 25

COMPUTER REPAIR
+ கணனி திருத்தவேலைகள்
+ கணனி தேவைகள்
+ அடிப்படை கணனி பயிற்சி
+ இலவச ஆலோசனைகள்
ProWin Computers.
2383 Eglinton Ave. East
(Wind Mobile Store) Kennedy & Eglinton
416 - 879 7489 / 647 - 340 5568

EATON ACADEMY
An Ontario Private School Registered with the Ministry of Education.
ALL HIGH SCHOOL CREDIT COURSES OFFERED
Courses Start in December, February, July and August
For Registration and Further Details Call
Contact: 416.669.3101
80 Nashdene Road, Building D, Unit 220 (MARKHAM & NASHDENE)

OFFICE SPACE FOR RENT
MORNINGSIDE & SHEPPARD
Real Estate, Mortgage, Insurance offices போன்றவையும் Show Room உம் நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. Including High-speed Internet, Electricity, Heating, Water.
Pl. Call: Murale - 416.569.4065

யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# பணக்காரனும் கள்வனும்

ஒரு நகரத்தில், ஒரு கள்வன் வாழ்ந்து வந்தான். அவனுக்கு பல தீய குணங்கள் இருந்தன. அதில் கொலை, கொள்ளை, பொய் கூறுவதும் அடங்கும். ஒரு நாள் அவன் மனம் மாறி ஒரு முனிவரிடம் சென்றான்.



அவன், 'நான் நல்லவனாக மாற என்ன செய்ய வேண்டும்?' என்று கேட்டான். முனிவரும் "அனைத்து கெட்ட பழக்கங்களையும் நிறுத்தி விடு" என்றார். கள்வனோ, "இது கடினம். ஒரு பழக்கத்தை மட்டும் சொல்லுங்கோ" என்றான். முனிவர் பொய் மட்டும் கூற வேண்டாம் என்றார். அதன்படி கள்வன் நடந்தான்.

ஓர் இரவு, அந்த நகரத்தின் பணக்காரரின் வீட்டில் திருடப்போனான் கள்வன். அப்பொழுது அந்தப் பணக்காரர் வெளியே இருந்தார். அவர் கள்வனைக் கண்டு, 'நீ திருடப் போகிறாயா?' என்று கேட்டார். கள்வனும், "ஓம்" என்றான். 'நான் உதவினால், நீ எனக்கு இரண்டில் ஒரு பங்கு தருவாயா?' என்றார் பணக்காரர். கள்வன் அவர் தான் பணக்காரர் என்று அறியாமல் சரி என்றான். கள்வன் வீட்டுக்குள் செல்லும் போது, பணக்காரர் யாரும் வருகிறார்களோ என வெளியில் காவல் காத்தார். கள்ளன் மூன்று தங்கம் நிறைந்த மூட்டைகளை பணக்காரர் வீட்டில் கண்டு அவற்றில் இரண்டை மட்டும் திருடினான். ஒன்றை வெளியே இருந்த பணக்காரரிடம் கொடுத்து, '3 மூட்டைகள் இருந்தன. ஆனால் அதை பிரிக்க முடியாததால் இரண்டை மட்டும் எடுத்தேன்.' என்று கூறிச் சென்றான்.

சந்தேகத்துடன் பணக்காரர் வீட்டினுள் சென்று மூட்டைகள் இருந்த இடத்தைப் பார்த்தபொழுது, கள்வன் உண்மை தான் கூறினான் என்று அறிந்து வியப்பு அடைந்தார்.

பணக்காரருக்கு ஒரு நேர்மையற்ற உதவியாளர் இருந்தான். இதை பணக்காரரும் அறிந்திருந்தார். ஆனால் அதை நிரூபிக்க அவருக்கு ஆதாரம் இருக்கவில்லை. அதனால் அவனை சோதிக்க பணக்காரர், தன்னிடமுள்ள தங்க மூட்டைகளை சரிபார்க்கும்படி கட்டளை இட்டார். அப்பொழுது அவன் 2 மூட்டைகள் இல்லாததை கண்டு மற்றையதை தான் எடுத்தான். பின்னர் பணக்காரரிடம் 3 மூட்டைகளும் திருடப்பட்டு விட்டன என்று பொய் கூறினான்.

அவன் செய்த குற்றத்தை அறிந்த பணக்காரர் அந்த வேலை ஆளை சிறையில் அடைப்பித்தான். விசாரணை செய்த பொழுது அவன் பணக்காரரிடம் பல பொருட்களை திருடி இருக்கிறான் என்று பணக்காரரும் அறிந்தார். பணக்காரர் தனக்கு ஒரு புதிய உதவியாளரை தேடினார். அப்பொழுது அவருக்கு உண்மை பேசிய திருடனின் ஞாபகம் வந்தது. அந்த கள்வனை தேடி கண்டு பிடித்தார். பணக்காரர் அவரை ஒரு உதவியாளராக்கினார்.

நடந்ததை அறிந்த கள்வன் முனிவர் கூறியது உண்மை என்று உணர்ந்து சந்தோசப்பட்டான்.

'பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று' - குறள்

இதன் விளக்கம்: கூடாத செய்கைகளை செய்யாமல் இருப்பதால் வரும் நன்மைகளை விட, பொய் கூறாத பண்பு பொய்த்து போகாமல் வைத்திருப்பது கூட கூடிய நன்மையைத் தரும்.

**நீதி: உண்மை உயர்வு தரும்.**



**ஞா. ஆரணி**
அகவை 13

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com

# தொழில்நுட்பம் - வருங்கால தொலைநோக்கு

## இன்றில் இருந்து 2500 வருடம் வரை என்ன நடக்கும்?

## ஒரு அறிவுபூர்வமான தொழில்நுட்ப அலசல்:

**பகுதி 02**

**இது ஆங்கில மூலத்தின் சுருங்கிய தமிழ் வடிவம்**

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

### 2. வாகனம் - பொழுதுபோக்கு:

### வருடம்: 0000 - 2010 - பழக்கம் மாறவில்லை

கடந்த 200 வருடங்களாக, சகல இயங்கும் வாகனங்களிலும் உட்தகன இயந்திரங் களைப் பாவிப்பதிலும், அவற்றை மேலும், மேலும் அதிசக்தி உள்ளவையாக மாற்றுவதிலும் தான் மனிதன் விடா முயற்சியில் ஈடுபட்டு இருந்தான். ஆனால் புதிய, புதிய சக்திரூபக் கண்டுபிடிப்புகளி னால் மனிதன் படிப்படியாக வித்தியாசமான இயந்திர நுட்பங்களினுள் புகுந்துவிட்டான்.

### வருடம்: 2010 - 2050 - மின்சாரம்:

முதல் பத்து வருடங்களில் வாகனங்களில் எதனோல் கலந்த பெட்ரோலும், பின்னர் பெற்றோல்/மின்சாரம் கலந்த இயக்கிகளும், அதன் பின்னர் முழு அளவு மின்சார தானுந்திகளும் (automovers) பாவனைக்கு வரும். இந்தத் தானுந்திகள் மிகவும் சிறிய அளவினதாக, ஆனால் மிகவும் பலமுள்ளதாகவும் இருக்கும். இவற்றின் கூரையில் நனோ சூரிய மின் கலங்கள் பொருத்தப்பட்டு வேண்டிய அளவு சக்தியை சூரியனிலிருந்து பெற்றுக்கொள்ளும். அப்போது, இதனால் எரிபொருள் செலவு என்பது மின்கலன்களின் பராமரிப்புக்குத் தேவையான அளவு மாத்திரமே.

2020 இலிருந்து ஐதரசன் எரிபொருள் இன்னும் மிகக்குறைந்த செலவில் சக்தி கூடிய உட்தகன இயந்திரங்களை இயக்குவதற்குப் பாவிக்கப்படும். இக்காலத்தில், நுண்ணறிவில் தானியங்கும் தானுந்தி பாவனைக்கு வரும். இவ்வாகனக் கணினியின் திரையில், நீங்கள் சென்றடைய வேண்டிய இடத்து விலாசத்தை இட்டதுமே, இதன் உணர்விகள், சுற்றாடலில் காணப்படும் வாகனங்கள், தடைகள் எல்லாவற்றையும் கண்காணித்து உரிய இடத்திற்கு விபத்தே இல்லாமல் அழைத்துச் செல்லும். நீங்கள் இந்தப் பயணத்தின் போது ஒரு தூக்கமே போடலாம். இப்போது, வாகன விபத்து என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆனால் தானுந்தியின் வேகம் 200 கி.மீ. வரையே இருக்கும். ஆனால், 2020 இலில் வீதிகளின் நெரிசல் காரணமாக விண்வழியே செல்லக் கூடிய வான் கார் (aircar) தனிப்பட்ட உபயோகத்திற்காக கண்டுபிடிக்கப்படும். இவ்வண்டி, 300 கி.மீ. வேகத்தில் செல்லக்கூடியதாய் இருந்தாலும், அதன் பாரிய (ஆனால் மடிக்கக்கூடிய) சிறகுகளும், அது மேல் ஏறுவதற்குத் தேவையான நீண்ட ஓடுபாதையும் மனிதனுக்குச் சங்கடத்தை உண்டுபண்ணும். சிறகுகள் மடிக்கப்பட்ட நிலையில் வீட்டிலிருந்து ஒரு ஓடுபாதை நோக்கிப் போகவேண்டி இருக்கும்.

இதனால், 2030 இல் வான் ஷூட்டர் (air shooter) எனப்படும் வாகனம் ஒரு புதிய அத்தியாயத்தினுட்புகும். இது, உயர்நுட்ப ஐதரசன் மின்கலங்களினால் இயக்கப்படும். சின்னஞ்சிறு ஜெட் இயந்திரங்கள் அடங்கிய, சிறகுகள் இல்லாத 2 - 5 இருக்கைகளைக் கொண்டது. வீட்டில் இருந்தபடியே மேலெழுந்து பறக்கலாம். திரும்பவும் வீட்டின் முன்பாகவே வந்து இறங்கலாம். முக்கியமாக, இதன் ஜெட் இயந்திரங்கள் காற்றினை மட்டும்தான் மிக அழுத்தத்துடன் பின்னே தள்ளும். கொடிய கரியமில வாயுவை அல்ல. வான் ஷூட்டர், எதிர்பாராத விபத்து ஏற்பட்டால் உபயோகிக்க வான் குடைகளைக் கொண்டிருக்கும்.

2035 இல் சமநிலை தழும்பியதால் ஏற்பட்ட ஒரு சில விபத்துகளின் பின்னர், ஜி-பலன்சர் எனப்படும் மின்பொறி முறை புவியீர்ப்பு தள நிறுத்திக் கருவி கண்டுபிடிக்கப்படும். இதனால், வாகனம் ஒருபக்கம் சரிவது என்பது பழைய கதையாகி, விபத்து என்பதே இல்லாமல் போய்விடும்.

மேலும், இவை தானிங்கு சாதனங்களைக் கொண்டிருக்கும் என்பது சொல்லவே தேவை இல்லை.

### 3D - மாய மெய்மை - பிரயாணங்கள் குறையும்:

2020இல் முப்பரிமாண மாய மெய்மைத் தொழில் நுட்பம் ஆரம்பக்கட்டத்தில் இருக்கும். தற்போது தொலைபேசியில் குரல் கேட்டுக் கதைப்பது போல, இக்காலத்தில் உங்கள் உறவினர், நண்பர்கள், ஊழியர்களுடன் நேருக்கு நேர், முகத்தோடு முகம் பார்த்துக் கதைக்கலாம். ஆரம்பத்தில் முப்பரிமாண உருவம் திரையில் மட்டும்தான் தெரியும் காலப்போக்கில் உங்கள் முன்பாகவே முழு உருவத்தின் மாயத் தோற்றம் காணப்படும். இவர்களுடன் வேண்டியமட்டும் கதைக்கலாம். ஆனால், விருந்து மட்டும் தற்சமயம் வைக்க



**- ஆக்கம்: செல்லத்துரை சந்திரகாசன் -**
***santhira_gasan@Yahoo.com.au***

இயலாது. அதுவும் நடக்கும் இன்னும் 200 வருடங்களில்! இக்காரணத்தினால் மனிதன் பிரயாணம் செய்வது குறைந்து விடும்.

### இயந்திர மனிதர் - பிரயாணங்கள் இன்னும் குறையும்

மேலும், புதிய பரம்பரை இயந்திர மனிதர் 2040 களில் பலவிதமான மனித கருமங்களைச் செய்யத் தொடங்கிவிடுவர். அத்தோடு 2050 இல் 500 கி.மீ. வேகத்தில் தானே இயங்கக்கூடிய வான் ஷூட்டர்கள் வந்துவிட்டதால் மனிதன் பிரயாணம் செய்வது மேலும் குறையும்.

### வருடம்: 2050 - 2200 - நன்சாரம்

தற்போது, என் கதிர்களின் கண்டுபிடிப்பினால் சக்தியானது நேரடியாகவே வான்வெளி உணர்பொறியில் இருந்து பெறப்படுவதால், இன்னும் சிறந்த தொழில்நுட்பத்தோடு கூடிய 2000 கி.மீ. வேகத்தில் செல்லக்கூடிய வான்ஜெட்டுகள் (airjets) பாவனைக்கு வரும். சகல பண்டப்போக்குவரத்து யாவும் கடல் மார்க்கமாக 500 கி.மீ. வேக, தானியங்கிக் கடல் கப்பல்கள் மூலம் நடத்தப்படும். ஆகவே, பயணம் செய்ய வேண்டிய அவசியம் இன்னும் குறையும்.

### வருடம்: 2200 - 2350 - கோகோன்

கோகோன் சக்தி காலத்தில் பிரயாணத் துறையில் பிரமாண்டமான வளர்ச்சி ஏற்பட்டு அதிகூடிய தொழில்நுட்ப சாதனங்களோடு கூடிய படுவேக (3000 கி.மீ./ம) ஜெட்டுகள் பாவனைக்கு வந்துவிடும். அப்போது எந்தவொரு நில-நீர் வாகனங்களும் இருக்காது. ஆதலால், வான் என்ற பதமும் வாகனப் பெயரின் முன் பாவிப்பது இல்லாமல் போய்விடும்.

### 3 D - உலகப்படம் - ஏன் பயணம்?

உலகின் எந்த மூலை, முடுக்குகள் எதுவானாலும் சகல விதமான துல்லிய விபரங்களுடனும், நீங்கள் விரும்பிய அளவில் நீள, அகல, உயரங்களோடு, முழு உருவமாகவே உங்கள் முன்னால் இருக்கும்போது அவற்றை நேரில் போய்ப் பார்க்க வேண்டும் என்று யார் விரும்புவார்?

### உலகமே உன் காலடியில்! - இன்னுமா பயணம்?

2200 இல், உங்களுக்குத் தேவையான, நீங்கள் போக விரும்பும் அதியசய உலகம், பூந்தோட்டம், கடற்கரை, பவளப்பாறை மற்றும் எந்தப் பொழுதுபோக்கு இடங்களாயினும் சரி, மாய மெய்மை நுட்பத்தினால் உங்கள் வீட்டின் உள்ளேயே உருவாக்கிவிடலாம். நம்பினால் நம்புங்கள், இதற்கு உங்களுக்கு ஒரு செலவும் இருக்காது, ஏக்கர் கணக்கில் நிலமும் தேவை இல்லை. எல்லாம் உங்கள் மூளைக்குள்ளேயே கட்டப்பட்டு அவற்றின் உண்மையான, அதே ஆனந்த உணர்ச்சியினை அனுபவிப்பீர்கள். இன்னுமா பயணம் தேவை?

2350இல் superjet களின் வேகம் 5000 கி.மீ.ஐத் தாண்டிவிடும். ஆனால் பயணம் செய்வோர் தொகைதான் குறைந்துவிடும்.

### வருடம்: 2350 - 2500 - எல்லாம் ஓம் மயம்

இவ்வளவு முன்னேற்றத்தின் பின்பும், மன்னிக்கவும், மனிதன் இன்னமும் குண்டுசட்டிக்குள்தான் குதிரை ஓட்டிக் கொண்டிருப்பது தெரியவரும். இன்னமும் ஒருவட்டத்தினுள் இருந்தபடி பிரயாணம் செய்வதற்கு ஒரு வண்டியைத் தான் எப்பவும் உருவாக்கத் துடித்துக்கொண்டு இருக்கிறான். பிரயாணம் ஒன்றைச் செய்வதற்கு உண்மையில் ஒரு வாகனம் தேவையா? வாகனமே இல்லாமல் பயணிக்க முடியாதா? முடியும்! மேலே செல்லுங்கள்!

### சக்திச் சொட்டுத் தத்துவம் (Quantum Theory) - எல்லாம் சக்தி மயம்

மனிதனின் அறிவு ஞானம், இருண்ட, குறுகிய கோணத்திலிருந்து வெளிப்பட்டு, சக்திச் சொட்டுத் தத்துவம் பற்றிய சிந்தனை தலை தூக்கத் தொடங்கியது. இந்தப் பிரபஞ்சத்திலே உள்ள எந்த, எல்லா உயிர்கள், பொருட்கள், செடிகள், கொடிகள், சூரியர், சந்திரர், வெள்ளிகள், கிரகங்கள், வெளிமண்டலங்கள், அணுக்கள், மூலக்கூறுகள், சிறிதோ, பெரிதோ எல்லாம் ஒரு முடிவே இல்லாத பலவித அதிர்வுகளைக் கொண்ட சக்திகளேயாகும். இம்மாபெரும் சக்தி எப்போதும் எம் கண்முன்னே இருந்தும், மனிதனின்

**தொடர்ச்சி 30ஆம் பக்கம்**

# இன்னொரு... ஆச்சி வீடு

**பாகம் - 3 பகுதி 32**

தொடர்கதை - பரபரப்பு, மர்மம், வியப்பு என்பன நிறைந்த இக்கதையில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும் கற்பனையே இன்னொரு....வின் முதற்பகுதியில் பரபரப்பைப் பார்த்தீர்கள். இரண்டாம் பகுதியில் துலக்கப்படாத மர்மத்தின் ஊடாகச் சென்றீர்கள். இந்த மூன்றாம் பகுதியிலோ பல வியப்பான சம்பவங்களைக் காணப் போகின்றீர்கள்.

**◊ சி.வி. நாதன் ◊**

அந்த அறைக்கு கதவு என ஒன்றும் இருக்கவில்லை. மெதுவாக சத்தமின்றி ஒருபக்கச் சுவரின் மூலையில் விரிசல் ஏற்பட்டு ஒரு வாசல் போல் ஆக, செழியனும், கார்த்திக்கும் உள்ளே நுழைந்தனர். மணியன் அவர்களுடன் சேரவில்லை. மறுஅறையில் எட்மனுடனும், வில்லியத்துடனும் நின்று கொண்டிருந்தான். அறையில் நடக்கக் கூடிய பேச்சு வார்த்தைகளை உடனுக்குடனேயே மொழி பெயர்த்துக் கொடுப்பதற்காக.

இப்போது இன்பனும் நாகராசனும் மேசையின் எதிரெதிர்ப் பக்கங்களில் இருந்து கொண்டிருந்தார்கள். ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டிருந்தாலும் கதைக்கவில்லை. செழியனையும், கார்த்திக்கையும் பார்த்தவர்கள், மென்முறுவலுடன், மற்ற அறைப் பக்கமாகப் பார்த்துவிட்டு, மீண்டும் கார்த்திக்கையும் செழியனையும் பார்த்தார்கள்.

தாங்கள் கவனிப்பது அவர்களுக்குத் தெரியுமோ எனச் சான் நினைத்துக் கொண்டார்.

செழியன் 'ஹலோ' எனக் கூற, இருவரும் ஏக காலத்தில் 'வணக்கம்' என்றார்கள். முகத்தில் ஒருவேளை புன்னகையும் அரும்பியதோ என கார்த்திக் நினைத்தான். அவர்களது குரலில் நட்புத் தன்மை இருந்ததைக் கண்டு கொண்டனர், இருவரும். அது அவர்களுக்குச் சற்றுத் தென்பைக் கொடுத்தது.

செழியனும், கார்த்திக்கும் சாதாரண உடைகள் போன்ற பாதுகாப்பு உடைகளிலேயே வந்திருந்தார்கள். முகக் கவசங்கள் ஏதும் அணிந்திருக்கவில்லை. இனியன் குடும்பத்தாரிடம் கண்டு கொண்ட ஆய்வு முடிவுகள், இவர்களால் இரசாயன ஆபத்துக்கள் இல்லை என்பதைக் காட்டி நின்றன. ஆயினும் தற்பாதுகாப்புப் பூச்சுக்கள் பாவித்திருந்தார்கள்.

'எப்படி! நலமாக இருக்கின்றீர்களா?' கார்த்திக்

பதிலில்லை.

அந்த அறைக்கு எங்கிருந்தோ இதமான காற்று வந்து கொண்டிருந்தது. வெளிச்சம் கூடப் போதுமானதாக இருந்தது.
'கொஞ்சம் தொந்தரவு செய்துவிட்டார்கள், இல்லையா?' செழியன்.

இதற்கும் பதிலில்லை. வெறுமனே ஒருவரை ஒருவர் பார்த்துவிட்டு மௌனமாக இருந்தார்கள்.

'எங்களுக்கு உங்களை என்ன மாதிரியாக'.. விருந்தோம்பல் செய்வதென்று தெரியவில்லை. சாப்பாடுகள் கூட இன்னதுதான் என்று... கார்த்திக் கூற,

சேர்ந்தாற் போல் இருவரதும் வாயில் புன்னகை போன்ற ஏதோ ஒன்று தோன்றி மறைந்தது. ஆனாலும் பதிலில்லை.
'நான் செழியன், இவர் கார்த்திக். இருவரும் தமிழர்கள்தான்' உங்களைப் போல் எனக்கூற வந்தவன், ஏனோ அவற்றைத் தவிர்த்து விட்டான்.
'எங்களுக்குத் தெரியும் நீங்கள் இருவரும் தமிழர்கள் என்று.' என்ற கார்த்திக், 'நீங்கள் நாகராசன், இவர் இன்பன், என்று இருவரையும் தனித்தனியே சுட்டிக் காட்டினான். ஏதாவது கூறுவார்கள் என எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

ம்கூம். வாயே திறக்கவில்லை. ஆனாலும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள் அடிக்கடி.
'உங்களைப் பற்றிய விபரங்கள் அறிவது எங்களுக்கு அவ்வளவு சிரமமல்ல. அதனால் எங்களுடன் கொஞ்சம் ஒத்துழைப்பது உங்களுக்கு நல்லது.' - கார்த்திக். கொஞ்சமாய் சினம் தெரிந்தது குரலில். அவர்கள் மசியவில்லை.

'நீங்கள் இப்ப நிற்பது எமது பூலோகத்தின் மிக இரகசியமானதும் பாதுகாப்பானதுமான இடம். இவ்விடத்தினை யாருமே அறிந்து கொள்ளவும் முடியாது, உங்களைத் தப்புவிக்கவும் முடியாது. நீங்களும் ஒத்துழைத்தால்தான் உங்களுக்கு விடுதலை கிடைக்கக் கூடிய வாய்ப்புக் கூடக் கிட்டலாம்.' - மீண்டும் கார்த்திக்.

இதற்கும் கூடப் பதில் வரவில்லை. ஆனால் அலட்சியமாகச் சிரிப்பது போல் சின்னவன், இன்பனின் முகத்தில் ஒரு நெளிவு ஓடி மறைய, மற்றவனைப் பார்த்துக் கொண்டான்.

செழியனுக்கும் கார்த்திக்கிற்கும் உள்ளூரக் கோபங்கோபமாய் வந்தது. அடக்கிக் கொண்டார்கள் வெறுமனே

தொடர்ச்சி 26ஆம் பக்கம்



# தொழில்நுட்பம் - வருங்கால...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

சிற்றறிவும், குறுகிய மனப்பாங்கும், தான் நினைப்பதே சரி என்ற அகங்காரமும் இவ்வளவு காலமும் இச்சக்தியின் மகத்துவத்தை அறியக் குறுக்கே நின்றன.

2400 இல், ஒவ்வொரு பொருட்களுக்குமான சக்தியின் அளவு மற்றும் அதன் அதிர்வு எண்ணிக்கை ஆகியவற்றைத் துல்லியமாகப் பகுப்பறிந்து, அந்தந்தப் பொருட்களை உருவாக்குவதற்கான வழிமுறைகளைக் கொண்ட பெம்ரோ சிருஷ்டி நுண் சிம்பு தயாரிக்கப்படும். இந்த நுண் சிம்புவின் உதவியால் எந்த ஒரு பொருளையும், தற்போது கடதாசியில் பிரதி எடுப்பதுபோல், முழு உருவத்தையும், முப்பரிமாணத்தில் பிரதி பண்ண முடியும். அதாவது, நீங்கள் பேருந்து ஒன்றைப் பிரதிபண்ண வேண்டுமென்றால், பேருந்துக்கான மூலபொருட்கள் (உபரிப் பாகங்கள் அல்ல) கொண்ட அறையினூடே அந்தப் பேருந்துவைச் செலுத்தி எடுத்தால் போதும், நுண் சிம்பு தன் வேலையைச் செய்து, புதிய பேருந்து அறையின் அடுத்த பக்கத்தால் வெளிவரும். 2450இல் இப்படி எதுவும் பிரதி பண்ணலாம். இனிப் பொருட்கள் வாங்க அங்கும் இங்கும் அலையவே தேவை இல்லை. பயணங்கள் என்பது கணிசமான அளவு குறைந்து விடும்.

## சிந்தனாசக்தி (Thought Energy) - பயணமே வேண்டாம்!

2450இல் சிந்தனாசக்தி பற்றிய புரிந்துணர்வு உண்டாகும். சிந்தனை என்பது ஒரு தூய சக்தி வடிவமே. இச்சக்தியானது அதிவேக அதிர்வுகளைக் கொண்டது. இது மனத்திற் தங்கியிருக்கிறது. நீங்கள் ஒரு பொருளை, அதாவது வீடு, கார், விலைமிக்க தொலைக்காட்சி அல்லது அழுக்குப் படர்ந்த சாக்கடை எதையும் பார்த்தாலும்




அவை யாவும் பலவிதமான சேர்க்கையிலான, விதவிதமான அதிர்வுகளைக் கொண்ட சக்தியின் ரூபங்களே. ஒரு மனிதன் தன் குறைந்த ஐந்து அறிவினைக் கொண்டு, அவனின் பார்வையில், அவனின் புலன்களுக்கு எட்டிய வரையில் ஒன்றைப் பார்த்து அது "இன்னது", "இருக்கிறது" என்றுதான் முடிவு செய்வான். அதனால், அவனுடைய புலன்களுக்கு அப்பாற்பட்ட, பல பரிமாணமுள்ள வேறுபல பொருட்கள் இருந்தும், அவனுடைய கண்களுக்குத் தெரியவில்லை என்ற காரணத்திற்காக, அந்தப் பொருட்கள் இல்லை என்று ஆகிவிடுமா? மனிதனுக்குத் தெரிந்த நாலு பரிமாணங்களாகிய நீளம், அகலம், உயரம், நேரம் (அல்லது வெளி) ஆகியவை எதையும் முன்பக்கமாகத்தான் நகர்ந்துகொண்டு இருக்கின்றன என்ற மயக்கத்தில் அவன் இருக்கின்றான். ஆனால் அவை பின்னோக்கியும் நகரலாம்.

2480 இல் இந்த மயக்கத்தில் இருந்து மனிதன் விடுபட்டு, சிந்தனாசக்தி பற்றிய முற்றுணர்வு தரும் ஓர் ஆறாவது அறிவினைப் பெறுவான்.

## சிந்தனாசக்தி - பொருளைப் பிரதி எடுக்கலாம்

தற்சமயம், உதாரணமாக, கார் ஒன்றைச் செய்வதற்கு பல சக்திகள் ஒன்றுசேர்ந்து தொழிற்பட வேண்டியிருக்கிறது. முதலில் சிந்தனைச் சக்தியைத் தொடர்ந்து வடிவமைப்பு, வரைபடம், மூலப்பொருட்கள் பென்சில், பேப்பரிலிருந்து மேசை, கணினி, மனிதர், இரும்பு, அலுமினியம், இயந்திரம், ஆணி, தொழிற்சாலை அது, இது என்று பலவிதமான, வித்தியாசமான சக்திகளின் ஒட்டுமொத்த மாற்றமே இறுதியில் கார் என்ற சக்தியாக வெளிவருகிறது. 2450 இல் மனிதன் இந்தச் சிந்தனாசக்தியைப் பாவித்து, சிக்கல்மிக்க, நீண்ட செய்முறைகள் இல்லாமல், நினைத்த உடனேயே விரும்பியதை உருவாக்கும் ஆற்றலைப் பெறுவான். அதுமட்டுமல்ல, சமய முனிவர்களைப்போல் முக்காலமும் உணர்ந்து ஒரு பொருளைப் பார்க்குமிடத்து, அப்பொருளில் உள்ள பொருட்கள் இதற்கு முன்பு எப்படி இருந்தது என்றும், பிற்காலத்தில் என்னவாக மாறும் என்பதும் அறியக்கூடிய புலனைப் பெறுவான்.

## சிந்தனாசக்தி - இங்கே மறைந்து அங்கே தோன்றலாம்

அவ்வேளை, இச்சக்தியின் ஒளியிலும்விட அதிவேக அலைகளின் அதிர்வுகளைக் கண்காணித்து, எந்த ஒரு பொருளையோ அல்லது மனிதனையோ, சட நிலையிலிருந்து சக்தி நிலைக்கு மாற்றித் திரும்பவும் இன்னொரு இடத்தில் சட நிலைக்கு மாற்றும் DARA எனப்படும் செப்ரோ நுண் சிம்பு நுட்பத்தை கண்டுபிடிப்பான். இதன்மூலம், இங்கே மறைந்து அங்கே தோன்றும் ஆற்றல் மனிதனுக்கு இயல்பாகவே வந்துவிடும். இந்த நுட்பத்தினால், பிரயாணத் தூரம், நேரம் என்பன ஒரு கேலிக்கதையாய் விடும். ஒருவர், இங்கே மறைந்து அண்டத்தின் எந்த இடத்திலும் கணப்பொழுதில் தோன்றிவிடலாம்.

சரி, இத்தோடு நிறுத்துவோம். இனி அடுத்தபகுதிகளில் மேலும் வினோதமான விடயங்களைப் பார்ப்போம்.

# எஸ். ராமகிருஷ்ணனுக்கு இயல் விருது

2011ம் ஆண்டுக்கான இயல் விருது தமிழ் மொழியின் மிக முக்கியமான எழுத்தாளரான எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. கனடாவில் இயங்கும் தமிழ் இலக்கியத் தோட்டம் அளிக்கும் இந்த வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது, கேடயமும் 1500 டொலர் மதிப்பும் கொண்டது. சுந்தர ராமசாமி, கே.கணேஷ், வெங்கட் சாமிநாதன், பத்மநாப ஐயர், ஜோர்ஜ் எல் ஹார்ட், தாசீசியஸ், லக்ஷ்மி ஹோம்ஸ்ரோம், அம்பை, கோவை ஞானி, ஐராவதம் மகாதேவன், எஸ்.பொன்னுத்துரை ஆகியவர்களைத் தொடர்ந்து இம்முறை இந்த விருதுக்கு உரியவராக கடந்த 25 வருடங்களாக தமிழுக்கு தன்னை அர்ப்பணித்துக்கொண்ட எஸ். ராமகிருஷ்ணன் அவர்கள் தேர்வாகியிருக்கிறார்.

இவர் கட்டுரைகள், சிறுகதைகள், நாவல்கள், விமர்சனங்கள், நாடகங்கள், குழந்தை இலக்கியம், சினிமா என பல இலக்கிய வகைப்பாட்டுகளில் இயங்கினாலும் இவருடைய புனைவு இலக்கியத்தின் போக்கு தமிழுக்கு புதிய வாசலை திறந்தது. மனித மனத்தையும் அதன் விசித்திரத்தையும், வசீகரத்தையும், வக்கிரத்தையும் மகத்தான தரிசனங்களாக வெளிப்படுத்தி உலகப் பிற இலக்கியங்களுக்கு சமனாக தமிழில் படைத்து வரும் இவரது சிறுகதைகள் ஆங்கிலம், ஜேர்மன், பிரெஞ்சு, கன்னடம், வங்காளம், ஹிந்தி, மலையாளம் ஆகிய பல மொழிகளில்



மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. அத்துடன் இவர் 'அட்சரம்' என்ற இலக்கிய காலாண்டிதழையும் நடத்தி வருகிறார்.

இவர் ஏழு நாவல்கள், மூன்று குழந்தை இலக்கிய நூல்கள், ஒன்பது நாடகங்கள், இருபது கட்டுரை தொகுப்புகள், எட்டு சிறுகதை தொகுப்புகள் என இதுவரை எழுதியிருப்பதுடன் 15 திரைப்படங்களிலும் பணியாற்றியிருக்கிறார். இவருடைய படைப்புகள் நாலு கல்லூரிகளிலும், இரண்டு பல்கலைக்கழகங்களிலும் பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றன. இவருடைய படைப்புலகம் பற்றி ஆய்வு செய்து மூவர் முனைவர் பட்டம் பெற்றிருக்கின்றனர். தமிழக அரசின் விருது (2007), ஞானவாணி விருது (2004), முற்போக்கு எழுத்தாளர் சங்க சிறந்த நாவல் விருது (2001), சிகேகே இலக்கிய விருது (2008), தாகூர் இலக்கிய விருது (2010) ஆகிய விருதுகளை இவர் இதுவரை பெற்றிருக்கிறார்.

'என் கதைகள் உலகோடு நான் ஆடிய பகடையாட்டம். தோற்பதும், ஜெயிப்பதும் பற்றிய கவலையின்றி திரும்பத் திரும்ப எதிர்பாராமையைச் சந்திக்கும் ஒரு தீரா விளையாட்டு. எறும்புகள் இழுத்துக்கொண்டுபோகும் வெல்லக்கட்டியை போல உலகை எனது இருப்பிடத்திற்குள் இழுத்துக்கொண்டு வந்துவிட முயன்றதன் விளைவுதான் எனது எழுத்துக்கள்' என்று எஸ். ராமகிருஷ்ணன் சொல்வது உண்மைதான். இன்று உலகம் அவரை திரும்பி பார்க்கிறது. தமிழ் இலக்கியத் தோட்டத்தின் விருது வழங்கும் விழா வழமைபோல எதிர்வரும் ஜுன் மாதம் ரொறொன்ரோவில் நடைபெறவுள்ளது.

# குவாண்ரம் பிறந்த கதை நுண்ணுலகியல் 26

சென்ற தடவையில் பிளாங்கின் பிரபலமான சமன்பாட்டைக் கூறியிருந்தேன். அயன்ஸ்ரைனின் சக்தி, சடம் தொடர்புச் சமன்பாட்டினைப் போன்றே இதுவும் சிறியது, மிகவும் முக்கியமானது. பிளாங்கின் மாறிலி h என்பது இன்றும் அதிசயமாகவே விஞ்ஞானிகளால் பார்க்கப்படுகின்றது. குவாண்டம் உலகின் வாசலைத் திறந்து விட்ட சாவியாகத்தான் இதனைப் பார்க்க வேண்டும். மீண்டுமொருதடவை அச்சமன்பாட்டைத் தருகிறேன்.

மின்காந்த அலையின் அதிர்வெண் f எனவும், அது காவுகின்ற சக்தியின் அளவு E எனவும் குறியிடுவோமாயின் அத்தொடர்பானது

$$E = hf$$

என்பதால் தரப்படும். இங்கு h என்பது பிளாங்கின் மாறிலி.

சரி, இதில் இருந்து கரும்பொருட் கதிர்வீசற் சிக்கலுக்கு எவ்விதம் விளக்கம் கொடுத்தார் எனப் பார்ப்போம். சமன்பாட்டின்படி, அதிர்வெண் குறைந்த கதிர்களுக்கான கட்டுகின்ற சக்தி அளவு சிறியது. அதாவது சென்னிறக் கீழ்க்கதிர்களும், அதனைவிடக் குறைந்த அதிர்வெண்களையுடைய கதிர்களும் காவுகின்ற சக்தியின் அளவானது குறைவானதாகும். அதனால் கரும் பொருட்களில் இருந்து இக்கதிர்கள் இலகுவாக வெளிவருகின்றன, அதாவது அவை காலப்படுகின்றன. இந்நிலையானது சென்னிறக்கீழ்க் கதிர்களின் அதிர்வெண்களை விடக் கூடுதலான அதிர்வெண் உடைய கதிர்களுக்கு மாற்றமடைகிறது. ஏனெனில் அவற்றின் கட்டுக்கள் காவுகின்ற சக்தியின் அளவானது கூடுதலாக இருக்கின்றது. எனவே கரும்பொருட் கதிர்வீச்சின் போது, கரும்பொருளானது அவ்வதிர்வெண்களை உடைய கதிர்களை வீசுவதற்கு அதிக அளவிலான சக்தியை வெளிவிட வேண்டும். அதாவது உயர்அதிர்வெண் கதிர்கள் கரும்பொருளில் இருந்து அதிக அளவிலான சக்தியை எடுத்துக் கொண்டு வரவேண்டும். இது சாத்தியமில்லாத நிலையில், உயர்ந்த அதிர்வெண்ணுடைய ஊதாக் கடந்த கதிர்களும் (புறவூதாக் கதிர்களும்) அதற்கு மேலான அதிர்வெண்களையுடைய கதிர்களும் கரும்பொருளில் இருந்து வெளிவருவதில்லை என்ற விளக்கத்தினை கரும்பொருட் கதிர்வீச்சுச் சிக்கலுக்கான தீர்வாக பிளாங் முன்வைக்க, அது பிளாங்கின் பொருத்தமான விளக்கங்களுடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சூடான பொருட்களில் இருந்து வெப்பமும், வெளிச்சமும் வெளிவருவதும் இந்த இயல்பின் அடிப்படையிலேயே. இயற்கையின் இந்த அமைப்பானது எங்களுக்கு எவ்வளவோ நன்மையாகவும் உள்ளது. எடுத்துக் காட்டாகப் பார்ப்போமேயாயின், சாதாரண மின்குமிழில் ஒவ்வொரு செக்கனிலும் 20 பில்லியன் திரிலியன் ($10^{20}$) சக்திக் கட்டுக்கள் வெளிவருகின்றன எனக் கணித்துள்ளார்கள். இதில் அதியுயர் சக்தியைக் காவும் புறவூதாக் கதிர்களோ அல்லது எக்ஸ் கதிர்களோ, அன்றேல் காமாக் கதிர்களோ வருவதில்லை. அதனால்தான் நாங்கள் மின்னொளியில் இயல்பாகவே இருக்கக் கூடியதாக இருக்கின்றது. ஒருவேளை மின்குமிழ்கள் உயர் அதிர்வெண் கதிர்களை வெளிவிடுவதாய் இருந்தால் தடுப்புக்கள் பூசிக் கொண்டுதான் மின்னொளியினைப் பாவிக்க வேண்டி வந்திருக்கும்.



ஆக, பிளாங்கின் முடிவின்படி வெப்பக் கதிர்வீச்சானது, சக்தியை தொடர்ச்சியான அலைகளாக வீசவில்லை, தொடர்ச்சியாகச் சின்னச் சின்ன துண்டுகளாக, அதாவது துணிக்கைகளாகத்தான் சக்தியானது சூழலுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது என்பது முடிவாயிற்று. ஒளியும் வெப்பமான பொருட்களில் இருந்து கதிர்வீச்சாகவே வீசப்படுகிறது. ஒளி மின் காந்த அலை அல்லவா! மாக்ஸ்வெல் காட்டியிருக்கிறாரே. ஆனால் பிளாங் இப்பதானே ஒளியானது சக்தித் துண்டுகளாக, அதாவது துணிக்கைகளாகச் செல்கின்றது என்பதைக் காட்டியுள்ளார். இப்போது மீண்டும் ஒளியில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. 'யங்' தனது இரு துளைப் பரிசோதனையின் வாயிலாக ஒளியானது அலை வடிவிற் செல்கின்றது என்பதனை, தெட்டத் தெளிவாகக் காட்டியிருக்கின்றார். இப்போது பிளாங்கோ, ஒளியானது சக்தியை துணிக்கைகளாகக் காவுகின்றது என்பதை ஐயம் திரிபுற நிறுவியுள்ளார். அதனால் ஒளியானது அலையா அல்லது துணிக்கையானதா என்ற கேள்வி மீண்டும் விஞ்ஞானிகளிடையே பரபரப்பாக எழத் தொடங்கியது. எது சரி?

அதற்கான விடையினைப் பெறுவதற்கு முன்னராக, பிளாங்கின் சக்திச் சொட்டு முறையிற்கான உறுதிப்படுத்தலுக்கான விளக்கத்தினைப் பார்ப்போம். அதனையும் தந்தவர், அயன்ஸ்ரைன்தான்.

### ஒளிமின் விளைவு

19ம் நூற்றாண்டு இயற்பியலின் துரிதமான வளர்ச்சியின் ஆரம்பம் என்றுதான் கூறவேண்டும். ஏனெனில் இயற்பியலில் பல புதிய விடயங்கள் கண்டுபிடிக்கப்பட்டன, பழையவை உறுதிப்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தன. அதனால் புதுப்புதுச் சிக்கல்களும் வந்து கொண்டேதான் இருந்தன. குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவனவாக, சில தனிமங்கள் கதிர்த் தொழிற்பாடுடையவை என்பது கண்டறியப் பட்டன. றேடியம் இக்காலத்தில் தான் இனம் காணப்பட்டது. நான் ஏற்கெனவே கூறியிருந்த கதோட்டுக் கதிர்கள், அதன் தொடரான எக்ஸ் கதிர்கள், பீற்றாக் கதிர்கள் என்பவையும் இனம் காணப்பட்டன. இவை பற்றிய தெளிவுகள் இன்னமும் விஞ்ஞானிகளிடையே வரவில்லை. இந்நிலையில்தான் ஒளிமின் விளைவு என்னும் புதிய விளைவினை விஞ்ஞானிகள் கண்டு கொண்டார்கள். இதுகூட அவர்களால் புரிந்து கொள்ளப்படாத ஒன்றாகவே இருந்தது.

மிகவும் அண்மையில்தான் இலத்திரன்கள் இனம் காணப்பட்டு, மின்னோட்டத்திற்கு இந்த இலத்திரன்களே காரணிகள் என்பதும் அறியப்பட்டிருந்தது. அத்துடன் ஜே. ஜே. தொம்சனும் இலத்திரன்கள் அணுக்களின் ஒரு கூறு எனக் கூறி, அணுவிற்கான புதிய அமைப்பினையும் கொடுத்திருந்தார். இந்நிலையில், பளபளப்பான உலோகங்களின் மேல் ஒளிக் கதிர்கள் படும்போது, உலோகங்கள் இலத்திரன்களை வெளியேற்றுவது, அதாவது உலோகங்களில் இருந்து இலத்திரன்கள் வருவது கண்டறியப்பட்டது. இலத்திரன் மின்னோட்டத்திற்குக் காரணி என்பதால், இவ்விளைவினை 'ஒளிமின் விளைவு' என விஞ்ஞானிகள் அழைத்தார்கள்.

பட்டொளி வீசிடு பளபளப்பு லோகத்தில்
பட்டெனப் பாயந்தே படுமொளி தன்னால்
சட்டென மின்னும் சடுதியில் வந்துமே
சிட்டெனப் பாய்வதைப் பார்.

தொடர்ச்சியை அடுத்த தடவையில் பார்ப்போம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca



உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**பேரண்டம் - 100**

**இணுவில் திருவூர் ஒன்றியம் பெருமையுடன் வழங்கும்**

## பொங்கல் விழா - 2012
## நூல் வெளியீடு



**காலம்:** 28.01.2012 (சனிக்கிழமை)
**இடம்:** கனடா கந்தசாமி கோவில், 733 பேச்மவுண்ட் வீதி, ஸ்காபுரோ
**நேரம்:** மாலை 5:00 மணி

**நிகழ்ச்சிகள்**

- சிறுவர் நிகழ்ச்சி
- மிருதங்க சோலோ
- திரையிசை நடனங்கள்
- கரியோக்கிப் பாடல்கள்
- பரதநாட்டியம்
- வாத்திய விருந்து
- பேச்சு
- மெல்லிசை விருந்து

மற்றும் உள்ளத்தை கொள்ளை கொள்ளும் பல இனய கானங்கள் பல இடம் பெறவிருக்கின்றது.

அத்துடன் நூல்வெளியீடு
பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்களின் **"இந்தத் தீபாவளி தேவைதானா?"** நூல் வெளியீட்டில் கிடைக்கும் இலாபத்தொகை தாயகத்தில் போரினால் பாதிக்கப்பட்டு பெற்றோரை இழந்த அனாதை சிறுவர் குடும்பங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

**மேலதிக தொடர்புகளுக்கு:** 416.496.9071
416.430.0422/ 647.928.7470

# உலகில் மிகச் சிறந்த சுகாதாரமான எட்டு மூலிகைகளும் வாசனைச் சரக்குகளும்

நமது முன்னோர் உணவு தயாரிப்பில் மூலிகைகளையும், வாசனைச் சரக்குகளையும் சுவைக்காகவும் மணத்துக் காகவும் மட்டுஞ் சேர்க்கவில்லை. அவற்றிலுள்ள, சிறப்பான தேகாரோக்கி யத்துக்கான ஊட்டச்சத்துக்களுக்காகவும் சேர்த்துக் கொண்டார்கள் என்பது பலருக்குத் தெரியும். மேலைத்தேச விஞ்ஞானிகளும் போஷாக்குணவு ஆய்வாளர்களும் தற்போது எமது பாரம்பரிய உணவுகளின் முக்கியத்துவம் பற்றி ஆராய்ந்து அவற்றின் நன்மைகள் பற்றி வெளியிட்டுள்ளனர். இதனால் மேலைநாடுகளில் இப்பொருட்களுக்கு நல்ல வரவேற்பிருக்கிறது. இதனால் இவற்றின் விலைகளும் ஏறியுள்ளன. எனவே அவை பற்றி விரிவாகப் பார்ப்போம்.

ஹஸ்ரன் புற்றுநோய் ஆய்வு மையத்தில் பேராசிரியராய் உள்ள பாரத் அகர்வால் என்ற இந்தியர் கூறுவதாவது. 'இந்தியாவில் மூலிகைகளும் வாசனைச் சரக்குகளும் வீட்டுச் சமையலில் தாராளமாகப் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் இதய நோயும் புற்றுநோயும் குறைவாகவே காணப்படுகின்றன. ஆனால் மேலை நாடுகளில் குடியேறிய இந்தியர்கள் அங்குள்ள மேலைத்தேச உணவுகளை உண்டு பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். கொழுப்பும் இறைச்சியும் கூடிய உணவு வகைகளே அதற்குக் காரணம். மூலிகைகளும் வாசனைச் சரக்குகளும் உணவில் சேர்க்கப்படாமையே இதற்குக் காரணம் என ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

**இஞ்சி** - வயிற்று அஜீரணத்தை குறைப்பதற்கும் மூட்டழற்சி (வாதம்) நோவை எதிர்ப்பதற்கும் உதவும்.



வயிற்றுக் கோளாறுகளைத் தீர்த்து வைப்பதற்கு இஞ்சி நல்லது எனப் பலரும் அறிவர். கர்ப்பிணிகள், அறுவைச் சிகிச்சை, புற்றுநோய்ச் சிகிச்சை ஆகியவற்றால் ஏற்படக்கூடிய வாந்தியுணர்வைக் குறைப்பதற்கு இஞ்சி சாறு ஏற்றதென ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இஞ்சியில் வீக்கத்தை எதிர்க்கும் ஜிஞ்செறொய்ஸ் போன்ற கூட்டுப் பொருள்கள் உள்ளன. இவை சிலவகைப் புற்றுநோய்களை எதிர்க்கக் கூடியன என்றும் என்பு மூட்டழற்சி நோக்களையும் காயமுற்ற தசைகளின் நோக்களையும் குறைக்க வல்லன எனவுஞ் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர். தசைகளை பாதிக்கக்கூடிய உடற்பயிற்சி செய்தவர்கள் தொடர்ச்சியாக 11 நாட்களுக்கு இஞ்சி வில்லைகளை எடுத்ததால் 25% மான வலி குறைவடைந்தது என்றும் (இதேமாதிரி யானவர்கள் பிசைபோ வில்லைகள் எடுத்தபோது வலி குறையவில்லை என்றும்) அண்மை ஆய்வு காட்டுகின்றது. இன்னுமொரு ஆய்வில் முழங்காலில் என்பழச்சியால் ஏற்பட்ட நோவுக்கு இஞ்சிச்சாற்று ஊசிகள் ஏற்றியபோது வலிகுணப்பட்டது எனவும் தெரியவந்தது.

**கறுவா** (Cinnamon) நாளாந்தம் ஒரு



தேக்கரண்டி கறுவாவை உணவில் சேர்த்தால், பெரும்பாலும் வில்லையாக உட்கொண்டால், 2ஆம் வகை நீரிழிவு (சலரோகம்) உள்ளவர்களின் சாப்பாட்டுக்குப் பின் இரத்த வெல்லம் குறையும் எனச் சில ஆய்வுகள் காட்டியுள்ளன. சில ஆய்வுகள் விளைவுகள் நன்மை பயக்குமெனக் காட்டியுள்ளன. இவ்வுணவு வகைகள் நோய்களைக் குணப்படுத்துகின்றன என்பது இன்னும் நிரூபிக்கப்படாவிடினும் நோய்களைக் கட்டுப்படுத்துகின்றன என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

**மிளகாய்** (Chile Peppers) அனுசேபம்



**- துறையூரான் -**

அதிகரிக்கலாம். குளிர்காலங்களில் உணவு களில் மிளகாய் வெப்பத்தை தருகிறது. அத்துடன் உங்கள் அனுசேபத்தையும் (Metabolism) அதிகரிக்கச் செய்கிறது. மிளகாய், வாசனைச்சரக்குகள் போன்றவற்றில் கப்சைசின் (Capsaicin) என்ற கூட்டுப் பொருள் உள்ளது. இது உடலின் அனுசேப மூலகத்தை கூட்டுவதுடன் (அதாவது கூடிய கலோரியை எரிப்பதுடன்) எமது பசியின்மையைத் தூண்டும். மூளை இரசாயனங்களையும் தூண்டுகிறது. சாப்பாட்டுக்கு அரை மணித்தியாலத்துக்கு முன் மிளகாய் சிறிதளவு சேர்க்கப்பட்ட தக்காளிச் சாறைக் குடித்தவர்கள், மிளகாய் சேர்க்காத தக்காளிச் சாற்றை குடித்தவர்களைக் காட்டிலும் 16% கலோரி உணவுகளையே சாப்பிட்டார்கள் என்பது ஆய்வில் தெரியவந்தது. மேலும் மிளகாயில் காரம் குறைந்த வகைகளில் காணப்படும் கப்சினொயிட்டுகளும் இதேபோன்ற பெறுபேற்றைக் கொண்டுள்ளதாக அண்மைக்கால ஆய்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. மேலும் கப்சைசின், உடற்கலங்களின் அல்சருக்குக் காரணமாயுள்ள பற்றீரியாக்களை எதிர்க்கும் சக்தியைக் கொடுக்கின்றது. அத்துடன் 'கெட்ட LDL' கொலஸ்ரோல் ஆபத்துவிளைவிக்கும் நாடி அடைக்கும் வடிவமாக மாறுவதை தடுக்கக் கூடியது கப்சைசின் எனவும் கண்டறியப்பட்டுள்ளது.

**மஞ்சள்:** வீக்கத்தைக் குறைக்கலாம், உடற்கட்டிகளைத் தடுக்கலாம்.



மஞ்சள், பொன்னிறமான தடி போன்ற இந்தச் சரக்கு இந்தியாவில் புண்கள் குணமாவதற்கும் (களியாகப் பூசப்படுகின்றது). சளி, தடிமன் போன்ற சுவாசக் கோளாறுகளிலிருந்து குணமடை- வதற்கு தேநீராகவும் பாவிக்கப்படுகின்றது. நவீன மருத்துவ ஆய்வுகள், பவுணிலிருந்து கிடைக்கும் ஆரோக்கிய நன்மைகள் மஞ்சளிலிருந்தும் கிடைக்கின்றன எனக் கூறுகின்றன. இதற்குக் காரணம் மஞ்சளிலுள்ள குர்குமின் என்ற கூட்டுப் பொருளாகும். இது ஒட்சியெதிரியாகவும் வீக்க எதிரியாகவும் செயற்படும் இயல்புகளைக் கொண்டுள்ளது. மேலும் இது மூட்டழற்சி நோ, காயங்களாலும் பற்சிகிச்சைகளாலும் ஏற்படும் நோக்கள் ஆகியவற்றையும் குணப்படுத்துவதாக அறியப்பட்டுள்ளது. மேலும் இதய நோய், சலரோகம், அல்சைமர் நோய் ஆகியவற்றை இது எவ்வாறு குணப்படுத்தவல்லது என்பது பற்றி ஆராயப்படுகிறது. பாரத் அகர்வால் என்ற ஆராய்ச்சியாளர் புற்று நோய்ச் சிகிச்சையில் குறிப்பாக, பெருங்குடல், மார்பு, புரஸ்ரேற், புற்றுநோய்களைக் குணப்படுத்துவதால், மஞ்சள் வல்லமையுள்ளதா என்ற ஆய்வில் தீவிரமாக நம்பிக்கை கொண்டுள்ளார். குர்குமின், கட்டிக் கலங்கள் வளர்வதைத் தடுப்பதுடன், புற்றுநோயைத் தூண்டும் நொதியங்களை நீக்கி விடும் தன்மையுடையது என ஆரம்ப ஆய்வுகள் காட்டுகின்றன.

**குங்குமப் பூ** (Saffron) குங்குமப் பூ பரம்பரை பரம்பரையாக பேர்சியாவில் (தற்போதைய ஈரான்) ஊக்க



மூட்டும் மருந்தாகப் பாவிக்கப்பட்டு வந்துள்ளது. இதனைத் தேநீராக அல்லது சோற்றுடன் சேர்த்துப் பயன்படுத்தப்பட்டது. ரெகிரானிலுள்ள மருத்துவ ஆய்வு நிலையத்தில் செய்யப்பட்ட ஆய்வுகளிலிருந்து இது, மாதவிடாய்க்கு முன் தோன்றும் நோயியல்புகளைக் குறைப்பதற்கு உதவுவதாகத் தெரிகின்றது. இவ்வாறான நோய்களை (மனோநிலை மாற்றம், மனச் சோர்வு) கொண்டவர்கள் நாளாந்தம் குங்குமப் பூ வில்லைகளை உட்கொண்டதனால் அரைவாசி வருத்தம் குறைந்ததைத் தெரியப்படுத்தினர். இவர்களில் 75% வீதத்தினரும் வில்லைகள் எடுக்காதவர்களில் 8% வீதத்தினரும் இவ்வாறு நிவாரணம் பெற்றனர்.

**புதினா** (Parsley)



மார்புப்புற்று நோய்க்கலங்களின் வளர்ச்சியைத் தடுக்கும் ஆற்றல் இம்மூலிகைக்கு உண்டென மிசூரிப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். புதினா, செலறிக் கீரையிலும் காணப்படும் அபிஜெனின் எனும் கூட்டுப் பொருளில் (சேர்வையில்) புற்றுநோய்க் கட்டிகள் தோன்றுவதைத் தடுக்கும் ஆற்றலுள்ளது என விலங்குகளில் ஆராய்ச்சி செய்தபோது கண்டறியப்பட்டது. இதனால் ஓரிரு இலைகளைச் சேர்த்துக் கொள்வது நல்லதென விற்பன்னர்கள் கூறுகின்றனர்.

**சேஜ்** (Sage) ஞாபகசக்திக்கும், தொண்டைப் புண்ணுக்கும் உதவலாம். இது சல்வியா எனத் தாவரப்பெயர் கொண்டது. இதில் பலவகை இனங்கள் உள்ளன. வயிற்றுக் கோளாறுக்கும் தொண்டைப் புண்ணுக்கும் இதன் இலைகளைத் தேநீர் போன்று பாவித்தால் பயன் ஏற்படுமெனக் கூறுகின்றனர் மூலிகை வைத்தியர். இம்மூலிகை அல்சைமர் நோயை வராமல் தடுப்பதற்குரிய வல்லமையைக் கொண்டிருப்பதாக ஆரம்ப ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஞாபகசக்தி, கற்றல் ஆகியவற்றோடு தொடர்புள்ள அசெற்றல்

தொடர்ச்சி 33ஆம் பக்கம்

# திரை விமர்சனம் - மௌனகுரு

கெட்டவனாக வாழ்வதைவிட நல்லவனாக வாழ்வது மிகவும் கடினம். நல்லவர்களால் எல்லோருக்கும் தொந்தரவு என்பதால் அதற்கு யாரும் இங்கே அனுமதிப்பதில்லை. ஆனால், நீங்கள் அனுமதிக்காவிட்டாலும் நான் நல்லவனாகத்தான் இருப்பேன் என வாழ்பவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு இளைஞன் எதிர்கொள்ளும் அவலங்களும் அவற்றை அவன் எப்படி எதிர்கொள்கிறான் என்பதும்தான் இந்தப் படம். பல கோடி ரூபாய் பணத்துடன் ஒருவன் சாலை விபத்தில் மரணமடைகிறான். அந்தப் பணத்தை யாருக்கும் தெரியாமல் தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ள நான்கு காவல்துறை அதிகாரிகள் முடிவு செய்கிறார்கள். நல்லவனாக வாழும் ஒரு இளைஞன், அவனுக்கே தெரியாமல் இந்த பிரச்சினையில் மாட்டிக்கொள்கிறான். அவன் வாழ்க்கை திசை திரும்பி செல்வதும் பிரச்சினையிலிருந்து அவன் எப்படி மீண்டு வருகிறான் என்பதும்தான் கதை.

குத்துப்பாட்டு இல்லாமல் பறந்து பறந்து அடிக்காமல் கொஞ்சம்கூட சூப்பர் ஹீரோயிஸம் இல்லாமல் ஒரு ஆக்ஷன் த்ரில்லரில் இந்தக் கதையை கலந்து தந்திருக்கிறார்கள். 'காயின் போனில்' போட்ட இரண்டு ஒற்றை ரூபாயை பெட்டிக்காரன் ஏமாற்றியதால் ஏற்பட்ட பிரச்சினையில், சொந்த அண்ணனால் வீட்டை விட்டு வெளியேற்றப்பட்டு, சென்னை கல்லூரிக்கு மாற்றலாகி வருகின்றான் கருணாகரன். கடந்த காலங்களில், ஊரில் ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்களால் சென்னைக் கல்லூரியில் அமைதியான மாணவனாக இருக்க முயற்சிக்கிறான். இதனாலேயே கல்லூரியில் சிலருக்கு இவன் வேண்டாதவனாக ஆகின்றான். அவன் படிக்கும் கல்லூரிப் பேராசிரியர் ஒருவரை, ஒருநாள் சாலையோர கடையில் இட்லி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது காவல்துறை அதிகாரி மாரிமுத்து



அடித்துவிடுகிறார். இது மாணவர்கள் போராட்டமாக வெடிக்கின்றது. காவல்துறை அதிகாரியிடம் மனுகொடுக்க முடிவு செய்கிறார்கள் மாணவர்கள். போராட்டத்தில் பிரச்சினையை உருவாக்கி, அதனை கலவரமாகக் காட்டி, துப்பாக்கி சூட்டுக்கு அனுமதி வாங்குகிறார்கள், பிரச்சினைக்குரிய காவல்துறை அதிகாரிகள். துப்பாக்கிச் சத்தத்திற்குப் பயந்து மாணவர்கள் சிதறி ஓடுகிறார்கள். கருணாகரன் மட்டும், எல்லாவற்றையும் மீறி துணிச்சலாகச் சென்று கமிஷனரிடம் தங்கள் மனுவை ஒப்படைக்கின்றான். இதனால் ஒரே நாளில் கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்களுக்குப் பிடித்தவனாகிப் போகிறான்.

பேராசிரியரை அடித்த வழக்கில் விசாரணைக்கு செல்லும் மாரிமுத்து குழுவினர், வழியில் எதிர்பாராவிதமாக நிகழ்ந்த ஒரு விபத்தைப் பார்க்கிறார்கள். நெடுஞ்சாலையில் வேகமாக வரும் ஒரு கார் பாறையில் மோதுகிறது. இறங்கி விபத்துக்குள்ளான காரை பார்வையிடும் மாரிமுத்து குழு, காரில் உள்ள சூட்கேஸில் கோடிக்கணக்கான ரூபாய் பணம் இருப்பதைப் பார்க்கிறார்கள். பணத்தை கமுக்கமாய் அமுக்க முடிவு செய்கிறார்கள். அந்தப் பணத்தை கைப்பற்ற, அந்த வண்டியில் இருந்தவனை மாரிமுத்து கொன்று விடுகின்றான்.

இதற்கிடையில் கருணாகரனுக்கும் அவனது அண்ணியின் தங்கையான இனியாவிற்கும் காதல் மலர்கின்றது. இது கருணாகரனின் அம்மாவிற்குத் தெரியவர, அண்ணன் வீட்டுக்கே வரவேண்டாம் எனத் திட்டித் துரத்தி விடுகின்றாள். மாரிமுத்து தனது கூட்டளியான எஸ்.ஐ. ராஜேந்திரனுடன் தொலைபேசியில், அந்தக் கொலை சம்பந்தமாகப் பேசுகிறார். தன்னிடம் வரும் அப்பாவிகளை வீடியோ எடுத்து மிரட்டுவதற்காக வைத்திருக்கும் வீடியோ காமிராவால், அந்த உரையாடலை படம் பிடிக்கிறாள் விலைமாது மாயா. அதை வைத்து அவள் ஒரு திட்டம் போட்டுக்கொண்டு இருக்கையில் அந்த வீடியோ காமரா மாயமாகின்றது. மாரிமுத்துவிற்கு ஒரு தொலைபேசி அழைப்பு வருகின்றது. எடுத்தால், மறுமுனையில் அந்த வீடியோ கேமராவில் பதிவான உரையாடல் கேட்கிறது. பயந்துபோகும் மாரிமுத்து, தன் காவல்துறை தொடர்புகளை பயன்படுத்தி அந்தக் கேமராவைக் கண்டுபிடிக்கும் போது, அங்கே எதேச்சையாக கருணாகரன் இருக்கிறான். அவனுக்கும் எல்லாம் தெரிந்துவிடுகிறது. உண்மை தெரிந்த கருணாகரனை போட்டுத்தள்ள முடிவு செய்கிறார்கள். ஆனால், கடைசி நேரத்தில் தப்பிவிடுகிறா. பிறகு, மீண்டும் மாட்டும் அவனை மனநலம் பிசகியுள்ளதாக மனநல மருத்துவனைக்குள் சிறை வைக்கிறார்கள். அதிலிருந்து அவன் மீண்டு வருகிறான் என்பதுதான் இறுதிக் காட்சி!

கருணாகரனாக வருவது அருள்நிதி. கருணாநிதி பேரன். மு.க.தமிழரசு மகன். தயாரிப்பாளரும் மு.க.தமிழரசுதான். ஆனாலும், அலட்டிக்கொள்ளாத ஒரு பாத்திரத்தில் நடிப்பை நம்பி அடக்க ஒடுக்கமாக வருகிறார். பாத்திரமும் மிகச் சரியாக அவருக்குப் பொருந்தியிருக்கிறது. நாம் அன்றாடம் சந்திக்கும், அதிகம் பேசாத, ஒருவனைப் போல்தான் இருக்கிறார். அண்ணன் வீட்டில் தன்னை தவிர்க்கிறார்கள் என்று புரிந்துகொண்டு வெளியேறும் போதும், பெட்டிக்கடையில் இரண்டு ரூபாய்க்காக சண்டை போடும் போதும், காவல்துறையினரின் சதியால் மனநிலை பிறழ்ந்தவர் என்று மனநல காப்பகத்தில் மாட்டிக்கொண்டு மௌனம் காக்கும் போதும், அருள்நிதி பேசாமலேயே மனதில் நிற்கிறார். முந்தைய இரண்டு படங்கள் மாதிரி இல்லாமல், இந்தப் படம் அருள்நிதிக்கு ஒரு சினிமா எதிர்காலத்தை உருவாக்கியிருக்கிறது. இனியாவுக்கும் 'வாகை சூடவா', 'ஒஸ்தி'க்குப் பிறகு இது மூன்றாவது படம். அருள்நிதியை காதலிப்பதை தவிர பெரிதாய் ஏதும் செய்ய வாய்ப்பு இல்லாத பாத்திரம் என்றாலும், சின்னச் சின்ன உணர்ச்சி வெளிக்காட்டல்களில் மனதில் நிற்கிறார்.

காவல்துறை அதிகாரி மாரிமுத்துவாக வருபவர் ஜான் விஜய். அருமையாய் செய்திருக்கிறார். உடல்மொழி, வசன உச்சரிப்பு இரண்டிலுமே வில்லத்தனம் இயல்பாய் வருகிறது. அவருடன் வரும் இன்ஸ்பெக்டர்கள், கான்ஸ்டபிள் கிருஷ்ணமூர்த்தி ஆகியோரும்கூட நன்றாக செய்திருக்கிறார்கள். சிபிஐ அதிகாரியாக வரும் உமா, காலேஜ் பாதர், வாட்ச்மேன், காலேஜில் வில்லத்தனம் செய்யும் மாணவன், ஹாஸ்டல் வார்டன் என்று ஒவ்வொரு பாத்திரமும் தங்கள் பங்கை சிறப்பாக செய்திருக்கிறார்கள். ஒளிப்பதிவு: மகேஷ் முத்துசாமி. ஏற்கெனவே பெயர்பெற்ற கேமராமேன். இதிலும், படம் நெடுக உறுத்தாத இயல்பான வெளிச்சத்தில் பதிவு செய்திருக்கிறார். இசை: தமன். பாடல்கள் குறிப்பிடத்தக்கதாய் இல்லாவிட்டாலும், பின்னணியிசையில் உழைத்திருக்கிறார்.

கதையையும் திரைக்கதையையும் கச்சிதமாக அமைத்தால், திரைப்படம் அருமையாக வரும் என்பதற்கு இந்த படம் நல்ல உதாரணம். இதற்கான பாராட்டுகள் அனைத்தையும் பெறத் தகுதியானர் இந்தப் படத்தை எழுதி இயக்கியிருக்கும் சாந்தகுமார். இத்தனைக்கும் இது இவர் முதல் படம். சின்னச் சின்ன கதாபாத்திரங்களையும்கூட அழகாகவும் யதார்த்தமாகவும் செதுக்கியிருக்கிறார். அதிலும் அந்த அண்ணி, பைத்தியக்கார நண்பன் பாத்திரங்கள் மனதில் நிற்கின்றன. படத்தின் பலவீனம் அதன் நீளம்தான். லாஜிக்கில்லாத சில காட்சிகள் இருக்கிறதுதான். ஆனால், அடுத்துவரும் கச்சிதமான காட்சிகளில் அவை கரைந்து போகிறது.

மௌனகுரு - பாருங்கள்!

**- பிலிம் நியூஸ் கிருஸ்ணன் -**

---

கோலைன் என்ற, இராசயனப் பொருளை அழிக்கும் முக்கிய நொதியத்தைச்



செயற்படாமல் தடுக்கவல்லது சேஜ் எனக்கூறப்படுகிறது.

## றோஸ்மேறி

மனதை ஒருநிலைப்படுத்தவும், உணவுப் பற்றீரியாக்களை எதிர்க்கவும் உதவலாம். படிப்பறைக்குள் றோஸ்மேறி எண்ணெயை சுவறிய பின்னால், அங்கிருந்தவர்கள் ஞாபகசக்தி, உசார்நிலை ஆகியன சம்பந்தப்பட்ட சோதனைகளைத் திறமாகச் செய்தனர் எனக் கண்டறியப்பட்டது. இறைச்சிகளைப் பதனிடுவதற்கு றோஸ்மறினிக் கமிலமும் பிற ஒட்சியேற்ற வெதிரிச் சேர்வைகளும் சேர்ந்து பற்றீரியாக்களைக் கொன்று இறைச்சி கெட்டுப் போவதைத் தடுப்பதுடன், சமைக்கப்பட்ட உணவை ஆரோக்கியமானதாகவும் ஆக்குகின்றன. அரைக்கப்பட்ட இறைச்சியைப் பொரிக்கும் போது அல்லது வேகவைக்கும் போது உண்டாகும் புற்றுநோய்க்காரணிகளான ஹெற்றெறோசைகிளில் அமீன்கள் உண்டாவதை றோஸ்மறி தடுப்பதாக கன்சாஸ் பல்கலைக்கழக ஆய்வாளர்கள் 2010இல் அறிவித்தனர்.


**வெளிவந்துவிட்டது!**

பலரால் ஆய்வு நிகழ்த்தப் பெற்ற

Dr. கோபால் அவர்களின்

**எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?**

**மருத்துவ கைநூல்.**

கிடைக்கும் இடம்: **விளம்பரம் பத்திரிகை அலுவலகம்**, *5215 Finch Ave. E, #201*

**Professional Pest Control**

*Elimination of Roaches & Mice*

Call Kanthan :

416-895-4283 / 416-291-3997




- Cockroaches
- Rats & Mice
- Wasps & bees
- Birds
- Ants & Spiders

# அனைவருக்கும் உளம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## நிரு பிராண்ட்



Niru Enterprises Inc
40 Minuk Acres
Scarborough, ON M1E 4Y6
Canada
Tel: 416.750.1976
Fax: 416.750.8779
www.niru.com

Niru Niru
நிரு
பிராண்ட்

# பஷீர் : பூமியின் உரிமையாளர்

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

வாழும் காலத்திலேயே ஐதீகமாக்கப்பட்டவர் பஷீர். அவரளவுக்குக் கேரளக் கலாச்சாரத்தில் ஊடுருவிய எழுத்தாளர்கள் அபூர்வம். அவரது சிறு செயலும் செய்தி முக்கியத்துவம் பெற்றதாகக் காட்டப்பட்டது. அவருடைய வீடு ஓர் இலக்கிய ஆர்வலர்களின் புனிதத்தலம் போலவும் அவர் அதன் மூலவர் போலவும் தோற்றம் கொண்டது. இந்தச் செயலில் பஷீருக்கும் பங்குண்டு. ஆனால், அது அவர் தன்னை பிரதிஷ்டை செய்துகொள்வதற்காக மேற்கொண்ட தந்திரங்களல்ல. 'அஹம் பிரம்மாஸ்மி' என்றோ 'அனல் ஹக்' என்றோ மனிதன் போற்றிக்கொண்டிருந்த தெய்வீக உணர்வின் வாழ்வியல் சாத்தியங்களை அவர் தன்னுடைய வாழ்க்கையில் பின்பற்ற முயன்றதன் அடையாளம். மதத்தைக்

**– சுகுமாரன் –**

கடந்த இம்மை சார்ந்த ஓர் ஆன்மீகத்தைக் கடைபிடிக்க அவர் விரும்பியிருக்கலாம். இலக்கியத்தில் அவர் மரபின் தொடர்ச்சியல்ல. ஆனால், இம்மை சார்ந்த ஆன்மீகத்தில் அவர் ஒரு பெரும் மரபின் நிகழ்காலச் சந்ததி. அரபி மலையாளத்தின் தொடர்ச்சியாக நான் பஷீரைக் காண்கிறேன். இதன் மூலம் பஷீர் ஒரே சமயத்தில் ஒரு சூ.ஃ.பி மரபைப் புனைவெழுத்தில் நிலைநிறுத்தினாரென்றும் மலையாளத்தின் பேச்சு மொழிக்கு - குறிப்பாக முஸ்லிம்களின் மொழிக்கு - இலக்கிய அங்கீகாரம் பெற்றுத்தந்தார் என்றும் தோன்றுகிறது.

பஷீர் நாடோடியாக வாழத்தொடங்கி சூ.ஃ.பிகளுடன் அலைந்து திரிந்தவர். அந்தக் காலப் பகுதியில் அவர் அறிந்திருந்தது அன்று முஸ்லிம்களுக்கிடையே புழங்கிய அரபி மலையாளம் மட்டுமே. நானூறு ஆண்டுகளுக்கும் மேலாக முஸ்லிம்களின் எதிர் இலக்கியமாக இருந்துவந்த அரபி மலையாளத்தின் தொடர்ச்சியாக பஷீரைக் காண விரும்புகிறேன். அரபி மலையாளம் இஸ்லாமிய மரபுக்கு ஏற்புடையதல்ல என்று மதப் பண்டிதர்கள் விலக்குக் கற்பித்திருந்தார்கள். ஆனால், அந்தக் கலப்பு மொழியில்தான் கீழ்த்தள முஸ்லிம்கள் தங்கள் படைப்பாற்றலை வெளிப்படுத்தியிருந்தார்கள். அந்த மொழியில் கனவு கண்டார்கள். ரகசியம் பேசினார்கள். அவர்களுடன் மானசீக நெருக்கம் கொண்டிருந்த சூ.ஃ.பிகள் தங்களது பங்களிப்புகளைச் செய்ததும் அந்த மொழியில்தான். அபரிமிதமான சமஸ்கிருதச் சொற்களுடன் பேசப்பட்ட அன்றைய மலையாளம் முஸ்லிம்களுக்குக் கூழாங்கல்லை மெல்லுவதுபோலக் கடினமானதாக இருந்திருக்கலாம். சமுதாய மறுமலர்ச்சி பரவிக் கொண்டிருந்த காலகட்டத்தைச் சேர்ந்த எழுத்தாளரான பஷீர் எழுத்தச்சன் உருவாக்கிய மலையாளத்தை முஸ்லிம்களுக்கும் உரிமையுடையதாக மாற்றச் செய்த முயற்சி அவருடைய படைப்பு மொழி. அது எளிமையின் அழகியலைக் கொண்டிருந்தது. எளியவனின் ஆன்மீகத்தைக் கொண்டிருந்தது. அந்த எளிமையும் ஆன்மீகமுந்தான் பஷீரை மலையாளத்தின் சுல்தான் ஆக்கியது.

நாலு அட்சரம் வாசிக்கத் தெரிந்த, கொஞ்சம் இலக்கிய வாசனையை நுகரக் கூடிய மலையாளி வாசகர்களிடம் 'உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர் யார்?' என்று கேட்டால் உடனடியாக வரும் பதில்: 'வைக்கம் முகம்மது பஷீர்'. இதில் பெரும்பான்மையானவர்களின் பதில் மேலோட்டமானது. பஷீரின் ஒரு கதையைக் கூட அவர்கள் படிக்காமலிருக்கக் கூடும். எனினும் அந்தப் பதிலைச் சொல்லத் தூண்டும் அம்சம் கலாச்சாரப் பொதுமை சார்ந்தது. பால்ய கால சகியில் இடம்பெறும் ஒரு காட்சி இலக்கிய வாசனை கொண்ட எந்த மலையாளியின் நினைவிலும் பதிந்திருப்பது. மஜீதும் சுஹ்ராவும் பள்ளித் தோழர்கள். கணக்குப் பாடத்தில் மஜீத் ஞான சூனியம். ஒன்றும் ஒன்றும் எத்தனை என்று ஆசிரியர் கேட்கும் கேள்விக்கு நீண்ட நேர யோசனைக்குப் பிறகு அவன் சொல்லும் பதில்: 'உம்மிணி பல்ய ஒந்நு'. (இன்னும் பெரிய ஒன்று). மஜீதின் இந்த மகத்தான கண்டுபிடிப்புக்கு விழுந்து சிரித்தவர்கள் கதையின் பாத்திரங்கள் மட்டுமல்ல. கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக பஷீரின் வாசகர்கள் இந்த வாசகத்தைச் சொல்லிச் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள். முட்டாள்தனத்தைப் பற்றிய விமர்சனமாகவோ உயர்வு நவிற்சிக்கான அடைமொழியாகவோ இந்த வாசகத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். அதன் உச்சநிலை இந்த வாசகம் அதை எழுதியவருக்கே புகழ் மொழியானது என்பதுதான். மிகுந்த உரிமை பாராட்டலுடன் 'உம்மிணி பல்ய எழுத்துக்காரன்' என்று பஷீர் குறிப்பிடப்படுவது சாதாரணம்.

முற்போக்கு இலக்கியம் முதன்மையான

தொடர்ச்சி 37ஆம் பக்கம்



# சட்டம் இருப்பது அதனை மீறுவதற்குத்தான்?

இதென்ன எட்டுத் தாய்மார்கள் தமது பிள்ளகைளை வைத்திருக்கின்ற படம் தானே. ஓஹோ இவை அத்தனையும் புதுவருடம் வரவேற்ற புதிய வரவுகளா! என்கிறீர்களா? அவசரப் படாதீர்கள்!. அத்தனை குழந்தைகளும் 2011ம் ஆண்டிற்குரிய குழந்தைகளே. அத்தனையும் ஒரு தாய்க்குரியவை. அமெரிக்காவில் இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒரு பெண்மணி ஒரே சமயத்தில் எட்டுக் குழந்தைகளைப் பெற்றெடுத்துச் சாதனை புரிந்தாளே (Octomum). இது இரண்டாவது சாதனையா?



என்கிறீர்களா. அதுவும் இல்லை. இது வேறொரு விசயம். சீனாவில் நடந்தது. சீன மக்கள் குடிஅரசு பெயரளவுக்குத்தான் மக்கள் குடியரசு. ஏனையவற்றில் மன்னராட்சியிலும் மோசம். அங்கே ஒரு குடும்பத்திற்கு ஒரு குழந்தை மாத்திரமே பெற்றுக் கொள்ளலாம் என்பது கடுமையாகப் பின்பற்ற வேண்டிய சட்ட விதி. ஒன்றுக்கு மேல் பிள்ளைகள் பெற்ற குடும்பம் அரசினது கண்டனத்திற்கு ஆளாவதோடல்லாமல் பல்வேறு சலுகைகளையும் இழக்க வேண்டி வருவதால் எவருமே ஒன்றிற்கு மேல் நினைப்பதில்லை. நினைத்தாலும் ஏதாவது மாயமோ மந்திரமோ செய்து அதனை இல்லாமல் பண்ணி விடுவார்கள். அல்லாவிட்டால் அரசாங்கமே வழி செய்து கொடுக்கும். இதனோடு இல்லாமல் கணவனோ மனைவியோ பிள்ளை பெறுதற்குத் தகுதியற்றவர்களாகக் கண்டால் ஏனைய நாடுகளைப் போன்று, ஈன்றாளினை (Surrogate) வாடகைக்கு அமர்த்தி பிள்ளை பெற்றுக் கொள்வது தண்டனைக் குரிய குற்றம். சனத்தொகையினைக் கட்டுப்படுத்த நினைக்கின்ற அரசினுக்கு இப்படியாக பிள்ளைகள் பெறமுடியாத பெற்றோர் இருப்பதும் அனுகூலமே. ஒரு நாட்டின் அரசினைப் பொறுத்த அளவிலே இத்தகைய கட்டுப்பாடு அவசியம் போலத் தோன்றுகிறது. சீனாவின் மக்கள் தொகை 1.3 பில்லியனுக்கு மேல் (1,338, 299,500) சென்று விட்டது. இருப்பிட வசதி, உடநல வசதி, உணவு வசதி, கல்வி வசதி எனப் பிரதான தேவைகளை ஈடு செய்வதற்கு அரசு பொருளாதாரம் இடம் கொடுக்க வேண்டுமே. எனவே இனப் பெருக்கத்திற்கு ஒரு கட்டுப்பாடு தேவை தான். ஆனால் அது கடினமாக நடைமுறைப் படுத்துவது கொஞ்சம் கஷ்டமானதே. 1979ஆம் ஆண்டினிலே இந்தச் சட்டத்தினை அமலாக்கியபொழுது அது தற்காலிகம் என்றே சொல்லப் பட்டது. ஆனால் அந்தத் தற்காலிகம் இப்பொழுது நிரந்தரமாகி விட்டதைக் காண முடிகிறது.

சீனா என்ற உடனே நம் கண்முன்னே தோன்றுவது பொதுவுடைமை ஆட்சியும் அங்கே உள்ள எல்லா மக்களும் பொருளாதார நிலையில் ஒரே தன்மையினராகவே கணிக்கப்படுவார்கள் என்ற எண்ணமுமே. ஆனால் சீனாவிலே கணிசமான தொகையினர் மிகப் பெரிய பணக்காரர்களாக டாம்பீக வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து கொள்ள முடியும். காசேதான் கடவுளடா என்று சொல்லுமளவினுக்கு கடவுளே இல்லை எனச் சொல்லும் நாட்டு நடவடிக்கைகள் காண்பிக்கின்றன. இந்தச் சட்டங்களும் கட்டுப்பாடுகளும் பணக்காரர்களைக் கட்டுப்படுத்த முடியாது. அவர்கள் நினைத்ததே சட்டம். அவர்கள் செய்வதே நியதி எனக் குமுறுமளவினுக்குச் சீனாவில் அண்மைக் காலத்தில் ஒரு நிகழ்ச்சி நடைபெற்றிருப்பதன் மூலம் உணர முடிகிறது.

சீனாவின் Guankdong மாகணத்தின் தலைநகரம் Guangzhou. இங்கே வாழ்கின்ற பணம் படைத்த முதலைகளான கணவன், மனைவி $1,600,000 (1,000, 000 யுவான்) செலவழித்து எட்டுக் குழந்தைகளுக்குப் பெற்றோர்களாயுள்ளனர். அவர்கள் இரு ஈன்றாள்களை வாடகைக்கு அமர்த்தி எட்டுப் பிளைகளைக் குடும்ப வாரிசு ஆக்கியுள்ளார்கள். இந்த எட்டுக் குழந்தைகளிலே இரண்டு மாத்திரம் சொந்த மனைவிக்குப் பிறக்க ஏனைய ஆறும் ஈன்றாள்களுக்குப் பிறந்துள்ளனவாம். எட்டுப் பிள்ளைகளில் நாலு ஆண்பிள்ளைகள் மற்றைய நான்கும் பெண்கள். இந்தச் செய்கை மூலம் அந்தத் தம்பதியினர் சீனாவின் இரண்டு சட்டவிதிகளை மீறியுள்ளனர். முதலாவது மீறல், ஒரு குடும்பத்துக்கு ஒரு பிள்ளை என்பதை மீறி எட்டுப்பிள்ளைகளை குடும்பவாரிசு ஆக்கியுள்ளனர். இரண்டாவதாக ஈன்றாளைப் பிள்ளை பெறுவதற்காக வாடகைக்கு நியமிப்பதை சீனாவின் சட்டம் அங்கீகரிக்கவில்லை. 2001ல் நிறைவேற்றப்பட்டு அமலில், இருக்கும் சட்டத்தின் படி எந்த ஒரு வைத்தியசாலையும் ஈன்றாளாக வாடகைக்கு அமர்த்தப்படும் பெண்ணிற்கு கருக்கட்டல் சம்பந்தமான செயல் முறைகளில் ஈடுபடுவதும் தண்டனைக்குரியது. ஆகவே அதனையும் மீறியுள்ளார்கள். இந்த இரண்டு சட்ட விதிகளையும் மீறுவது சட்டவிரோதம் என்பதும் தண்டனைக்குரிய குற்றம் என்பதும் அவர்களுக்குத் தெரிந்துள்ளதே. ஆனால் பணவசதியுடையோர் அத்து மீறலாம் என்பது அவர்களுடைய எண்ணம். சீனாவின் சட்டத்துறை இது பற்றி என்ன செய்யப் போகிறது என்பதை பொறுத்திருந்தே காணவேண்டும். இந்த எட்டுப் பிள்ளைகளையும் பராமரிப்பதற்காக அக்குடும்பத்தினர் இதுவரை 11 செவிலி-களை நியமித்துள்ளனர். அமெரிக்காவில் எட்டுப் பிள்ளைகள் பெற்றவர்களுக்குத் தாரா-ளமாக மக்கள் உதவி செய்தனர். ஆகவே பிள்ளைகளைப் பராமரித்தலில் பொது மக்களின் பங்களிப்பு நிறையவே இருந்தாலும் அந்தத் தாய் இப்பொழுது உதவி போதவில்லை என அழுதபடியே இருக்கிறார். அவர்களுக்குப் பிள்ளைகளைப் பராமரிப்பது கஷ்டமாக உள்ளதாம். சென்ற ஆண்டினில் எடுக்கப்பட்ட கருத்துக் கணிப்பில் அமெரிக்காவிலே மிகவும் வெறுக்கப்பட்ட 10 நபர்களில் அந்தத் தாய் நதியாவும் ஒருவர் என்பது ஆச்சரியமே. ஆரம்பத்தில் எட்டுப் பிள்ளைகளைப் பெற்ற தாய் என பொது மக்களின் அனுதாப அலை வீசவே செய்தது. அதனால் பலரும் உதவ முன்வந்தனர். ஆனால் காலம் செல்லச் செல்ல எட்டுப் பிள்ளைகளால் நகரத்துக்கும், நாட்டிற்கும்



ஏற்படவுள்ள செலவு பற்றிய கணிப்பு மேலோங்க அனுதாபம் வெறுப்பாக மாறி விட்டமையே கருத்துக் கணிப்பினில் நதியா வெறுக்கப்படும் 10 பேர்களில் ஒருவராகியது.

அங்கே எட்டுப் பிள்ளைகளும் ஒரு தாயின் கர்ப்பப் பையிலே விருத்தியுற்றுள்ளன. ஆகவே அத்த எட்டுப் பிள்ளைகளினதும் உயிரியல் தாய் (Biological mother) ஒருவரே. சீனாவில் இரண்டு குழந்தைகளுக்கு மாத்திரம் அந்தத் தாய் உயிரியல் தாயாகி-றார். மற்றைய ஆறு குழந்தைகளுக்கும் இரண்டு ஈன்றாள் தாய்களே (Surrogate mothers) எனவே சீனாவில் பொதுமக்கள் உதவி இக்குடும்பத்திற்குக் கிடைத்தல் சாத்தியமில்லை. இவை எல்லாம் தெரிந்தே அவர்கள் எட்டுப் பிள்ளைகளை பெற்றிருக்கிறார்கள். பொதுவாக உலகளா விய ரீதியாகவே திருமணத்தையோ அல்லது பிள்ளை பெறுவதையோ பிற்போடுகின்ற பண்பு எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது. இனப்பெருக்கப் பொறிமுறை உதவல் (Assisted Reproduction Technology - ART) செயல் திட்டம் இவ்வகையான முடிவினைப் பெண்கள் எடுப்பதற்கு உந்து சக்தியாக அமைகிறது. வயது ஏற ஏற சூலகத்தின் வளம் குறைகின்றமையால் பிள்ளை பெறுகின்ற தன்மை மிகக் குறைந்து விடுகிறது. ஆனால் இங்கேயும் பொறிமுறை உதவிக்கு வருகிறது. ஒரு பெண்மணி தனது இளம் பராயத்து முட்டையை எடுத்து சேகரித்து உறைய வைத்து (Oocyte-Cryopreservation) பின்னர் தனக்கு எப்போது பிள்ளை தேவையோ அப்போது IVF கருக்கட்டல் முறையினைக் கையாண்டு பிள்ளையைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது தனது வாழ்வியலை ஸ்திரப்படுத்தி, ஓரளவுக்கு வாழ்கையை அனுபவித்த பின்னர் மகப் பேற்றினுக்கு முயல்வதற்கு அனுகூலமாகவும் உள்ளது எனலாம். கனடா இதற்கு விதி விலக்கல்ல. கனடாவின் புள்ளி விபரத்திணைக்களத்தின் கணக்குப் பிரகாரம் இவ்வருடம் மொத்தமாக 40 வயதிற்கு மேற்பட்ட 10,500 பெண்கள் பிள்ளை பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதில் கணிசமான தொகையினர் முதல் முறை பிரசவிப்பவர்கள். 2007 இன் கணக்கெடுப்பின்படி அவ்வருடத்தில் பிள்ளை பெற்ற ஒவ்வொரு மூவரில் ஒருவர் 35 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தாராம். அமெரிக்காவில் எட்டுப் பிள்ளைகளை ஒரே தாய்தான் பெற்றார். சூலகத்தினை வளமாக்கும் மருந்து (Fertility Drugs) உட்கொண்டமையால் ஒரேசமயத்தில் பல முட்டைகள் தோன்றிக் கருக்கட்டப்பட்ட மையால் எட்டுப் பிள்ளைகளும் (Octoplets) ஒரே கருப்பையினில் தோன்றின. சீனாவில் நடைபெற்றது கொஞ்சம் வித்தியாசமானது. மனைவி சூலகத்தினை வளப்படுத்தும் (fertility drugs) மருந்து உட்கொண்டுள்ளார். ஆனால் அகக் கருக்கட்டல் நடை-பெறவில்லை. முட்டைகள் வெளியே எடுக்கப்பட்டு ஆய்வுகூடத்தில் கருக்கட்ட வைக்கப்பட்டுள்ளன (in vitro fertilizarion -IVF). கருக்கட்டிய முட்டைகளில் இரண்டு தாயின் கருப்பையிலும் ஏனையவை ஈன்றாள்கள் இருவரதும் கருப்பையிலும் உட்பதிக்கப்பட்டுள்ளன (implantation). இரு பெற்றோர்களும் இயற்கையாக மகப்பேற்றினுக்கு பன்முறை முயற்சித்து அது கைகூடாமையால் தான் இந்த முயற்சியில் ஈடுபட்டார்கள் என்ற கூறப்படுகிறது. வைத்தியசாலைகளில் இவ்விதம் செய்வது தண்டனைக்குரிய குற்றம் என்றாலும் இதில் ஈடுபடுபவர்கள் சிலமன் இல்லாமலே செய்து முடிக்கக் கூடிய வைத்தியசாலைகள் அந்த நாட்டிலே உள்ளன. அருகே உள்ள வேறு ஏதாவது தென்கிழக்கு ஆசிய நாடுகளிற்குப் போய் இரகசியமாகவும் செய்து கொண்டு வந்து விடலாம். ஏமாற்ற முயற்சிப்பவர்கள் வெற்றி பெறுவதற்கு எத்தனையோ மார்க்கங்கள் உண்டு.



**பொ. கனகசபாபதி**

**YOGA - MEDITATION CLASSESS**

**ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்**




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



**GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது**

தொடர்புகளுக்கு: **Scarborough - Markham** - செல்வ சோதி - **416.289.2033**

# ஆபத்துதவி

எப்போதும் எனக்கு ஆபத்துதவியாக ஆண்டவன் இருக்கிறார் என்ற தென்பில் நான் இப்போ விசுவாசத்துடன் கவலையின்றி வாழ்கிறேன்.

உனக்கு இப்போதும் கைகொடுத்து உதவக்கூடிய ஒன்றைப்பற்றி அநேகமாக பாடசாலை அரிவரியில் நீ படித்திருப்பாய். உனது உடையில் தீ பற்றிக்கொண்டால் என்ன செய்ய வேண்டும் என்பதுதான் அந்த சுய முதலுதவி. தீ விபத்து ஏற்பட்டால் உடனடியாக நில்! படு! உருள்! எனும் மூன்றையும் நீ செய்ய வேண்டும் அல்லவா? ஆனால் உனது வாழ்க்கையில் ஒரு தீ விபத்து ஏற்பட்டால் அதனுடன் தனியே போராட முயற்சிக்காதே! ஓடி கூரைக்கு மேலே ஏறி தப்பலாம் என்று நம்பாதே! ஒரு வாளி தண்ணீரோ, நெருப்பணைக்கும் உபகரணமோ இப்போ உனக்கு உதவாது. உனது செயற்பாடு அனைத்தையும் உடனடியாக நிறுத்து! ஒன்றுமே செய்யாமல் கீழே உட்கார். உனது தற்காப்புக் கவசங்களையெல்லாம் கைவிடு. உனது காரணங்களைக் கைவிடு. உனது திட்டங்களைக் கைவிடு. ஏதும் தெரியவரவேண்டும் எனும் உனது தேவையையும் கைவிடு. எதையாவது ஒன்றைச் செய்ய வேண்டும் எனும் உனது விருப்பத்தையும் கைவிடு. சகலதையும் நிறுத்தி விட்டு முழங்காலில் மண்டியிட்டு மன்றாடு! தீ அணைக்கும் படைத்தளபதியின் உதவி உனக்கு வேண்டுமா? மகாதேவனே அந்த தீயணைப்பு தளபதி! சரணடைந்து மனமுருகி நீ பிரார்த்திக்கும்போது உனது பிரச்சனையை உன்னைப் படைத்தவன் கையில் ஒப்படைக்கிறாய். இறைவனின் உதவியும் ஒத்தாசையும் உடனடியாக ஓடோடி உன்னைத்தேடி வரும் என இப்போ நீ நிம்மதி அடையலாம்.

உனது வாழ்வில் எழும் சில பிரச்சினைகளை ஒருபோதும் உன்னால் தட்டந்தனியாகத் தீர்க்க முடியாது. இப்படிப்பட்டவைகளுக்குத்தான், நீ ஒன்றும் செய்யாது நில். கடவுளின் கைக்கு உருட்டி, நீ சீக்கிரம் செயற்படாவிட்டால் இந்தப் பிரச்சனைகள் நெருப்பு பற்றிக் கொள்வது போல பரவிப் பெரிதாக எரிய



ஆரம்பித்துவிடும். உன் வாழ்வில் நெடுங்காலமாகப் புகைந்து கொண்டிருந்த இப்பிரச்சினை விரைவில் பற்றியெரிந்து உன் கையிருப்புக்களையெல்லாம் நாசமாக்கி அழித்து விடப்போகிறது. எரிந்து கொண்டிருக்கும் நெருப்பின் பாரிய உஷ்ணம் உன்னையே தகித்து உருக்கி விடப்போகிறது. உனக்கு யோசிக்கவே முடியாமல் இருக்கிறது. ஒன்றையும் உணரவும் இயலவில்லை. வெளியில் தப்பி ஓடவும் முடியாது. பயத்தினால் உறைந்து போய் நிற்கிறாய். உனது பிரச்சினை இப்படி ஜுவாலை விட்டு எரியும்போது உன்னுடையவற்றைக் கையில் எடுத்துக் கொண்டு தப்பி ஓட முடியாது. உனது குடும்பத்தவரையோ நண்பர்களையோ உதவிக்கு அழைக்க இயலாது. இப்படியான சந்தர்ப்பங்களின் போது என்ன செய்யவேண்டும் என்பது உனக்குத் தெரியும். முன்பு எப்போதோ அரிவரியில் படித்தது ஞாபகம் இருக்கிறது அல்லவா. நிறுத்து! படு! உருண்டு போய் உள பிரச்சினையை மாதவனிடம் கையளித்து உதவி கேட்டு பிரார்த்தனை செய்! அவ்வளவு தான். உனது பிரச்சினை நெருப்பை நீ தனியாக அணைத்து விடலாம் என நம்பி இன்றுவரை நீ அலைந்து திரிந்திருக்கலாம். இறையருள் நிச்சயம் காப்பாற்றும் என விசுவாசமாயிரு.

**இன்று நான் தீ அணைக்கும் முதலுதவிப் பாடம் படித்து எவ்வாறு நின்று, படுத்து, உருண்டு போய் இறைவனிடம் சரணடைவது என்பதைக் கற்றுக்கொள்கிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 198

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

# பஷீர் :...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

நடைமுறையாக இருந்த காலப் பகுதியில் எழுத்தில் ஈடுபட்டவர் பஷீர். 'ஜீவன் சாஹித்ய பிரஸ்தானம்' (வாழ்க்கை இலக்கிய இயக்கம்) என்று அழைக்கப்பட்ட போக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள் பஷீர், தகழி சிவசங்கரப் பிள்ளை, பி. கேசவதேவ், பொன்குன்னம் வர்க்கி ஆகியோர். இவர்களில் எழுத்தில் புதுவகையை உருவாக்கியவர் பஷீர். நடைமுறை உலகை மாற்றிப் புதிய உலகைச் சமைப்பதற்கான அறைகூவலைப் பிற எழுத்தாளர்கள் முன்னிறுத்தினர். இந்த முழுமையற்ற உலகத்தை மாற்றி முழுமையான உலகைப் படைப்பது பற்றிய கனவை முன்வைத்தார்கள். ஆனால், பஷீர் இந்த முழுமையற்ற உலகை நேசித்தவராக இருந்தார். தீமையும் கீழ்மையும் இந்த உலகின் உயிரோட்டமான அம்சங்கள் என்று உணர்ந்திருந்தார். நடைமுறை உலகத்தால் புறக்கணிக்கப்பட்டவர்களே அவரது கதை மாந்தர்களாக இருந்தனர். அவர்களது வாழ்க்கையே அவருக்குக் கதை நிகழ்வுகளாக இருந்தன. பொறுக்கிகள், வேசிகள், திருடர்கள், முட்டாள்கள், பைத்தியங்கள், ஏமாற்றுப் பேர்வழிகள் எல்லாரும் அவருடைய அன்புக்குரிய பாத்திரங்களாக இருந்தார்கள். அந்தப் பாத்திரங்கள்மீது வாசகனும் அன்பு பாராட்டக் கட்டாயப்படுத்தியதுதான் பஷீர் கலையின் வெற்றி.

சமகால எழுத்தாளரான தகழிதான் பஷீரை விடவும் சமூக எதார்த்தச் சித்தரிப்பில் மேலானவர். சமூக எதார்த்தங்களை ஆராயும் கூர்மை தகழியின் எழுத்துக்களில் உண்டு. பஷீரின் எழுத்தாக்க நோக்கம் அதுவல்ல. இந்த உலகை அவருடைய கருணையின் கைகள் தழுவிக் கொள்கின்றன. மனிதர்கள்மீதும் இயற்கைமீதும் சர்வ சராசரங்களின் மீதும் அவரது கைகள் படர்வது போன்ற நடையையும் மொழியையும் பஷீர் உருவாக்கியிருந்தார். அவருடைய நடப்புலகுக்கும் படைப்புலகுக்கும் வேற்றுமை காண்பது அரிது. ஏறத்தாழ இல்லை என்பதே நிஜம். சாதாரண மனிதர்களின் வாழ்க்கைக்கு இணையாகவே பிரபலங்களும் பிறரும் பஷீரின் எழுத்துக்களில் இடம்பெற்றிருக்கிறார்கள். காந்தி முதல் ஈ.எம்.எஸ்.வரை. போக்கிரி முதல் ஆ.ஃ.பிவரை. கடவுள் முதல் சைத்தான்வரை. ஆடு முதல் யானைவரை. தேள் பாம்பு முதல் காக்கைவரை. அவர்களை எல்லாம் இணைக்கும் மையமாக பஷீரும். இந்த எழுத்து முறை அவரது எழுத்தை அதன் களங்களிலிருந்தும் சூழலிலிருந்தும் விடுவித்தது என்று கருதுகிறேன். இதுவே பஷீரைச் சகலரும் அங்கீகரிக்கும் எழுத்துக் கலைஞனாக்கியது. மிகவும் எளிமையான மொழியில் இந்த வெற்றியை ஈட்டுவது சுலபமல்ல என்பதற்கு இன்றும் மலையாளத்தில் கிடைக்கும் ஒரே எடுத்துக்காட்டும் அவர்தான்.

- தொடரும்

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு www.vlambaram.com

Ontario Vegetarian Food Bank
Employment Training & Skills Resource Centre
Certified Food Handlers
Ontario Vegetarian Food Bank works in partnership with the City of Toronto Public Health Fully Accredited Agency to provide Food Handlers Certification Program. Our Certification Training Program is valid throughout Ontario and meets all mandatory Provincial Food Safety Training requirements. This means that our Food Handler Certificate is recognized by all health units throughout Ontario.



Food Handler Training available for:
PSW's, Food service Workers, ECE /ECA Workers, Day Care Providers, Dietary Aides, Cooks, , Home Care Workers, Nannies, Restaurateurs.
*Financial assistance may be available to those who qualify
CALL TO REGISTER:
(416) 744 (HELP) 4357
Winter Food and Fund Drive
"No One Should Go Hungry"
Started from Nov.15, 2010 Mar.15, 2011
HELP US TO HELP THE HELPLESS!
North York: 3005 Islington Ave. (Islington / Steeles)
Scarborough: B5 - 2370 Midland Ave (Midland / Sheppard)

நகைச்சுவைத் தொடர் 238

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



நீ மரம் நான் காற்று என்ன சொன்னாலும் தலையாட்டவேன்!
ஏன் மரம் மாதிரி நிக்கிறியள்!



ரி.வி. யில்..சர்வதேச அளவில் பல்சுவையாக பொங்கல் நிகழ்ச்சி ஒளிபரப்பாகிக் கொண்டிருந்தது. இந்த நேரம் செக்கணட் புளோர் செல்லம்மா குறுக்கே நின்று எல்லோருக்கும் சீனி குறைத்துச் செய்த பலகாரம் பரிமாறிக் கொண்டு நின்றா. செல்லம்மா நடுவிலை மரம் மாதிரி நிக்கிறாய். தள்ளி நில்லென்றதும் சடக்கெனத் திரும்பிய செக்கண்ட்புளோர் செல்லம்மா சொன்னா, மரத்தைப்பற்றி என்ன தெரியும் உனக்கு?



மரத்தின் மகத்துவம் தெரியாதவர்கள்!
கணவன் மனைவியையும், மனைவி கணவனையும்
பிள்ளைகள் நண்பர்களையும் கூறுவது வழக்கம்.



மா பலா வாழை முக்கனி.
வரட்சியிலும் காய்க்கும் பப்பாசிப்பழம் கற்பகதரு பனை தானுண்ட நீரை தலையாலே தரும் தென்னை மணம் வீசும் சந்தனம் தொட்டிலாக கட்டிலாக... மரங்களைப்பற்றிச் சொல்லிக்கொண்டே போனா.



உலகர் தனக்குள் சிரித்துக்கொண்டார்.
கவிஞர் வைரமுத்து சொன்னது போல மக்களை மரம் என்று திட்டாதீர்கள்.

வாழ்நாளில் எத்தனை மரங்களை நாம் நட்டிருக்கிறம்.. என நீண்ட பெருமூச்சு விட்டபடி கேட்டார் முருகேசர்.

உலகு நீங்கள் பள்ளிக்கூடம் வராமலே எத்தனை நாட்கள் மில்க் வைற் நீலசோப் அதிபர் திரு. கனகராசா அவர்களுடன் மரம் நாட்டுவிழாவென்று திருஞ்சிரிப்பியள். பனம் விதைகளை கிளிநொச்சி வன்னிப்பகுதியள்ளை கொண்டுபோய் குடுத்திருப்பியள். அப்ப எத்தினைபேர் நளினம்செய்து சிரிச்சிருப்பினம்.

செல்லடியிலும், ஆட்டிலறி ஆவேசத்திற்கும் தலையிழந்தது தவிர ஏனைய பனைகள் இப்பவும் இருக்கின்றன.

உலகண்ணை! கனடாவிலை மேப்பிள் மரம் அழியப்போகுதாம் என ரி.வி. பார்ப்பதை விட்டு கதைக்கத் தொடங்கினா எம்மைச்சுத்தி என்ன நடக்குதென்று தெரியாமல் பலர் வாழத்தொடங்கிவிட்டனர்.





இலங்கையில் குடியேற்றத் திட்டங்கள் அதாவது தமிழ் மக்கள் குடியேற்றத் திட்டத்தில் கிடைத்த காடுகளை களனிகளாக்கிய காலத்தில் தின்னவேலி இணுவில் பகுதிகளில் பழமரக் கன்றுகள் ஒட்டுமாங்கன்று தோடை எலுமிச்சை பலா மாதுளை அரைநெல்லி கன்றுகள் உற்பத்தியாக்கி விவசாய திணைக்களமூலம் கொள்வனவு செய்யப்பட்டு இலவசமாகவும் மலிவாகவும் வழங்கப்பட்டது. கறுத்தக்கொழும்பான், விலாட், அம்பலவி என்றதும் நாவில்சுவை ஊறுகிறதல்லவா?

ஏ.ஈ. மனோகரனின் யாழ்ப்பாணம் போக ரெடியா? மாம்பழம் தின்ன ஆசையா?
யாழ்ப்பாணம் என்று சொன்னால் தேன்சுவையூறும்... பாடல் காதில் ஒலிக்கிறது.






கனடாவிற்கு மேப்பிள் மரம் மேப்பிள் சிறப்.
யாழ்ப்பாணத்திற்கு கறுத்தக்கொழும்பான்.

நண்பர்கள் உறவினர்கள் பிறந்தநாளுக்கு ஒரு பழமரத்தை அல்லது ஏதாவது ஒரு மரத்தை அன்பளிப்பு செய்யலாமே?

## சொல்லத்தான் நினைக்கிறேன்!

22 ஆவது வருடமாக வெளிவரும் விளம்பரம் வாரம் இருமுறை 1ம் திகதி 15ம் திகதி தவறாது வெளி வருவது வாசகர்களுக்குத் தெரியும்

விளம்பரங்களோடு செய்திகளா அல்லது கட்டுரைகளா விரும்பி எடுப்பவர்களுக்குத்தான் தெரியும்.

21வது ஆண்டு நிறைவு, விளம்பர நிர்வாகம் திட்டமிட்டது போல் குறிப்பிட்ட சில வருடங்களாக புது வருடத்தில் முதலாவது சனிக்கிழமை விளம்பர குடும்பவிழாவாக கலகலகலப்பான முறையில் எழுத்தாளர்கள் அவர்களது குடும்பத்தினர் கொண்டாடுவர். அதுமட்டுமன்றி அளவான கலை நிகழ்ச்சி விளம்பரம் பத்திரிகையில் எதனைச் சேர்க்கலாம் எதனைக் கழிக்கலாம் எனக்கருத்துப் பரிமாற்றங்களும் நடைபெறும்.

எழுத்தாளர்கள் கலைஞர்கள் வாழும்போதே கௌரவிக்கப்படவேண்டும் என்பதற்கிணைய திரு. திருமதி. மகேந்திரனும் அவர்களது பிள்ளைகளும் விளம்பர விநியோக ஆலோசனைக் குழுவினரும் விழாவைச் சிறப்படையச் செய்வதுமட்டுமன்றி புதிய எழுத்தாளர்களையும் இணைத்துக் கொள்கின்றனர்.

இத்தனைக்கும் ராஜா மகேந்திரனது ஆற்றல், தனக்கென வீடு விற்பனைத் துறை இருந்தாலும் விளம்பரம் பத்திரிகையை 22 வருடங்கள் நடத்தி வருவதே. அவருக்கும், இணைந்து எழுதிவரும் எழுத்தாளர்களுக்கும், அதனை திகதி தவறாது வியாபார நிலையங்களிலும் ஆலயம், பொது இடங்களிலும் விநியோகிப்பவர்களும் பாராட்டுக்குரியவர்களே.

சமயம் இலக்கியம் பொருளாதாரம் அரசியல் சுகாதாரம் விளையாட்டு சினிமா கவிதை விஞ்ஞானம் மருத்துவம் நகைச்சுவை அவ்வப்போது நடைபெறும் சம்பவங்களின் பிரதிபலிப்புகள் விடுகள் வாகனங்கள் வாங்குவது விற்பது அதில் ஏற்படும் ஏமாற்றங்கள் சட்ட சம்பந்தமான விடயங்கள் ரசிக்கக்கூடிய முறையில் எழுத்தாளர்களின் எண்ணச்சிதறல்கள் விமர்சனங்கள் விளம்பரத்தில் ஊற்றெடுத்து வருகிறன.

அறிவிப்பு!
விளம்பர 22 வது ஆண்டு விழாவில் பல மேடைகளில் பட்டிமன்றம் கவியரங்கங்களில் பங்குகொள்ளும் பலவருடங்கள் விளம்பரக் குடும்பத்திலொருவரான ராஜ்மீரா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினாரென்பதைத் தவிர நடத்திச் சென்றாரென்றே சொல்லலாம்.

பல மக்கள் கூட்டத்தில் பேசுவதை விட புரியக்கூடிய சிறுகூட்டத்தில் பேசுவதையே நான் விரும்புகிறேன் என ஒரு சில பிரமுகர்கள் பேசுவதை நான் கேட்டிருக்கிறேன். மொழியில் அல்லது இருமொழியில் அறிவிப்பது பிரச்சினையல்ல. ஒரேவேளையில் எல்லாவற்றையும் சொல்லி முடித்துவிடலாம்.

இதனை இங்கே சொல்வதன் காரணம் பல நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து உச்சரிப்புக்கள் கவலைதரக்கூடியதாக இருக்கும் அல்லது அரைவாசிக்குமேல் பாடும்போது தடக்கத்தொடங்கி விடுவார்கள்.



அப்போது சபையில் இருப்பவர்களில் தமிழ்த்தாய் வாழ்த்து (தெரிந்தவர்கள்) சேர்ந்து பாடுவார்கள். சில இடங்களில் தமிழ்த்தாய் வாழ்த்து அறிவித்து அது பாடி முடிந்தபின் சிலர் இருந்துவிடுவார்கள். அதன்பின் கனேடிய கீதம் பாடும்போது திரும்பவும் எழுந்து நிற்பார்கள். அது முடிந்ததும் விழா தொடங்கும் அமளிதுமளிக்குள் மீண்டும் ஒரு அறிவிப்பு வரும் ஒரு நிமிட அமைதி வணக்கத்திற்கு.

வாரா வாரமாக எத்தனை வருடங்கள் நிகழ்ச்சிகளுக்கு போகின்றோம். எம்மை வழிப்படுத்த எமக்கே தெரியவில்லை.

விளம்பர ஆண்டு விழா நிகழ்ச்சி ஆரம்பிக்க கனி மாஸ்ரர் தமிழ்த்தாய் வாழ்த்து பாடும்பொழுது சபையோரில் விரும்பினால் சேர்ந்து பாடலாம் என்றார். பலர் சேர்ந்து பாடினார்கள்.

இவ்விழாவில் ஒவ்வொரு எழுத்தாளர்களையும் மீரா பேச அழைக்கும்பொழுது கனி மாஸ்ரர் அதற்கேற்ப நகைச்சுவை, தத்துவப் பாடல்வரிகளைப் பாடி அழைத்தது கலகலப்பாக மனம் கவரக்கூடியதாகவும் இருந்தது.
இத்தனை நாள் எங்கிருந்தாய் ஐயா!
எத்தனையோ இலைமறை கனிகள் நம்மிடையே உள்ளனர்.

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி.
வாசகர் போற்றிட வாழ்த்திட வாழ்க விளம்பரம்.

பொய் சொன்னாலும் மெய் சொன்னாலும் வாயால் சொல்லிப் பயனில்லை.
மையிலை நனைச்சு பேப்பரில் அடித்தால் மறுத்துப்பேச ஆளில்லை
வியாபாரம் வளர விளம்பரம் செய்யுங்கள்.
விளம்பரம் பத்திரிகை வளர உங்கள் நிறுவன விளம்பர ஆதரவு தாருங்கள்.

## ஞாபகம் இருக்கிறதா?

16. பட்டிப்பொங்கல்
17. எம்.ஜி.ஆர். (கண்டியில்) பிறந்ததினம், சி.வை. தாமோதரம்பிள்ளை நினைவு தினம்
18. குமாரசாமிப்புலவர் (சுண்ணாகம்) பிறந்ததினம், இவரது நினைவுதினம் ஜனவரி 25 1855
19. சீர்காழி கோவிந்தராஜன் பிறந்ததினம்
20. யாழ். உடுவில் இராமநாதன் கல்லூரி ஆரம்பிக்கப்பட்ட நாள். (1922)
21. ஈழத்து பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுதினம் (1989)
22. ஈழத்தின் பன்மொழிப்புலவர் சுவாமி ஞானப்பிரகாசர் நினைவுதினம் (1875)
24. இந்திய சுதந்திரப்போராட்ட வீரர் சுபாஸ் சந்திரபோஸ் பிறந்த தினம்
24. இராமலிங்க அடிகள் ஆன்மீகவாதி (1873) நினைவுதினம்
30. 1948ல் மகாத்மா காந்தி நாதுராம் கோட்சேயினால் சுட்டுக்கொல்லப்பட்டார். (1869-1948)

# இலட்சியம்...

**18ஆம் பக்கத்தொடர்ச்சி**

அமைப்புகளும்தான். இந்த தோட்டத்தை நான் திறந்து வைக்க வேண்டும் என்று என்னை அழைத்தபோது நான் கேட்டது



பணமல்ல, பதிலாக எனக்கு மரக்கன்றுகளை கொடுங்கள். நான் அவற்றை நட்டுக்கொள்கிறேன் என்றேன். நான் கேட்டவுடன் முப்பதாயிரம் மரக்கன்றுகளை தருவதாக கூறினார் தோட்டக்கலை நிபுணர் சரவணன். இவரைப் போன்றவர்களின் உதவியால்தான் நான் இப்படி ஒரு பெரிய காரியத்தை செய்ய முடிகிறது. பத்து லட்சம் மரக்கன்றுகளை நட்டாலும் அதன் பிறகு அவற்றை பராமரித்து கண்காணிக்க முடியுமா என்று கேட்கிறார்கள். நான் 'க்ரீன் கலாம்' என்ற இந்த லட்சிய பயணத்தை தொடங்கிய பிறகு தமிழகம் முழுவதும் இருந்து எனக்கு தொலைபேசி அழைப்புக்கள் குவிந்த வண்ணம் இருகின்றன. அவர்கள் நடப்பட்டுள்ள மரங்களின் பாதுகாப்பை நாங்கள் பார்த்துக்கொள்கிறோம் என்கிறார்கள். ஒரு நடிகன் என்பதற்காக வரும் அழைப்புகள் அல்ல இவை. நல்ல லட்சியத்துக்காக கிடைத்திருக்கும் அங்கீகாரம். 'ஒரு லட்சியத்தை தேர்ந்தெடுங்கள் அதை நோக்கி போராடுங்கள் அந்த லட்சியப் போராட்டத்தில் நீங்கள் செத்துக்கூட விடலாம். ஆனால், உங்கள் லட்சியம் ஒருபோதும் சாகாது' என்று சொன்னார் சுவாமி விவேகாநந்தர். அவரது வார்த்தைகள்தான் எனக்கு இப்போது வேதம். கலாம் அவர்களின் வழிகாட்டல்தான் எனக்கு வேகம்."

ஒரு படத்தில் வில்லனாக நடிக்கிறீர்கள் என கேள்விப்பட்டோம்?

"உண்மைதான். தமிழ், கன்னட மொழிகளில் தயாராகும் 'வழிப்போக்கன்' என்ற படத்தில் வில்லனாக நடிக்கிறேன். இது எனது முதல் வில்லன் வேடமாகும். எனது முதல் கன்னட படமும்கூட. இப்படத்தில் நான் வில்லனாக படம் முழுக்க வருகிறேன். கிளைமாக்சில் எனது வில்லத்தனம் வெளிப்படும். எனக்கு கன்னட மொழி தெரியாது. படப்பிடிப்பில் அதை கற்றுக்கொள்வேன். கன்னடத்தில் டப்பிங் பேசுவேன் என்ற நம்பிக்கை உள்ளது. இது எனக்கு சவாலான படமாக இருக்கும்."

# நூல் வெளியீடு

கடந்த 7.1.2012 சனிக்கிழமையன்று நடராஜா முரளிதரன் எழுதிய 'தமிழ் மக்கள் - நாடு கடந்த அரசியல்' என்ற கட்டுரைத் தொகுப்பு நூல் அறிமுக நிகழ்வு ஸ்காபுரோ சிவிக் சென்ரர் மண்டபத்தில் இடம்பெற்றது. அந்நிகழ்வுக்கு எழுத்தாளர் மெலிஞ்சி முத்தன் தலைமை தாங்கினார். விமர்சன உரைகளை விமர்சகர் வரனும் (மாமூலன்), கவிஞர் சுல்பிகாவும் நிகழ்த்தினார்கள். மற்றும் கவிஞர் செழியன், ஆய்வாளர் குமாரகுலசிங்கம், நூலாசிரியர் ஆகியோரும் உரைகளை நிகழ்த்தியிருந்தனர்.






# கடவுளின் கெஸ்ட்...

20ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பது நம்பிக்கை.

அர்துங்கலில் உள்ளது புனித ஆண்ட்ரூஸ் ∴பரோனா சர்ச். இந்தச் சர்ச்சில்



நடைபெறும் திருவிருந்து இப்பகுதி மக்களிடையே புகழ்பெற்றது. இவ்விருந்தின் பிரபலமான பெயர் அர்துங்கல் பெருநாள். எல்லா மதத்தைச் சேர்ந்த பக்தர்களும் இப்பெருநாளுக்கு திரளாகக் கூடுவார்கள். புனித செபஸ்டியனுக்கான இந்தப் பெருவிருந்து பயபக்தியுடன் பத்து நாட்கள் நடத்தப்படுகிறது. பத்தாம் நாள் நடக்கும் ஊர்வலத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கெடுக்கிறார்கள். இந்த ஊர்வலத்தை கழுகுகள் வானத்தில் வட்டமிட்டு வரவேற்கும் காட்சி வருடம் தவறாமல் நடைபெறுகிறது என்கிறார்கள். புனித செபஸ்டியரின் புனித ஆற்றலே இவ்வாறு கழுகுகள் வரவேற்கும் நிகழ்வுக்குக் காரணம் என்பது பக்தர்களின் நம்பிக்கை. மனித உடல், உறுப்புகள், வில், அம்பு ஆகியவற்றின் தங்க வெள்ளி உருக்கள் நேர்த்திக்கடனாக செலுத்தப்படுகிறது.

நேரம் இருந்தால், இவை தவிர அர்த்துங்கல் புனித செபாஸ்டியான் சர்ச், சம்பங்குளம் சர்ச், குன்னத்துமலை மகாதேவன் கோவில் ஆகியவற்றுக்கும் சென்று வரலாம்.

## ஆலப்புழா படகு சுற்றுலாக்கள்:

உப்பங்கழி கிராமிய சுற்றுலா: இப்படகுச் சுற்றுலாவில் கேரள கிராம மக்களின் இயல்பான வாழ்க்கையை நெருக்கமாகக் காணலாம். வெளியுலக பாதிப்பு அவ்வளவு இல்லாத எளிய வாழ்க்கை. சுற்றுலாப் படகு திருக் மறுக்கான கால்வாய்களிலும் வனபான நீர் வழிகளிலும் செல்லும்போது விவரிக்க முடியாத மகிழ்ச்சி ஆட்கொள்ளும். நாட்டுப் படகு சவாரி. நேரம்: காலை 9 மணி, மதியம் 2 மணி. கட்டணம்: நபருக்கு ரூ. 300.

தென்மலா ஏரி மகிழ்வுப் படகு சுற்றுலா: கொல்லத்திலிருந்து ஆலப்புழா - ஆலப்புழாவிலிருந்து கொல்லம் வரை உள்ள மறக்க முடியாத மகிழ்வுப் படகுப் பயணம் இது. புறப்படும் நேரம்: காலை. 10.30 மணி. கட்டணம்: வயது வந்தோருக்கு ரூ150, 12 வயதுக்கு கீழ்பட்ட குழந்தைகளுக்கு ரூ.100. மாணவர் அடையாள அட்டை வைத்திருப்பவர்களுக்கும் ரூ.100 தான்.

குட்டநாடு படகுச் சுற்றுலா: ஆலப்புழா - குமாரகம் - ஆலப்புழா என சுற்றி வரும் பயணம். படகுத்துறையில் தொடங்கும் இப்பயணத்துக்கு கட்டணம்: நபருக்கு ரூ.150. குறைந்த பட்சம் 10 நபர் சேர்ந்தால் படகு புறப்படும்.

"Let me help you make the right choice"
Schuren Sriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393

RE/MAX Vision Realty Inc. Brokerage.
Each Office Is Independently Owned and Operated
Office: (416) 321-2228
Email: anton.jeeva@gmail.com
Web: AntonJeeva.com
2210 Markham Rd., Suite 1, Toronto, ON M1B 5V6
2007 - 2010
Anton Jeeva Arulappu B.Eng
(416) 575-5055
Real Estate / Principal Mortgage Broker
AWARD WINNING REALTOR
Specialized in bank sale homes
Tridel's Preconstruction condos in downtown avaolable
Mortgage can be arranged as low as 2.99 % ( Closed)
279,900 — 20 Brookmill Blvd. Unit 105, End Unit, like semi — Warden/Finch, Bedrooms: 3 LIKE BRAND NEW, Washrooms: 2, Totally Renovated
$29,900 — Business Only — Well Known Tamil Grocery Store in Scarborough
$719,000 — income potential, 2 Basement Apt — Mccowan & Denison, Bedrooms: 4+2, Washrooms: 6, Renovated ($50K) Like Model Home
759,900 — 1 Year Old — 9th Line / 14th Ave, Bedrooms: 4, Washrooms: 4, Over 3000 sf, Opposite to WALMART
$199,900 — Warden/Finch, Bedrooms: 3, Washrooms: 2, 2050 Bridletowne Cir, Renovated
$1,170,000 — Lot Size: 75 x 220 ft, PRIME LOCATION IN MARKHAM — Bedrooms: 4+1, Washrooms: 6, Basement: Fin W/O, 3 Garages/ Over 5000 sqft

Kantha Property Management Group Inc.
KPM Group Inc.
Personal and Business Loans
Line of Credits
Business Setup Consultancy
1st and 2nd Mortgages
Residential and Commercial Leasing
Investment Properties
Property Management Services
Bad Credit Solutions
Bankruptcy
Consumer Proposals
T: 416-214-6161
F: 416-465-3535
3015 Kennedy Road, Suite 205, Toronto, ON M1V 1E7
www.KPMInvestment.com, kantha@KPMInvestment.com

HARD WOOD
$250 Use for the stairs
Oak Hardwoods Select & Better $3.99
Laminate 12.3 - $1.29
Hardwood Installation - $1.50
123 - 4800 Sheppared Ave. East.
Scarborough
Contact: 416.830.3932
We do custom stairs

NuTek COMPUTERS
www.nuTechComputer.com
Virus Removal
Internet Sharing
Computer Tune Up
Computer Repair
அனைத்து கணணி திருத்த வேலைகளும் உங்கள் வீட்டில் வந்து திருத்தி தரப்படும்
416.587.1619
techsupport@nutechcomputer.com
Raj Paramasamy
A+ Certified PC Technician
Microsoft Certified Professional
SALES - SERVICE - UPGRADES